



# தூய சுடர் வானொளியே....

---

## 1

'அன்பு இல்லத்'தின் வாயில் அருகே, உட்புறமாக, சற்று உயரத்தில், ஒரு தொட்டில் கட்டப்பட்டிருக்கும்.

அன்று அந்தத் தொட்டிலில் ஒரு குழந்தை கிடத்தப்பட்டிருந்ததாக வசுந்தரா ஆசிரமத்தினுள் அடியெடுத்து வைக்கும் போதே அனுக்குட்டி ஓடி வந்து அறிவித்தாள். ''ரொம்...ப்ப குட்...ட்டிப், பாப்பா, வசுக்கா! 'ஊஊ'ன்னு ஒரே அழுகை. என் பொம்மையைக் கொடுத்தாக்கூட அதுக்கு வாங்கிக்கவே தெரியலை. சும்மா அழுது'' என்று பெரிய, வட்டக் கருவிழிகளை உருட்டியபடியே கூறியது அந்த நாலு வயதுக் குழந்தை!

இதே அனு நாலு ஆண்டுகளுக்கு முன், ஆசிரமத்தையே கிடுகிடுக்க வைத்ததை நினைவு கூர்கையில் வசுந்தராவுக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு, ''அப்ப...டியா, கண்ணு! இப்போ அழுகிற சத்தம் கேட்கலியே! பாப்பா, நல்ல பெண்...பிள்... நல்ல

குழந்தையா ஆயிட்டுது போலே இருக்கே! வா, போய்ப் பார்த்திட்டு வரலாம்.'' என்று சிறுமியை உடன் அழைத்துச் சென்றாள் வசுந்தரா.

அனு அறிவித்தது போலவே குழந்தைக்கு வ்ட்டமான பெரிய கருவிழிகள் தான்! கண்களை இடுக்கிக் கத்துவதும், அந்தச் சத்தத்தில் தானே பயம் கொண்டு விழிகளை அகல விழித்து மிரள்வதுமாகக் கிடந்தது அந்தப் பச்சிளங்குழந்தை.

இந்த மாதிரி ஒரு சிசுவை விட்டு விட்டுப் பிரிந்து செல்ல ஒரு தாயால் எப்படி முடியும்? இப்படி அழுமா, இப்படிப் பயப்படுமா என்று எண்ணிக் கவலைப் படாமல் எப்படி விட்டு,விட்டுப் போய் விட முடிகிறது?

அல்லது, இதைவிடப் பெரும் கவலையைத் தவிர்ப்ப தற்காக இப்படிச் செய்கிறார்களோ?

எப்படி இருந்தாலும் இந்த அவலங்களின் பின்னணி யில் ஓர் ஆண்மகனின் பொறுப்பற்ற மிருகத்தனம் இருப்பது மட்டும் நிச்சயப்படுத்தப்பட்டு விட்ட உண்மை.

அவசர வேகத்தில் பிள்ளையைக் கொடுத்தவன், அதைப் பாதுகாத்து, பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தால் இப்படி யாரும் அறியாமல் விட்டுப்போக ஒரு தாயின் மனம் இடம் தருமா?

காதல் காதல் என்று பெண்ணின் பின்னேயே சுற்றுவ தும் கருவுற்று விட்டாள் என்று அறிந்த அடுத்த வினாடியில் இருந்து ஆளே காணாமல் போய் விடுவது! புதுப் பூவாய் இன்னொன்று தேடலாமில்லையா? அல்லது ஏற்கெனவே திருமணம் ஆனவனாக இருப்பான் அல்லது பணத்திற்காக இன்னொருத்தியை மணக்க ஏற்பாடு செய்து கொண்டே



அதே சமயம் இவள் மேல் ஆசையையும் விடவும் பிடிக்கா மல் இவளோடும் பழகிக் கொண்டு இருந்திருப்பான். வயிற் றில் பிள்ளை வந்த பின் பணமா காதலா என்று சீர் தூக்கிப் பார்க்கும்போது பணத்தட்டு தாழ்ந்திருக்கும்! அப்புற மென்ன? கைகழுவி விட வேண்டியதுதானே?

இதில் வசுந்தராவை மிகவும் பாதிப்பது என்னவென் றால், அந்தக் கிராதகன் கைக்ழுவுவது அவனுடைய சொந்தப் பிள்ளையையும் சேர்த்துதானே என்பதுதான். அவனால் உரு வாக்கப்பட்ட அவனுடைய குழந்தையை, அது எக்கேடும் கெட்டுப் போகட்டும் என்று கைவிடுகிறவன் யாரிடம் எப் படி உண்மை நேசம் கொள்ள முடியும்? தாயை, தாரத்தை, தங்கையை, தாய் நாட்டை விற்கவும் தயங்க மாட்டானே! இவன்களை எல்லாம் நடுத்தெருவில் நிறுத்தி, நாலுபேர் பார்க்கச் சுட்டுக் கொல்ல வேண்டும்! அப்போது கூடச் சீக்கி ரம் அதிக நேர வேதனை இன்றி விரைவிலே செத்து விடு வான். அதை விட அவனால் ஒரு பெண் அனுபவிக்கிற வேதனையை எண்ணிப் பார்க்கும்போது, அவனைக் கல் லால் அடித்துக் கொல்லுவதே நியாயம். ஏனெனில் வெறி நாயை விடக் கேவலமானவன் அவன்!

''என்னக்கா? நான் ஏதும் தப்பு செய்தேனா?'' என்று, குழந்தையைப் பார்த்துக் கொள்ளும் பெண் கவலையுடன் கேட்கவும் வசுந்தரா, அவசரமாக முக பாவனையைச் சரிப்ப டுத்திக் கொண்டாள்.

''ஒன்றுமில்லை, ஆனந்தா, காலையிலிருந்து ஒரே தலைவலி!'' என்று சமாளித்து விட்டு, ''ரொம்பவும் சின்னக் குழந்தை; தலை நிற்காது. அதனால் தலைக்குக் கீழே இப்படி கை கொடுத்துத் தூக்கு,'' என்று கற்றுக் கொடுத்து விட்டு அலுவல் அறைக்குத் திரும்பினாள்.

இத்தோடு எத்தனை முறை ஆயிற்று. இன்னமும் இந்த ஆத்திரத்தை அடக்க முடியவில்லையே! முகமறியாத எந்தெந்தப் பெண்ணுக்கோ நடந்த அநியாயம் எல்லாம் தனக்கே நேர்ந்தது போல் நெஞ்சு கொதிப்பது எப்போது நிற்கும்?

ஒரு வேளை, அந்த முகமறியாத பெண்ணுக்கு நேர்ந்திருக்கக் கூடியது போன்றதோர் அவலம் அவளது வாழ்க்கையையும் பாதித்து திசை மாற்றி விட்டதால் இவ்வாறு சீற்றம் கொள்வதைக் கட்டுப்படுத்த முடியவில்லையோ?

ஆனால் அதை முகத்தில் காட்டுவதையேனும் கட்டுப்படுத்திக் கொள்ளலாமில்லையா? கட்டுப்படுத்திக் கொண்டு தான் ஆக வேண்டும்.

இந்தப் பெண் சிறியவள், அலுவல் நிலையிலும், வசந்தராவை விட பல படிகள் கீழே இருப்பவள், வசந்தராவின் முகம் மாறியதைக் கண்டும் அதன் காரணமாக அவள் இட்டுக் கட்டியதை ஒத்துக் கொண்டு பேசாமல் இருந்து விட்டாள்.

மற்றவர்கள் அப்படி இருப்பார்களா? தொணதொணவென்று எதையேனும் துருவினால் என்ன ஆகும்? ஆண்டுக் கணக்காக முயன்று உருவாக்கி வைத்திருக்கும் அமைதி பறந்து விடும்.

எனவே, இனி முக பாவனைகளில் கவனத்தோடு இருக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு வேலையில் ஈடுபட்டாள் அவள்.

வேலையும் நிறையவே இருந்ததால் விரைவிலே எல்லாம் சரியாகிப் போயிற்று.



முதலில், வசந்தரா இந்த ஆசிரமத்துக்கு வெறுமனே ஒரு நாள் இலவசபணி செய்யத்தான் வந்தாள். அதுவும் கூடத் தொண்டு புரியும் நோக்கத்தோடு அல்ல. வேண்டாத நினைவுகளில் உழன்று, தன்னம்பிக்கையை அடியோடு அழித்து தாழ்வுணர்ச்சியைப் பூதமாய் வளர்த்துக் கொண்டிருந்த மனதை வேறு திசையில் திருப்பவும் குறைந்தது ஒரு நாளேனும் அந்த நினைவுகளிலிருந்து தப்பும் முயற்சியாய்த் தான் இந்த அன்பு இல்லத்துக்கு அவள் வந்தது.

அன்றைக்கு அவளுக்கு இடப்பட்ட பணி, பச்சிளம் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வது. முதலில் தொட்டிலில் அசுத்தம் செய்து விட்ட குழந்தையைக் கொஞ்சம் அருவருப்புடன்தான் தூக்கிச் சுத்தம் செய்தாள். ஆனால், உடனேயே அந்தக் குழந்தை அவளைப் பார்த்துப் பொக்கை வாய் திறந்து சிரிக்கவும், அருவருப்பு போன இடம் தெரியாமல் மறைந்து விட, முகத்தோடு மனமும் சேர்ந்து மலர்ந்தது.

அடுத்த நாளும் சென்றாள். அப்புறம் அதற்கடுத்த நாள்... அப்புறம்... என்று தொடர்ந்து சென்றாள். அவளது தகுதிகளையும் ஆர்வத்தையும் அறிந்து கொண்ட நிர்வாகி, தன் முதலாளியிடம் கேட்டுக் கொண்டு வசந்தராவுக்கு நிரந்தர வேலை கொடுத்தார்.

பிரமாதமான சம்பளம் என்று ஒன்றும் கிடையாது. ஆனால் அப்படித் தரப்பட்ட சம்பளத்தையும் அவள் இல்லத்துக்கே நன்கொடையாகக் கொடுத்து விட்டு, தொடர்ந்து இலவசமாகவே பணி புரிந்தாள்.

நங்கூரம் இல்லாத கப்பல் போல, நிலையற்று அலை பாய்ந்து கொண்டிருந்த வாழ்வுக்கு ஓர் அர்த்தம் இருப்பது போல உணர்ந்து மீண்டும் வசந்தரா தலைநிமிர்ந்தாள்.

அவளுடைய பெற்றோர், அண்ணன், அண்ணி... எல்லோருமே சற்று ஆசுவாசமாய் மூச்சு விட்டார்கள்!

அன்பு இல்லத்தின் மாதாந்திரக் கணக்கு வழக்குகளை எழுதி முடித்து, மீண்டும் ஒரு தரம் சரிபார்த்தவளுக்கு, அதன் புரவலராக இருந்து, ஆசிரமத்தை நடத்தி வரும் பெரியவர் சிவநேசரிடம் மிகுந்த மரியாதை உண்டாயிற்று.

அவரால் இல்லத்துக்கு அளிக்கப்பட்டிருந்த சில சொத்துகளின் வருமானமும், சில நன்கொடைகளும் போக இல்லத்தை நடத்துவதற்கு அதிகப் படியாகத் தேவைப்பட்ட பணம் முழுவதையும் கூட அவரே கொடுத்து வந்தார். அதுவும் ஒரு கணிசமான தொகையை என்ற போதும், புதிதாக யாரையும் சேர்க்க வேண்டாம் என்றோ, ஏற்கெனவே சேர்க்கப்பட்டிருந்த பிள்ளைகளின் செலவுகளைக் குறைக்க வேண்டும் என்றோ அவர் சொன்னதே இல்லை!...

அவர் செல்வந்தராக இருக்கலாம். ஆனால் அவரது செல்வத்தை இப்படியெல்லாம் செலவழித்தாக வேண்டிய கட்டாயம் எதுவும் இல்லையே!... இயற்கையாய் அமைந்து விட்ட உதாரகுணமே அவரை இப்படி அள்ளிக் கொடுக்கச் செய்கிறது.

''வசுந்தரா, இந்தப் பையனை நீதான் சமாளித்து அனுப்பி வைக்க வேண்டும் போல தெரிகிறது. என்ன சொன்னாலும் இங்கிருந்து போகமாட்டேன் என்று அடம் பிடிக்கிறான்... பார்த்தால் கொஞ்சம் பாவமாகவும் இருக்கிறது...'' என்று இழுத்தபடி வந்து நின்றாள் யசோதா.

வசுந்தராவை விடவும் யசோதா நாலைந்து ஆண்டுகள் பெரியவள். ஆனால் கல்வித் தகுதியில் மிகவும் குறைவு.



ரொம்பவும் சிறு வயதிலேயே திருமணமாகி, ஊர் மேயும் கணவனால் விரட்டியடிக்கப்பட்டவள். தற்கொலைக்கு முயன்றவளை யாரோ காப்பாற்றி, இங்கே கொண்டு வந்து விட்டனர். பத்தாண்டுகளாக இங்கே இருக்கிறாள். எந்த வேலையும் பிரியமாகவே ஏற்றுச் செய்வாள். சிற்றெறும்பு போல ஓயாத உழைப்பாளி. ''இங்கே வந்து தான் சிரிக்கிறேன்'' என்பாள்! முக்கியமான விவரம், ஊர்மேயும் கணவன், 'வா உன்னையும் வைத்துக் கொள்கிறேன்' என்றபோது மறுத்து தனக்கும் முதுகெலும்பு இருப்பதைக் காட்டியவள்! எல்லோருக்கும் அவளிடம் அன்பும் பரிவும் உண்டு.

பிரியமாய் முறுவலித்து அவளிடம் இரண்டு வார்த்தை பேசிவிட்டு, அந்த அடம் பிடிக்கிற பையனை அழைத்து வரச் சொன்னாள் வசுந்தரா.

''இதோ, இவர்கள்தான் இங்கே இல்லத்தில் யாரையும் சேர்ப்பது பற்றி முடிவு செய்ய வேண்டும். அவர்களிடம் சொல்லு உன் கதையை.'' என்று அந்தச் சிறுவனைக் கொண்டு வந்து விட்டு விட்டு வசுந்தராவிடம் புன்னகைத்து விட்டுச் சென்றாள் யசோதா.

லேசாகத் தலையைப் பின்னே தள்ளிக் கீழ்க்கண்ணால் பெரிய மனிதன் போல் தோரணையாய் தன்னை எடை போட்ட சிறுவனைக் காண்கையில் வசுந்தராவுக்கு உள்ளூரச் சிரிப்பு வந்தது.

ஒன்பது அல்லது பத்து வயது இருக்கலாம் அவனுக்கு. நடு நிறம். நேரான நாசியும் அளவான உதடுகளும் அந்த வயதிலும் பளிச்சென்று தெரிந்தன. பிடிவாதத்தைக் காட்டும் அழுத்தமான முகவாய், சுத்தமான விரல்கள், ஒழுங்காக வெட்டப்பட்டிருந்த நகங்கள்.

அரைக்கைச் சட்டையும், 'ஷார்ட்சும் அங்கங்கே கிழிந்திருந்தாலும் அவன் வசதியுள்ள வீட்டுப் பையனே!

எப்போதும் 'சாக்ஸ்' அணிந்து பழக்கப்பட்டவன் என்பதைக் கணுக்காலுக்கு சற்று மேல்வரை தெரிந்த சற்று அதிகப்படியான வெளுப்பு அறிவிக்க எப்போதும் அணிந்திருக்கும் கை கடிகாரம் சமீபத்தில்தான் கழற்றப்பட்டிருக்க வேண்டும் என்பதை இடக்கை மணிக்கட்டில் இருந்த அழுத்தம் காட்டிக் கொடுத்தது.

மனதில் ஓடிய எண்ணங்களைக் காட்டிக் கொள்ளாமல், ''ஹல்லோ, என் பெயர் வசுந்தரா. உன் பெயர்?'' என்று ஒரு வெளிப்படையான புன்னகையுடன் அவனைக் கேட்டாள்.

பதிலாக மலர்ந்த முறுவலுடன், ''நான் பூ... '' என்று தொடங்கி விட்டு, உடனே நிறுத்தி, தொண்டையில் விழுங்கி, ''வந்து... என் பெயர் பி... பிரபு. ஆமாம் பிரபுதான் என் பெயர்'' என்று தெளிவுப்படுத்தினான் சிறுவன்.

'பிரபு'வாமா? மீண்டும் வசுந்தராவுக்குச் சிரிப்பு வந்தது. பூ... பூபதி? பூவராகன்? அல்லது பூவேந்திரன்? பூவில் தொடங்கும் இவனது முழுப்பெயர் என்னவாக இருக்கக் கூடும்?

''ஓகே பிரபு. உள்ளே வந்து உட்கார்'' என்று முகம் மாறாமல் அழைத்தாள் அவள்.

சற்று தயங்கி விட்டு, பிடிவாதமான நடையுடன் உள்ளே வந்து வசுந்தராவுக்கு எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டான் அவன்.

''இப்போது சொல், என்ன விஷயமாக இங்கே வந்தாய்?''



லேசாக புருவம் சுளித்து, ''அந்தம்மா உங்களிடம் ஒன்...றுமே சொல்லவில்லையா?'' என்று சந்தேகமாய்க் கேட்டான் பையன்.

''தேவை உனக்குத்தானே? உன் தேவை என்னவென்று இன்னொரு தரம் சொல்ல உன்னால் முடியாதா?''

கேலிப் பார்வையுடன் வசுந்தரா வினவவும் சட்டெனப் பையனின் முகம் கன்றியது.

உடனே நிமிர்ந்து, ''சொல்ல முடியாது என்று நான் சொன்னேனா? அவர்கள் ஒரு தரம் சொல்லியிருந்தால் அனாவசியமாக இன்னொரு தடவை சொல்லி நேரத்தை வீணாக்கக் கூடாது என்று நினைத்தேன்...'' என்று சமாளித்து விட்டு...

''எனக்கு இந்த ஆசிரமத்தில் இடம் வேண்டும்,'' என்றான் சிறுவன் தெளிவாக.

ஓகோ! வீட்டில் கோபித்துக் கொண்டு வந்து விட்டாரா துரை? என்று உள்ளூர நகைத்தபடி, ''ஏன்?'' என்று சுருக்கமாக வினவினாள் வசுந்தரா.

பொறுமையிழந்து, ''அனாதை ஆசிரமத்தில் ஏன் இடம் கேட்பார்களாம்? என்னைப் பார்த்துக் கொள்ளும் யாரும் இல்லாத அனாதை நான் என்பதால் தான்'' என்று படபடத்தான் பையன்!

## 2

விதிவசமாய் யாருமற்றுப் போவது வேறு விதம். அதை யாரும் தவிர்க்க முடியாது. ஆனால் எல்லாம் இருந்தும், ஒன்றுமே இல்லை என்று ஒருவன் இங்கு வந்து நிற்பது என்றால்? அதுவும் இந்தச் சிறு வயதில்? மனதில் எவ்வளவு வருத்தம் இருந்தால், தனக்கு யாரும் இல்லை என்று சொல்லத் தோன்றும்.

வசுந்தராவின் உள்ளம் உருகிப் போயிற்று.

ஆனால் அதையும் அவள் வெளியே காட்டிக் கொள்ளவில்லை. ஏனெனில், ஏதோ வேதனையில் பொய் மேல் பொய்யாக புனைந்துரைக்கும் இந்தச் சிறுவனைச் சாமாதானப்படுத்தி அவன் வீட்டாருடன் சேர்த்து வைக்க வேண்டுமே. உருக்கத்தை வெளிக்காட்டினால் அந்தக் காரியம் கெட்டு விடுமே!.

''ரொம்பவும் கோபப்படுகிறாயேப்பா, பூ...வந்து உன் பெயர் பிரபு இல்லை?...பிரபு, இந்த இடத்தின் பெயரே 'அன்பு இல்லம்'. உன்னைப் போல ஆத்திரக்காரனை இங்கே எப்படிச் சேர்ப்பார்கள் சொல்லு?'' என்று அவள் இயல்பான குரலில் இயம்பவும், பையன் முகம் அப்படியே விழுந்து விட்டது.

''ஓ!'' என்று ஒரு கணம் பேந்த விழித்தவன், விரைவிலேயே பெருமுயற்சி செய்து சமாளித்து,'அய்யோ சாரி, ஆன்ட்டி... இல்லை இல்லை, ஆன்டியில்லை, அக்கா, நீங்கள்தான் சின்...னவர்களாய் இருக்கிறீர்களே.. அது வந்து அக்கா, முதலில் அந்த ஆன்ட்டியிடம் இதையே திருப்பித் திருப்பிச் சொல்லிப் போரடித்துப் போயிருந்ததா? நீங்களும் அதே கேள்வியைக் கேட்டதும் கொஞ்...ஞ்சம் கோபமாய் பேசி...மெய்யாகவும் உங்கள் மேல் எனக்குக் கோபமே கிடையாது,அக்கா. அக்கா, ப்ளீஸ் அக்கா! நீங்க மட்டும் இங்கே எனக்கு இடம் தரவில்லை என்றால், அப்புறம் நான் நடுத்தெருவில் நின்று பிச்சை எடுக்க வேண்டியதுதான்:'' என்று சோகமாய்ச் சொன்னான்.



மத்தியில் முடிச்சோடு புருவங்களை உயரத் தூக்கி, சிவந்த கண்களோடு (வருமுன்பே கசக்கிக் கொண்டு வந்திருப்பானோ) உதட்டோரங்களைக் கீழ் நோக்கி வளைத்து நாடக மேடை சோகத்தை அப்படியே முகத்தில் காட்டிப் பரிதாபமாக விழித்தபடி அவன் நோக்கவும், சிரிப்பை அடக்க வசுந்தரா அரும்பாடுபட்டுப் போனாள்.

''ஓகோ! அதுதானா விஷயம்? சரி சரி. பரவாயில்லை, இப்போது உன்னைப் பற்றிய விவரங்களைச் சொல்லு. உன் வயது என்ன?''

''எட்டு''

அவள் நினைத்ததை விடவும் வளமான குடும்பத்தவனாக இருக்க வேண்டும். எட்டு வயதிற்கு அதிகமாகவே வளர்ந்திருக்கிறானே!

''என்ன படிக்கிறாய்?''

''மூன்றாம் வகுப்பு?''

''அம்மா பெயர் என்ன?''

''கருணா'' என்று சொல்லும் போதே அவன் முகம் வாடியது.

''உன் அம்மா இப்போது எங்கே?''

தலையைச் சரித்து அவளை ஒரு பார்வை பார்த்து விட்டு, ''வேறே எங்கே இருப்பார்கள்?. மேலேதான். நான் தான் பிறக்கும் போதே அவர்களை முழுங்கி வாயில் போட்டுக் கொண்டு விட்டேனே!'' என்றான் சிறுவன் சிறு வெறுப்புடன்.

''ஓ! சரிப்பா. அப்பா பெயர் என்னப்பா?'' என்று சற்றுக் கனிவான குரலில் வசுந்தரா வினவினாள்.

புருவங்களைப் பெரிதாக நெரித்து,''தெரியாது; தெரியாது; தெரியாதுட்... '' என்று ஆவேசமான குரலில் அவன் மொழிந்தது, அப்போதைய 'ஹிட்' படம் ஒன்றின் கதாநாயகனை அவளுக்கு நினைவூட்டியது. 'தெரியாதுடா' என்று ஹீரோவின் வசனம் முடிந்ததாக அவளுக்கு ஞாபகம். அதையே தொடங்கி விட்டு,எதிரே இருப்பவள்'டா' அல்ல 'டீ' என்பதை உணர்ந்து, அந்த டீயையும் சொல்ல மனமற்று இடையிலேயே விட்டிருக்கிறான்.

சிறுவனின் தோற்றத்தை மீண்டும் உள்ளூரக் குறிப்பெடுத்தபடி ''ம்ம்... உன்னைப் பார்த்துக் கொள்ள இப்போது யாரும் இல்லை என்றாய்...'' என்று இழுத்தாள் அவள்.

''ஆமாம்...ஆமாம்.யா..ருமே இல்லையக்கா!'' என்று சோகம் காட்டினான் சிறுவன்.

''அப்படியானால் இதுவரை உன்னை யார் பார்த்துக் கொண்டார்கள்?''என்று மேஜை மீதிருந்த பேப்பர் வெயிட்டை உருட்டியபடி அவ்வளவாக அக்கறை காட்டாத குரலில் கேட்டாள் அவள்.



சற்றுத் திகைத்துவிட்டு, ''ஏன்? என்னை நானேதான் பார்த்துக் கொண்டேன்.'' என்று தோரணையுடனேயே பதில் சொன்னான் சிறுவன்.

''பரவாயில்லையே! கெட்டிக்காரன்தான்! ஆனால் இவ்வளவு நாள்,,கெட்டிக்காரத்தனமாகத் தன்னைத்தானே பார்த்துக் கொண்டவனுக்கு இப்போது மட்டும் இந்த ஆசிரமம் எதற்கு? முன்போலவே உன்னை நீயே பார்த்துக் கொள்ள வேண்டியதுதானே?'' என்று வசுந்தரா வாழைப்பழத்தில், ஊசி இறக்கி விடவும், சிறுவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

பரக்கப் பரக்க விழித்துப் பலவாறு யோசித்தும் இதற்குச் சரியான பதிலாக என்ன கூறுவது என்று அந்தப் பிள்ளை மனதுக்குப் பிடிபடவில்லை போலும்; கண்களில் மெய்யாகவே நீர் கட்டி விட்டது. ''பா.. பாருங்கள்,அக்கா! எனக்கு.. எனக்கு மட்டும் நீங்கள் இங்கே இடம் கொடுக்கவில்லை என்றால்... என்றால்,'' என்று தடுமாறியவன், திடுமென் ஓர் ஐடியா கிடைத்தது போல, நிமிர்ந்து,''அப்புறம் நான் இந்த ஆசிரமத்து வாசலிலேயே அமர்ந்து சத்தியாயகிரகம் செய்வேன்... காந்தி மாதிரி,''என்று குரலில் திடத்துடன் முடித்தான்.

காந்தி மாதிரியா? ஒரு நாள் பட்டினி தாங்குவானா? பெரிய ஆள் மாதிரிக் காந்தியை மேற்கோள் காட்டுகிறானே!. சரியான அழும்புக்காரன்தான்! என்று எண்ணிய போதும், தன்னை மீறி அவனிடம் ஈர்க்கப்பட்டவளாய், மீண்டும் சிறுவனை வசுந்தரா ஆராய்ந்தாள்.

இவன் அணிந்திருப்பது பள்ளிச் சீருடை. துணியின் தரத்தைப் பார்த்தால் பள்ளியும் பணக்காரப் பள்ளியாகத்

தான் இருக்க வேண்டும்! பள்ளியின் மோனோகிராம் தைத்திருந்த இடம் வேண்டுமென்றே கிழிக்கப்பட்டிருந்தது என்று ஊகித்தாள். ஒரு பெருமூச்சு விட்டு, ''ரொம்பவும் மிரட்டுகிறாய்! என்ன செய்வது? இல்லத்தில் உன்னைச் சேர்த்துக் கொள்ளச் சொல்லுகிறேன். இன்னொரு விஷயம். இங்கெல்லாம் இந்த மாதிரிக் கிழிந்த அழுக்குத் துணியெல்லாம் யாரும் அணிவது இல்லை. இப்படி அழுக்காகவும் யாரையும் இருக்க விடுவது இல்லை. நீ முதலில் பார்த்த ஆன்ட்டியிடம் சொல்கிறேன். அவர்களோடு போய், இந்த உடையைத் துவைக்கப் போட்டுவிட்டு, அவர்கள் தரும் இந்த இல்லத்து உடைகளை அணிந்து கொள்'' என்று கூறி, யசோதாவை அழைத்து விஷயத்தை உரைத்து, அறை வாயில் வரை கூடச் சென்று வாய்த்த ஒரே தருணத்தில் சிறுவன் அறியாமல் யசோதாவின் காதில் ஒன்று ஓதி, அனுப்பி வைத்தாள்.

அவள் அதிக நேரம் காத்திருக்க நேராமல் விரைவிலேயே பிரபுவின் துணிமணிகள் அவளிடம் வந்து சேர்ந்தன.

சட்டைப் பைகளில் துழாவிய போது உருப்படியாக ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனால் சற்று வித்தியாசமான சலவைக் குறி, சட்டை, பனியன், கால் சட்டை, ஜட்டி அனைத்திலும் இருக்கவும், அவன் பயின்ற பள்ளிக்கு டெலிபோன் செய்து, அங்கே முக்கியப் பொறுப்பு வகிக்கும் 'சிஸ்டர்' ஒருவருடன் பேசினாள். இந்த யூனிபார்மின் நிறத்தையும், சிலுவைக் குறியையும் பற்றிக் கூறியதும் அவளுக்கு வேண்டிய விவரம் கிடைத்து விட, மீண்டும் சிறுவனை வரவழைத்தாள்.

நினைத்தது நிறைவேறி விட்ட மகிழ்ச்சியில் பையனின் கண்களில் பிரகாசம் கூடியிருந்தது. ஆர்வத்துடன் சுற்றுப்புறச் சூழ்நிலையை உள்ளூரப் படம் பிடித்துக் கொண்டிருந்தான். துடிப்பான பையன்!



''என்ன, பூ...பிரபு, இங்குள்ள சீருடை எப்படி இருக்கிறது?'' என்று இலகுவாகவே வசுந்தரா தொடங்கினாள்.

''கொஞ்....சம் தொள தொள...'' என்று கையால் சட்டையை இழுத்துக் காட்டிச் சிறுவன் சிரித்தான்.

கூடச் சேர்ந்து முறுவலித்து விட்டு, ''இங்கெல்லாம் அப்படித்தான். மொத்தமாக ஒவ்வொரு அளவில் தைத்து விடுவது. இறுக்கமாகத் தைத்தால் சீக்கிரம் கிழிந்து விடும் என்று கொஞ்சம் தொள தொளப்பாகவும்தான் தைப்பார்கள். அதிலும் நீ வயதுக்குச் சற்று உயரம் அதிகமாய் இருப்பதால் அடுத்த சைஸ் கொடுக்கச் சொன்னேன்...'' என்றவள் ஒரு கணம் பேச்சை நிறுத்தி, அவனை நேராக நோக்கி,''இது போல ஏழைப் பள்ளிகளில் எல்லாம், குன்னூர் 'அல்ஃபோன்ஸ்' பள்ளி மாதிரி தனித்தனியே அளவெடுத்து தைக்க முடியுமா?'' என்று நிதானமாகக் கேட்டாள்.

எதிர்பார்த்தது போலவே, பிள்ளை அதிர்ந்து முகம் வெளுத்துப் போனான்.

திகைத்து விழித்தவனிடம், ''என்ன, இப்போதாவது உன் உண்மைப் பெயர், மற்ற விவரங்கள் எல்லாம் என்னிடம் சொல்லலாமில்லையா?'' என்று சிறு புன்னகையுடன் இதமான குரலில் வினவினாள் வசுந்தரா.

முகத்தில் மீண்டும் பிடிவாதம் பரவ, ''நான்தான் ஏற்கெனவே சொல்லி விட்டேனே. அதுதான் நிஜம்! நிஜம்!'' என்றான் சிறுவன்.

எப்படி ஒரே நிலையில் நிற்கிறான் பாரேன்! என்று சிலாகித்த மனதை மறைத்து, ''இதோ பார்... நீ குன்னூர்

'அல்ஃபோன்ஸ்' பள்ளியில், ஹாஸ்டலில் தங்கிப் படிக்கிற வன் என்று எனக்குத் தெரியும். உன் பெயர் பிரபு அல்ல என்பதும் தெரியும். இதற்கு மேல் நீயாகச் சொல்கிறாயா? அல்லது பள்ளிக்கே டெலிஃபோன் செய்து தெரிந்து கொண்டு உன் வீட்டுக்கு உன்னை அனுப்பி வைக்கட்டுமா'' என்று கடுமையான குரலில் அவள் கேட்கவும் அவன் முகம் விழுந்து விட்டது.

''எ..எப்படித் தெரியும்?'' என்று சின்னக்குரலில் விசாரித்தான். நான் தான் 'பாட்ஜைக்' கிழித்திருந்தேனே!''

''ஆனால் சீருடையோடு வந்திருந்தாயே! கூடவே உடைகளின் சலவைக்குறி வேறு! இங்கே ஒரு மிஷனரி சிஸ்டரிடம் விசாரித்தேன்... நீ இன்னமும் சொல்லத் தொடங்கவில்லையே?'' என்று துருவினாள் வசுந்தரா.

மீண்டும் தலையைப் பின்னே தள்ளி, கீழ்க்கண்ணால் அவளை நோட்டமிட்டான் அவன்.

''ஊகூம்.. இனி நீ கதை கட்டினால்... அப்புறம் நான் என்ன செய்வேன் என்று முதலிலேயே சொல்லிவிட்டேன்!'' என்றாள் வசுந்தரா உறுதியான குரலில்.

விதிக்குப் பணிகிறவன் போல ஒரு பெரு மூச்சு விட்டான் சிறுவன்..''என் உண்மைப் பெயர் பூபால் - பூபாலன். ஆனால் என் அம்மா நான் பிறந்த போதே இறந்து போனது நிஜம்தான். அப்பா.. அப்பாவும் எனக்கு நினைவு இல்லை. சீக்கிரமே அவரும் செத்துப் போயிருக்க வேண்டும்...''

தன் குடும்பத்தைப் பற்றிப் பேச அவனுக்கு விருப்பம் இல்லை என்பது நன்றாகவே தெரிந்தது. ஆயினும் விடாமல் ''அப்படியானால் இப்போது உன் 'கார்டியன்' யார்'' என்று வசுந்தரா விசாரித்தாள்.



''அது... 'கார்டியன்' வந்து... அவரிடம் என்னைச் சொல்லிக் கொடுத்து விடுவீர்களா?'' என்று கவலையுடன் கேட்டான் அவன்.

''அதைப்பற்றிப் பிறகு பார்க்கலாம். முதலில் அவர் யார், உனக்கு என்ன உறவு...எல்லாம் சொல்'' என்றாள் அவள் இரக்கம் காட்டாமல்.

''அவர்..அவர் எனக்கு அண்ணன்... நிஜமாகவே அண்ணன்தான்..'' என்றான் அவன் ஏதோ சவால் விடும் குரலில்.

யோசனையோடு பூபாலனைப் பார்த்தாள் வசுந்தரா. எட்டு வயதுப் பையனுடைய 'கார்டியன்' அவன் அண்ணனா? எவ்வளவு வயது வித்தியாசத்தில் அவர்களுடைய தாய் பெற்றிருந்தாலும், அந்த அண்ணனுக்கு இப்போது பதினெட்டு வயது இருக்குமா?...இருபது? அதற்குள் கார்டியனா? ஏதோ நெருடியது.

''அவர் உனக்கு அண்ணன் இல்லை என்று இங்கே யார் சொன்னார்கள்?'' என்று அவள் புன்னகை புரியவும், இளகி ''பள்ளியில் கடைசி பெஞ்ச் பையன்கள் இரண்டு பேர் அப்படிச் சொல்கிறார்கள், அக்கா!'' என்று குறைப் பட்டான் பிள்ளை.''அண்ணன் ரொம்ம்...பப் பெரியவராக இருக்கிறாராம். அதனால் அவர் அப்பாவாகத்தான் இருக்க வேண்டும் அண்ணனாக இருக்க முடியவே முடியாதாம்...'' என்று ஆத்திரத்துடன் உரைத்த சிறுவன், உடனேயே கண்கள் சொக்க ''அப்படி மட்டும் அண்ணன் அப்பாவாக இருந்தால் எவ்..எவ்வளவு நன்றாக இருக்கும்?'', என்றான் ஏக்கத்துடன்.

''ஏன், அப்படி?''

''எங்கள் சித்தி வீட்டில் எப்பவும் என்னை 'அம்மாவை முழுங்கியவன்' என்பார்கள். 'அப்பன் பேர் தெரியாமல் பிறந்த பிசாசு' என்றும்..'' என்று முகம் கன்றிக் கறுக்க நிறுத்தினான் அவன்.

ஒன்று தோன்ற, ''உன் அண்ணனுக்கு...உன் அண்ணன் எத்தனை ஆண்டுகளாக உனக்கு கார்டியனாக இருக்கிறார்?'' என்று சற்றே மாற்றி விசாரித்தாள் அவள்.

''எப்போதுமே?'' என்றான் சிறுவன் தயக்கமின்றி, ''மூன்று வயதில் என்னை ஹாஸ்டலுக்கு அனுப்பினார்கள். அதிலிருந்து அண்ணன்தான் கார்டியன்'' என்றான் வெள்ளையாய்.

வசுந்தராவுக்கு விஷயம் புரிந்து விட்டது. இந்த அண்ணன்தான் மெய்யாக அண்ணன் இல்லை. அப்பன்! வெளி உலகத்திற்கு அண்ணன் என்று வேடம் போடுகிறான். ஒரு குழந்தைக்கு அப்பா என்பதைவிட அண்ணன் என்றால் தானே ஏமாளி இளம் பெண்களை மயக்குவது எளிதாக இருக்கும்?

ஆனால் ஒரு விஷயத்தில் அந்த அண்ணனைப் பாராட்ட வேண்டும்... இந்த ஆசிரமத்தில் இருக்கும் எத்தனையோ பிள்ளைகளைப் போல, நிர்க்கதியாய் விட்டு விடாமல், தம்பி என்று பெயர் சொல்லியேனும் பிள்ளையை வளர்க்கிறானே!. அதுவும் செலவு அதிகம் செய்து, ஓர் உயர்ந்த பள்ளியில் சேர்த்துப் படிக்க வேறு வைக்கிறான்!

''இன்னும் 'கார்டியன்' பெயர் சொல்லவில்லையே!''



''அண்ணன் பெயர் எல்லாருக்கும் தெரிந்த பேர் கௌதமன்! கௌதமன் ஆ.ஃப் கௌதம் கம்ப்யூட்டர்ஸ்! அண்ணன் தான் அதற்கு சேர்மன்'' என்று பெருமையுடன் அறிவித்தான் பூபாலன்.

''இப்போது அண்ணன் ஜப்பானில் இருக்கிறாராக்கும்!''

வசுந்தராவுக்கு நிச்சயப்பட்டுப் போயிற்று.

இவன் நிச்சயமாக அப்பாவாகத்தான் இருக்க வேண்டும். வேறு உறவுக்கு வழியே இல்லை என்ற முடிவுக்கு வசுந்தரா வந்தாள்.

## 3

''கம்ப்யூட்டர்'' துறையின் முன்னோடிகளில் இந்த 'கௌதம் கம்ப்யூட்டர்ஸ்' ஒன்று. உலகமெங்கும் விற்பனையாவதோடு, பல பயிற்சி நிலையங்களும் உண்டு. அதன் முதலாளி என்றால்... அண்ணனாம்! சித்தப்பா, பெரியப்பா என்றேனும் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாதா? உறவால் கூடவா சின்ன வயதுக் காரனாகக் காட்டிக் கொள்வது? உள்ளூர அந்த அண்ணனிடம் வசுந்தராவுக்கு வெறுப்பு உண்டாயிற்று.

அண்ணனின் பெயரைச் சொல்லுமுன்பே பூரித்துப் போகும் இவனிடம் இதை என்னவென்று சொல்வது?

''அது சரி, உன்னை இப்படி அனாதை இல்லத்தில் சேர விட்டு விட்டு அங்கே உன் அண்ணன் ஜப்பானில் என்ன செய்து கொண்டு இருக்கிறாராம்?''

காட்டக் கூடாது என்று நினைத்தும் வசுந்தராவின் குரலில் ஏளனம் இழையோடி விட, தம்பி ரோஷமாக நிமிர்ந்தான்.

''அண்ணனுக்கு ஒன்றும் நான் இங்கே இருப்பது தெரியாது!''

''பின்னே எங்கே இருப்பாய் என்று உத்தேசம்? அல்ஃபோன்ஸ் பள்ளிக்கு லீவு தொடங்கி விட்டது என்று சொன்னார்களே!''

பையனின் முகம் மீண்டும் விழுந்து விட, ''என் சித்தி வீட்டில்... இருக்கச் சொல்லியிருந்தார்...'' என்றான் அழு குரலில்.

''யார்? என்னமோ முழுங்கி கிழுங்கி என்று ஏதேதோ சொல்வார்கள் என்றாயே, அந்த சித்தியா?'' என்று வினவியவள் அவன் தலையாட்டவும், ''அவர்கள் உன்னிடம் சரியாக நடந்து கொள்வது இல்லை என்று உன் அண்ணனுக்குத் தெரியாதா?'' என்று கேட்டாள்.

''தெரியும்... ஆனால்...''

''இங்கே பார், ஒழுங்காக முதலிலிருந்து எல்லாவற்றையும் சொல்லு; அல்லது மரியாதையாக உன் சித்தி வீட்டுக்கே போய்ச்சேர்''

''சொல்கிறேன்...'' என்று தொடங்கி நடந்ததை பூபால் விவரித்தான்.

எப்போதும் லீவு நாட்களில் அண்ணன் அவன் கூடவே தான் இருப்பான். அண்ணன் வீட்டில் இருக்கும் அம்மாவுக்கு பூபாலனைக் கொஞ்சம் கூடப் பிடிக்காது. எப்போதும் திட்டிக் கொண்டே இருப்பாள். சாப்பாடு கூடச் சரியாகத் தரமாட்



டாள். இவனுக்கும் அந்தம்மாளை அடியோடு பிடிக்காது. இருவருக்கும் தகராறு வந்து கொண்டே இருக்கும். அண்ணன் இல்லாமல் அந்த வீட்டில் பூபால் ஒரு நாள் கூட இருக்க முடியாது என்பது அண்ணனுக்கும் தெரியும். தம்பியின் லீவு நாட்களைக் கவனத்தில் வைத்துதான் கௌதமன் தன் வெளியூர், வெளிநாட்டுப் பயணங்களைத் திட்டமிடுவதே.

இந்த முறை அவனது ஜப்பான் பயணமும் அப்படித் திட்டமிட்டது தான். ஒரு புதுவித 'டிஸ்க்' தயாரிப்பு பற்றிய பேச்சுவார்த்தை. முதல்கட்ட பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்டு தாய் நாடு திரும்பி விட்டு, பூபாலின் விடுமுறைக் காலம் முடிந்த பின் மீண்டும் ஜப்பான் சென்று இறுதிக்கட்ட பேச்சு முடித்து ஒப்பந்தம் கையெழுத்திடுவதாக ஐடியா. ஆனால் ஜப்பானியர் சுறுசுறுப்பு ஒரே தடவையில் பேச்சுவார்த்தை முழுவதையும் முடித்து விட்டது. இன்னமும் ஐந்து நாட்கள் தங்கியிருந்தால் ஒப்பந்தத்தில் இருபக்கத்தாரும் கையெழுத்திட்டு, உடனேயே தயாரிப்பு வேலையையும் தொடங்கி விடலாம் என்ற நிலை.

எனவே அண்ணன் பள்ளிக்கு டெலிஃபோன் செய்து, இந்த ஐந்து நாட்கள் சித்தி வீட்டில் இருக்கும்படியும், ஆறாவது நாள் தம்பியை அழைத்துக் கொள்வதாகவும் சொல்லி விட்டான்!

ஆனால் பூபாலுக்குச் சித்தி வீட்டுக்குப் போகக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. சும்மா சும்மா அம்மாவை முழுங்கியவன் என்றால் எப்படி இருக்கும்?

''நான் என்ன, வேண்டுமென்றா என் அம்மாவைச் சாகடித்து விட்டேன், அக்கா? அதைவிட மோசம், நான் பிறந்தது பற்றி அசிங்கமாகப் பேசுவது. கல்யாணம் ஆகாமல்

பிள்ளை பெற்றுக் குடும்பத்தைத் தலைகுனிய வைத்து விட்டார்களாம் என் அம்மா. சித்தியுடைய பிள்ளைகளை என்னோடு பேச விட மாட்டார்கள். எனக்கு எப்படி இருக்கும்? அவ்வளவு மானம் பார்க்கிறவர்கள் என்னை வராதே என்று சொல்லவேண்டியதுதானே? அது மாட்டார்கள். என்னை வைத்துக்கொள்ளும் செலவுக்கென்று அண்ணன் கொடுக்கும் பணம் வேண்டும்! ஒரு நாள் செலவுக்கு முன்னூறு ரூபாய் கணக்கு போட்டு அண்ணன் கொடுப்பார். அவ்வளவையும் வாங்கி வைத்துக் கொண்டு, எனக்கு ஒரு முட்டை கூடத் தரமாட்டார்கள். எப்படி அக்கா நியாயம்?''

சீற்றத்துடன் முகம் சிவக்கக் கேட்டவனை வியப்புடன் நோக்கினாள் வசுந்தரா. இந்த வயதில் இவ்வளவு மனம் பாதிக்கப்படக் கூடுமா?!

''ரொம்பவும் அநியாயம்தான்! ஆனால் நீ அங்கே போகாமல் இங்கே வந்தது எப்படி என்பதுதான் இன்னமும் எனக்கு விளங்கவில்லை!'' என்றாள் அவள்.

''எனக்குச் சித்தி வீட்டுக்குப் போகக் கொஞ்சமும் பிடிக்கவில்லை அக்கா.''

''புரிகிறது ஆனால்''

''அங்கே அண்ணன் வீட்டிலும் இருக்க முடியாது. அந்த அம்மாவும் என் அம்மா பற்றி மோசமாகத்தான் பேசுவார்கள்.''

'அந்தம்மா' என்பது யாராக இருக்கும் என்று வசுந்தரா யோசித்தாள். அந்தப் பெண்மணி அந்த கௌதமனுடைய மனைவியாக இருக்கும் பட்சத்தில் அப்படி மோசமாகப் பேசுவது இயல்புதான். மோசமாகப் பேசுவது மட்டுமா? குத்திக் கிழித்து விடவே தோன்றுமே!



''நீங்கள் சொல்லுங்கள் அக்கா, உங்கள் அம்மாவைப் பற்றி ரொம்பவும் தப்பாக... ரொம்பவும் மோசமாய்ப் பேசுகிற இடத்துக்குப் போக உங்களுக்குப் பிடிக்குமா?'' என்று கேட்டு, அவளிடம் தன்னை நியாயப்படுத்திக் கொண்டான் பூபாலன்.

தயக்கத்துடன் ஒத்துக் கொண்டவளிடம், ''அதனால் தான் ஒருவருக்கும் தெரியாமல் நான் இங்கே வந்து விட்டேன்!'' என்று வெற்றிக் குரலில் அறிவித்தான் ''எப்படி என் ஐடியா?!''

உதட்டைப் பிதுக்கினாள் வசுந்தரா. ''என்ன பெரிய்ய ஒருவருக்கும் தெரியாமல்? நான் எளிதாகக் கண்டு விட்டேன்!'' என்றாள் கேலியாக.

சற்றே அசடு தட்ட, ''பள்ளியிலிருந்து ஹாஸ்டலுக்கு உடைமாற்றப் போனால், அப்புறம், கூட்டிப் போகும் ஆளைப் பாராமல் வார்டன் வெளியே விடமாட்டார். அதனால் அப்படியே கிளம்பும்படி ஆகிவிட்டது... '' என்று வழிந்தான் பூபால்.

''உன் சித்தி வீட்டார் வேறு உன்னை எதிர்பார்த்திருப்பார்கள். இப்போது நீ வரவில்லை என்று பள்ளிக்கு ஃபோன் போட்டிருப்பார்கள்... ''

''மாட்டார்களே!'' என்று குதித்தான் பையன். ''அங்கே என் சினேகிதனுடைய அண்ணனுக்கு பணம் கொடுத்து, சித்தி வீட்டுக்கு நான் வரவில்லை என்றும், என்னை இங்கே அழைத்துக் கொள்வதாகவும் அண்ணன் போலவே பேசச் சொல்லி விட்டேன். அதனால் யாரும் என்னைத் தேடவே மாட்டார்கள். நான் ஜாலியாக இங்கேயே... '' என்றவனைத் திடீரென்று ஓர் ஐயம் உறுத்த ''என்னை இங்கே வைத்துக்

கொள்வீர்கள் அல்லவா? ப்ளீஸ் அக்கா! ஐந்தே ஐந்து நாட்கள். இந்த ஐந்து நாட்களில் எனக்கு ஆகிற செலவுக்கு, என் பாக்கெட் மணிப் பணம் நூறு ரூபாய் மிச்சம் இருக்கிறது; அதைத் தந்து விடுகிறேன். அது போதாது என்றால் வேலை செய்கிறேன். ஃப்ளீஸ் அக்கா, இந்த ஐந்து நாட்கள் என்னை இங்கே இருக்க விடுங்கள், அக்கா!'' என்று ரொம்பவும் பரிதாபகரமாகக் கெஞ்சலானான்.

வசுந்தராவுக்கு மனம் ஏற்கெனவே அவனிடம் இளகிப் போயிருந்தது. பெற்றோர் செய்த பிழைக்கு இந்தப் பிள்ளை என்ன செய்யும்? இதைப் போய்க் கரிக்கிறார்களே! இந்தப் பிஞ்சு மனம் என்ன பாடுபடும் என்று ஏற்கெனவே உருக்கம் தான்.

ஆனால், ஒரு வசதியுள்ள வீட்டுப் பையனை இல்லத்துச் செலவில் தங்க விடுவதும் அவளுக்கு நியாயமாகப்படவில்லை.

கையோடு வீட்டுக்கு அழைத்துப் போகலாமா என்று ஒரு தரம் யோசித்து விட்டு, அந்த யோசனையை உடனே கைவிட்டாள்.

மாதம் ஒருதரம், அன்பு இல்லத்துக்கு நன்கொடை என்று அப்பாவிடம் பணம் வாங்குவதே அண்ணிக்கு அவ்வளவாக விருப்பம் கிடையாது! கஷ்டப்பட்டு சம்பாதிக்கிற காசு! என்று ஜாடையாகப் பேசி, பெருமூச்சு விடுவாள். ஒரு நகை நட்டை வாங்கி மாட்டிக் கொள்ளேன். இப்படிப் பைசாப் பயன் படாமல் வீணாக்குகிறாயே என்பாள்.

இப்போது இவனை அழைத்துச் சென்றால், எதையாவது கிண்டிக் கிளறி இந்தப் பையன் மனதை நோகடித்து விடுவாள்!



அதை விட ... என்று யோசித்து ஒரு முடிவுக்கு வந்தவளாய் நிர்வாகியிடம் சென்று, பூபாலனை ஓர் ஐந்து நாட்கள் தங்கியிருக்கச் செய்ய அனுமதி பெற்றாள்.

இந்த ஐந்து நாட்களும் அவனுக்கு ஆகக் கூடிய செலவு என்று ஒரு தொகையை அவளே இல்லத்துக்குக் கொடுத்து விட்ட பிறகே அவளுக்கு நிம்மதியாயிற்று.

''இல்லத்துக்காக நீ எவ்வளவோ செய்கிறாய். இது எதற்கம்மா?'' என்று நிர்வாகி தடுத்த போதும் கூட அவள் பணத்தை கட்டி விடவே செய்தாள்.

இந்த இல்லத்துக்கு அவள் பல வகையிலும் உதவுவது உண்மைதான். அவளே சம்பளமில்லாமல் பணி புரிவதோடு, அறிந்தவர்கள் பலரையும் ஊக்குவித்து, அவரவர் விடுமுறை நாட்களில் சிரமதானம் புரியச் செய்தாள். சனி, ஞாயிறுகளில் தோட்டவேலை செய்ய அங்கே ஒரு படையே திரண்டு வரும்! நன்கொடை திரட்டுவது வேறு.

ஆனால், இத்தனையும் அவள் இல்லத்துக்காக மட்டும் செய்யவில்லையே! அவளது சொந்த லாபமாக, நொந்து சோர்ந்திருந்த அவள் மனம் இப்போது எவ்வளவோ நிமிர்ந்து விட்டதே!

அடுத்த ஐந்து நாட்களும், வசுந்தராவுக்கும் பூபாலனுக்கும் இடையே ஒரு நல்ல பிணைப்பு உண்டாயிற்று.

இன்முகம் காட்டிக் கனிவும் கண்டிப்புமாகப் பழகும் ஒரு பெண் அவன் வாழ்வில் அரிதாக இருந்ததால் அக்கா அக்கா என்று பூபால் கொண்டாட, எல்லாம் இருந்தும் இல்லாதவனாக இருக்கும் அந்தப் பணக்கார அனாதையிடம் வசுந்தராவுக்கு மிகுந்த பரிவு இருந்தது. கூடவே பழக்கமற்ற இந்த எளிமையை அவன் ஏற்ற விதம் அவனிடம் ஒரு பாசத்தையும் உண்டாக்கி விட்டது.

நாலு வகை பதார்த்தங்கள், அசைவ உணவு என்று பழக்கப்பட்டிருந்த பையன், வெறும் ஒரு சாம்பார், கறியோடு உண்ண முதலில் திணறிய போதும், மற்ற பிள்ளைகள் அதையே ரசித்துப் புசிப்பதைப் பார்த்து, தன் முகபாவனையையும் சீர்படுத்திக் கொள்வதைக் கண்டு உள்ளூரப் பாராட்டினாள் அவள்.

குளித்துக் கழற்றிய துணிகளை வழக்கம் போல் அங்கேயே விட்டு விட்டு வந்தவன், மற்றவர்கள் அவரவர் துணிகளை உலர்த்துவது கண்டு, ஓடிப்போய் தன்னதையும் அலசி பிழிந்து காயப் போட்டான். இல்லத்துக்கு நன் கொடையாக வந்த பெரிய சலவை மிஷினில், வாராந்திரச் சலவையின் போது, இதைக் குறிப்பிட்டு விட்டு, ''இன்றைக்குத்தான் ஞாபகமாகக் குளித்த உடனேயே துணி அலசினேன் அக்கா! பார்த்தால், இன்று பார்த்து மிஷின் சலவையாக இருக்கிறது! என் வேலையெல்லாம் வீண்!'' என்று அதையும் ஒரு சிரிப்போடு அவன் கூறவும் வசந்தராவுக்கு உருகியது.

எனக்கென்ன என்று ஒதுங்கியிராமல், மற்ற பிள்ளைகள் செய்யும் வேலைகளைக் கூடக் கூடச் சேர்ந்து அவன் செய்ததும் அவளைக் கவர்ந்தது.

தாய், தந்தை, அண்ணன், அண்ணி என்று எல்லோரும் தாங்கியும் ஒரு துன்பத்தில் அவ்வளவு நிலை கலங்கிப் போனோமே! இவனுக்குத் தாயில்லை; அண்ணன் என்று சொல்ல வைக்கும் தகப்பன். அன்பில்லாச் சூழ்நிலை, அறியாப் பருவத்திலிருந்து ஹாஸ்டல் வாசம் - இத்தனைக்கும் நடுவில் இவ்வளவு ஆர்வமும் துடிப்புமாக பூபால் இருந்தது அவனிடம் அவளுக்கு ஒரு மரியாதையைக் கூட உருவாக்கியது எனலாம்!



நான்கு நாட்கள் தினமும் காலையில் இல்லத்துக்குச் செல்லும்போது வாயிலிலேயே கையில் ஒரு பூவோடு - தானாக வளர்ந்த காட்டுப் பூதான் - அவன் நிற்பதும், மாலை திரும்பும் போது கையாட்டி விடை கொடுப்பதுமாக, அவள் வாழ்வில் அவனும் ஓர் அங்கமாகவே மாறிப் போனான்.

ஐந்தாம் நாள் மாலையில் இனி இவனைப் பார்க்க முடியாது... என்று சோர்வுடன் எண்ணமிட்டபடி அவள் கிளம்பும் போது பூபால், இறுகிய முகத்துடன் அவளிடம் வந்து நின்றான்.

''என்ன பூபால் முகம் மீட்டர் கணக்கில் நீண்டிருக்கிறது?'' என்று கேலி போலக் கேட்டாள் வசுந்தரா.

''அண்ணன்.'' என்றான் அவன் சோகமாக.

''அண்ணனுக்கு என்ன? அதுதான் நாளை பார்க்கப் போகிறாயே, உன் மதிப்பிற்குரிய அண்ணனை!''

அவளை ஒரு தரம் தாங்கலாக நோக்கி விட்டு, ''அண்ணன் கோபிப்பாரோ என்று பயமாக இருக்கிறது.'' என்று கவலைப்பட்டான் சிறுவன்.

''இதை ஐந்து நாள் முன்னதாக யோசித்திருக்க வேண்டும்'' என்றவள் கூடவே, வார்த்தைகளின் கடுமை உறைக்காமல் இருப்பதற்காகப் பரிவான புன்னகை ஒன்றும் புரிந்து வைத்தாள்.

''ஆ...மாம் அக்கா.'' என்று ஒத்துக்கொண்டவன், உடனேயே, ''அப்போது இந்த குண்டோதரி, மண்டோதரிகளின் பேச்சு ஒன்றுதான் பெரிதாகத் தெரிந்தது.'' என்று தொடர்ந்து காரணமும் சொன்னான்.

''என்னது... என்னது?'' என்று வியப்புடன் வசுந்தரா வினவினாள்.

''அதுதான் அக்கா, இங்கே அண்ணன் வீட்டில் அந்த அம்மா ஒரு குண்டோதரி; பீப்பாய்க்குக் கைகால் முளைத்த மாதிரி பார்க்க சகிக்காமல்...''

ஒரு வேளை அதனால்தான் அந்த ''அண்ணன்'' வேறு தேடியிருப்பானோ என்று கனத்தில் வசுந்தராவின் மனம் குறுக்கே பாய்ந்தது.

''...அது போல அங்கே, சித்தி ஒரு மண்டோதரி... மண்டோதரி தெரியாது. ராவணன் பெண்டாட்டி. ராட்சசி. சித்திக்கு மேலே ஒரு கோரைப்பல் கூட உண்டு. சிங்கப் பல் அதிர்ஷ்டம் என்று அது வேறு பெருமை பினாத்திக் கொள்வார்கள்! பார்ப்பதற்கும் அசல் ராட்சசியேதான். கொம்பு மட்டும் மாட்டினால் போதும்...'' என்று தலையில் கொம்பு மாதிரி கைகளை வைத்துக் கண்களை உருட்டிக் காட்டினான் பூபால்.

அவன் பேச்சிலும் பாவனையிலுமாக விழுந்து விழுந்து சிரித்து விட்டு, ''மண்டோதரி ராவணனுடைய மனைவி என்றாலும் மிகவும் நல்லவள் பூபால். அவள் ராட்சசியும் அல்ல. சீதாதேவியை விடக் கூட அவள் உயர்வானவள் என்றும் பலர் சொல்வதுண்டு'' என்று அவள் விளக்கவும், ''ஐயய்யோ! இனி மேல் சித்தியை மண்டோதரி என்று சொல்ல மாட்டேன்ப்பா. வேறே பொல்லாத ராட்சசி பேர் ஏதாவது உங்களுக்குத் தெரியுமாக்கா?'' என்று அவன் கேட்கவும் வசுந்தராவுக்கு மீண்டும் சிரிப்பு வந்தது.

சிரிப்பினூடே உள்ளூர ஒரு வலியும் கூட. இந்தச் சின்னப் பையனின் மனதை எவ்வளவு வருத்தியிருந்தால் இப்படியெல்லாம் யோசிக்கத் தோன்றும்?

''அது போகட்டும் விடு'' என்றவள் அந்தப் பேச்சை மாற்ற விரும்பி, ''நீ என்னமோ அண்ணனைப் பற்றிப் பேச வந்தாய்!'' என்று நினைவூட்டினாள்.



''ஆமாம் அக்கா... அண்ணனிடம் சொல்லாமல் மறைக்க முடியாது. எப்படியும், சித்திக்கு என்னைப் பார்த்துக் கொண்டதற்காக என்று பணம் கொடுக்கும் போது விஷயம் வெளியாகி விடும். இல்லாவிட்டாலும் கூட, அண்ணன் எப்படியோ கண்டுபிடித்து விடுவார். அக்கா அதனால் நாமாகவே சொல்லி விடுவதுதான் மேல்.''

நாமா? அவளையும் இதில் சேர்த்துக் கொண்டானாக்கும்! கில்லாடிதான்!

சட்டென அவள் கையைப் பற்றி, ''அக்காக்கா, அண்ணனிடம் நீங்கள்தான் எல்லாம் சொல்ல வேண்டும். அக்கா! நைசாக சொல்லி எப்படியாவது நீங்கள்தான் அண்ணன் கோபப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் அக்கா. ப்ளீஸ் அக்கா. ஏனென்றால், அண்ணன் கோபப்பட்டால் என்னால் அதைத் தாங்கவே முடியாதுக்கா. ப்ளீஸ் அக்கா!'' என்று கெஞ்சலே உருவாகிப் போனான் பூபால்.

சிறுவனின் கெஞ்சலை மறுக்க முடியாவிட்டாலும், இதில் வசுந்தரா என்ன செய்ய முடியும்?

ஆனால் அவளால் முடியாதது ஒன்றுமே இல்லை என்றான் பூபாலன். உதாரணமாக, அவன் எவ்வளவு சாமர்த்தியமாக திட்டம் போட்டபோதும் அவள் கண்டுபிடித்து விடவில்லையா? அப்புறமும் இந்த இல்லத்தில் தங்க ஏற்பாடு செய்யவில்லையா?

இதெல்லாம் அவனுடைய அண்ணனுக்கு ஒன்றும் பெரிதாகப் படப் போவது இல்லை என்று வசுந்தரா உரைத்ததை அவன் காதிலேயே வாங்கிக் கொள்வதாக இல்லை.

''அக்கா ப்ளீஸ்.. ப்ளீஸ்'' என்று மிகவும் பரிதாபகரமாகக் கெஞ்சவும், அவளால் மறுக்க முடியாமல் போயிற்று.

இந்த அண்ணனின் கோபத்துக்கு இவன் இவ்வளவு பயப்படுகிறானே, கோபம் வந்துவிட்டால் பிள்ளையைக் கண் மண் தெரியாமல் அடித்து விடுவானோ? அல்லது இருட்டு அறை, பட்டினி என்று கொடுமை செய்வானோ?

ஏதாவது செய்திருக்க வேண்டும். அல்லது இவன் இவ்வளவு அஞ்சத் தேவையில்லை. சின்னப் பிள்ளைகளை எப்படி வளர்ப்பது என்று சமூகத்தில் பெரிய மனிதனாக உலவி வரும் இந்தச் சின்ன மனிதனுக்குச் சில பாடங்கள் கற்றுக் கொடுக்க வேண்டும் போல் இருக்கிறதே என்று எண்ணினாள் வசுந்தரா.

வீட்டுக்கு டெலிபோன் செய்ய பூபாலுக்குப் பிரியம் இல்லை. ''அந்த குண்டோதரிக்கு விஷயம் தெரிந்தால் அப்புறம் நான் குளோஸ்!'' என்று தடுத்தாள்.

மறுநாள் காலையில், வசுந்தரா அன்பு இல்லத்துக்கு வந்து சற்று நேரம் ஆனபின், பதினோரு மணியளவில் அண்ணனின் சொந்த நம்பர் என்று பூபால் கொடுத்த எண்ணோடு வசுந்தரா தொடர்பு கொண்டாள்.

ஆனால் பூபாலன் சொன்னது போல ரிசீவரை கௌதமன் எடுக்கவில்லை. எடுத்து யாரென்று கேட்ட இனிய பெண் குரல், அவள் கௌதமனின் காரியதரிசியாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்தியது.

ஆனால் ஒரு செயலாளரிடம் இந்த விஷயம் சொல்ல விரும்பாமல், கௌதமனோடு நேரே பேச வேண்டும் என்றாள் வசுந்தரா.

''அவர் முக்கிய வேலையில் இருக்கிறார். என்னவென்று என்னிடம் சொல்லுங்கள்'' என்றாள் அந்தப் பெண் செயலாளர்.



''இல்லை. அவரிடம்தான் சொல்ல வேண்டும். இது ரொம்பவும் சொந்த விஷயம்'' என்று வசுந்தரா வலியுறுத்தவே, தயக்கத்துடன், ''ஓ.கே. உங்கள் பெயரைச் சொல்லுங்கள். சாரிடம் கேட்கிறேன்'' என்று இறங்கி வந்தாள் அவள்.

''வசுந்தரா'' என்று பெயரைச் சொன்னவள். இந்தப் பெயர் அந்த கௌதமனுக்கு எந்தவிதத்திலும் முக்கியமானதாகத் தோன்றாது என்பதை உணர்ந்து, ''ஆனால்...'' என்று தொடங்கு முன், அந்தச் செயலாளர் ரிசீவரைக் கீழே கிடத்தி விட்டுப் போயிருந்தாள்.

''வசுந்தராவா? என்னிடம் என்ன சொந்த விஷயம்...'' என்று தூரக் கேட்ட கோபக் குரலையும் வேகமான காலடி ஓசையையும் அடுத்து ரிசீவர் மீண்டும் எடுக்கப்பட்டது. ''இதோ பார் ஒரு காலத்தில் நான் உன்னோடு மிகவும் நெருக்கமாகப் பழகியிருக்கலாம். ஆனால் அந்தப் பழக்கத்துக்கு உரிய விலைக்கு மேல் மிகவும் அதிகமாகவே உனக்குப் பொருளும் தந்திருப்பேன். அத்தோடு திருப்தி அடை. இப்படி சொந்த விஷயம் கிந்த விஷயம் என்று டெலிபோன் செய்து என் நேரத்தை வீணடிக்காதே!'' என்று கடுமையான குரலில் கூறிவிட்டு ரிசீவரை ஓங்கி அறைந்து தாங்கியில் சாற்றினான் அந்தக் கௌதமன்.

அமிலத்தையே ஊற்றி விட்டாற்போல முகம் கன்றிச் சிவந்து காந்த, கொள்ளிக் கட்டையைப் பற்றியிருப்பது போன்ற உணர்வுடன், ரிசீவரைக் கீழே தவற விட்டாள் வசுந்தரா.

4

தீச்சுட்டாற் போலான காந்தல் தவிரச் சற்று நேரம் வசுந்த ராவுக்கு வேறு ஒன்றுமே தோன்றவில்லை.

என்ன வார்த்தை சொல்லி விட்டான். பாவி! அதுவும் யாரைப் பார்த்து?

பூபால் ஏன் பயப்பட்டான் என்பது இப்போதல்லவா புரிகிறது! பாவம் சிறுவன்! இதுபோல எத்தனை தாங்கி னானோ?! ஆனாலும் என்ன திமிர்!

இந்த மாதிரியெல்லாம் பழகி விட்டுப் பணத்தைக் கொடுத்துவிட்டு ஓடி விடுவதாமா? பொருள் கொடுத்தா னாம், பொருள்!

இதில் ஒரு பிள்ளை உருவாகியிருந்தால், இவன் கொடுத்த பொருள் அந்தக் குழந்தைக்கு ஒரு குடும்பத்தை அமைத்துத் தருமா என்று ஆத்திரமாக எண்ணும் போதே அப்படி உருவான பிள்ளையை அவன் அனாதையாக விட்டு விடவில்லை என்பது நினைவு வந்து சற்றே சீற்றம் மட்டுப்பட் டது.

ஆனால் அதற்காக? இவனிடம் எவள் எவளோ எப்படி எப்படியோ பழகியிருக்கலாம். இன்னமும் அவனையே சுற் றலாம். அதற்காக எல்லாப் பெண்களையும் அப்படியே எடை போட்டு விடுவதா?

சீ! என்று ஒதுங்கிப் போய் விடலாம். ஆனால் பூபா லனை அம்போ என்று விட்டுவிட முடியாது! அவனை வீடு சேர்க்க வேண்டும். வாய்ப்பு கிடைத்தால் இந்த 'அண்ணன் தலையில் ஒரு குட்டும் குட்ட வேண்டும்!



ஆனால், இன்னொரு தரம் அந்தக் கௌதமனுக்குத் தானே டெலிபோன் செய்யவும் வசுந்தராவுக்கு அருவருப் பாக இருந்தது.

யாரைப் பேசச் சொல்வது என்று யோசித்தபடி திரும் பிய போது யசோதா கண்களில் குறுகுறுப்புடன் அவளையே நோக்குவது தெரிந்தது.

டெலிபோன் ரிசீவரைக் கீழே போட்டுவிட்டு எடுத்து வைத்ததைக் கவனித்திருப்பாளோ?

மீண்டும் முகத்தில் சிவப்பு பரவுவதை அடக்க முயன்ற படி, ''யசோதா, இங்கே நோட் பாடில், ஒரு நம்பர் எழுதியி ருக்கிறேன். அந்த நம்பருக்கு போன் செய்து, யார் எடுத்தா லும், பூபால் என்கிற பையன், குன்னூர் அல்ஃபோன்ஸ் பள்ளியில் படிப்பவன், ஐந்து நாட்களாக இந்த அனாதை இல்லத்தில் இருக்கிறான். உரியவர்கள் வந்து அழைத்துப் போகலாம் என்று சொல்லி விடுகிறீர்களா?'' என்று யசோதா விடம் பொறுப்பைக் கொடுத்தாள்.

''எது? இப்போது கொஞ்சம் முன்னால் பேசினாயே, அந்த நம்பருக்கா வசுந்தரா? அங்கே யார், உன்னை என்ன சொன்னார்கள், முகமெல்லாம் ஒரே சிவப்பாகி விட்டதே!'' என்று ஆர்வத்துடன் விசாரித்தாள் யசோதா.

வசுந்தரா கோபமாக முறைக்கவும், ''சரீ.. சரீ ஒன்றும் கேட்கவில்லை. உடனே அந்த நம்பரைக் கூப்பிட்டு, நீ சொன்ன மாதிரியே சொல்லி விடுகிறேன். அவ்வளவு தானே? என்னவோ, முகம் ஒரு மாதிரிச் சிவந்திருந்ததே; வேண்டப்பட்டவராக்கும் என்று ஓர் ஆசையில் கேட்டேன்'' என்று இன்னமும் ஆவலாகவே மற்றவளின் முகத்தைப் பார்த்தாள் யசோதா.

கால் பெருவிரலைத் தரையில் பலமாக அழுத்தினால் முகச் சிவப்பு போகும் என்று எதிலேயோ படித்த நினைவு வசுந்தராவுக்கு. ஆனால் அந்த முயற்சி பலனளிக்கவில்லை என்பதை முகத்தில் பரவிய சூடு உணர்த்தவும், ''இதெல்லாம் என்ன வீண் பேச்சு? அப்படியெல்லாம் யாரும் கிடையாது. முதலில், நீங்கள் நான் சொன்னதைச் செய்யுங்கள்'', என்று எழும்பாத குரலில் உரைத்துவிட்டு, மடமடவென்று அங்கிருந்து வெளியே சென்று விட்டாள். வேண்டப்பட்டவனா? சேச்சே! கண்ணராவி!

அடுத்த முக்கால் மணி நேரத்தில் அன்பு இல்லத்தின் வெளிவாயிலில் ஒரு நீளமான கறுப்புக் கார் வந்து நின்றது.

''சின்னய்யாவை அழைத்து வரச் சொன்னாங்க'' என்று தாக்கி யூனிபார்ம் அணிந்த டிரைவர் உள்ளே வந்து கேட்கவும், ''தப்பாக நினைத்துக் கொள்ள வேண்டாம், டிரைவர். ஆனால் நீங்கள் உண்மையானவர் என்று எனக்கு என்ன உறுதி? போய், அந்தப் பையனுடைய கார்டியனை வரச் சொல்லுங்கள். வேறு யாருடனும் பூபாலனை அனுப்புவதற்கில்லை'' என்று உறுதியான குரலில் கூறி, அந்த டிரைவரைத் திருப்பி அனுப்பினாள் வசுந்தரா.

என்னவோ ஒரு சின்ன திருப்தி. அவனுடைய உத்தரவுகள் எல்லா இடங்களிலும் செல்லாது என்று காட்டி விட்டாற் போல ஓர் எக்களிப்பு. என்ன திமிர் இருந்தால்...

பூபாலனை அழைத்துச் செல்லவென்று யாரேனும் வந்தால் முதலில் அவர்களைத் தன்னிடம் அனுப்பும்படி ஏற்பாடு செய்துவிட்டு தன் வேலைகளைக் கவனிக்கலானாள்.

போக வர முக்காலும் முக்காலுமாய்க் கௌதமன் வர ஒன்றரை மணி நேரம் ஆகக் கூடும் என்று வசுந்தரா எண்ணியிருந்தாள்.



கால் மணி நேரம் முன்னதாகவே படுவேகமாய் வந்து நின்றது அந்தக் கறுப்புக் கார்.

கேட்டில் காரைக் கண்டதுமே அவசரமாகச் சென்று ஆபீஸ் அறையில் சற்றுத் தோரணையாகவே வசுந்தரா அமர்ந்து கொண்டாள்.

சற்று நேரத்தில் வேகமான காலடியுடன் வந்த கௌதமனைப் பார்த்ததும் வசுந்தராவின் உள்ளம் சற்றுக் குழம்பியது. அவள் எண்ணியது போல இந்தக் கௌதமன் மத்திம வயது தாண்டியவன் அல்ல. இன்னமும், பூபாலனின் தந்தையாக இருக்கக் கூடிய வயதுதான். முப்பது.. அல்லது அதை ஒட்டிய வயதாக இருக்க வேண்டும். ஆனால் பூபாலனின் மூத்த அச்சு! அவ்வளவு ஜாடை ஒற்றுமை!

அவசர நடையோடு உள்ளே வந்து, அவள் எதிரில் நின்று, ''நான் கௌதமன். பூபாலனுடைய 'கார்டியன்'. அவனைச் சீக்கிரமாய் வரவழையுங்கள்'' என்றான் அவசரமாக - ஆனால் தெளிவான உச்சரிப்புடன்.

உட்காரும்படி எதிரில் கிடந்த நாற்காலியைக் காட்டியவள், அவன் முகத்தைக் கூர்ந்து கவனித்தபடி, ''நான் வசுந்தரா'' என்றாள் அவள்.

''ஓகோ?'' என்றவன் அதற்கு மேல், அவளைக் கண்டு கொள்வதாகவே இல்லை. கால் மேல் கால் போட்டு தொடையில் பொறுமையற்றுத் தாளம் போட்டுக் கொண்டு அமர்ந்திருந்தவன், ''பூபாலைச் சற்று சீக்கிரமாக வரச் சொல்லுங்கள். எனக்கு நிறைய வேலை இருக்கிறது!'' என்றான்.

வசுந்தராவுக்கு வியப்பு தாங்க முடியவில்லை. டெலிபோனில் அவளிடம் அவ்வளவு மோசமாக முடிந்த அளவு கேவலமாகப் பேசியிருக்கிறான்! அவளை நேரில் பார்த்த

துமே, எந்தக் காலத்திலும் அவனோடு அவள் அந்த மாதிரிப் பழகியவள் அல்ல என்பது அவனுக்கு நிச்சயமாகத் தெளிவாகியிருக்கும். மன்னித்துக் கொள்ளும்படி ஒரு வார்த்தை சொல்லும் நாகரிகம் இல்லையே! குட்டுப்பட்டே ஆக வேண்டிய தலை இவனுடையது.

''இருக்கலாம். ஆனால் எங்கள் இல்லத்துக்குத் தஞ்சம் என்று வந்து விட்டவர்களைத் திருப்பி அனுப்பும் போது அதற்கென்று சில சட்ட திட்டங்கள் இருக்கின்றன. உங்கள் அவசரத்திற்காக அவைகளை குப்பைத் தொட்டியில் அள்ளிப் போட்டுவிட முடியாது'' என்றாள் அவள் கறாரக் குரலில்.

''என்ன? என்ன சட்ட திட்டங்கள்? அதையாவது சற்று சீக்கிரம் சொல்லுங்கள்!'' என்றான் அவன் அலுப்புடன்.

''நீங்கள் பூபாலுக்கு.. உறவு இல்லையா? என்ன உறவு?''

அறை வாயிலைப் பொறுமையற்ற அவசரத்துடன் நோக்கியவன், திரும்பி, ''பார்த்தால் எப்படித் தெரிகிறது?'' என்றான் ஏளனமாக.

மாட்டினாயா என்று உள்ளூரக் கருவியபடி, ''அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல்.. என்று சொல்வார்களே.. அதே போல் ஒரே ஜாடை தெரிகிறது'' என்றாள் அவள்.

''அப்பா பிள்ளை மட்டுமல்ல; அண்ணன் தம்பிகளும் ஒரே ஜாடையில் இருப்பதுண்டு..'' என்றான் அவன் சற்றும் தளராமல்.

''ஆனால் இத்தனை வயது வித்தியாசத்திலா...'' என்றாள் அவள் குத்தலும் கிண்டலுமாக.



''ஓர் ஆண்மகன் பதினாறு வயதிலிருந்து அறுபது வயசு வரையும் பிள்ளை பெற முடியும். அண்ணன் தம்பிக்கிடையே வயது வித்தியாசம் எவ்வளவு இருக்கக் கூடும்? கணக்கில் பலவீனம் என்றால் விடை என்னவென்று என்னைக் கேளுங்கள். முப்பத்தாறு ஆண்டுகள்! எனக்கும் பூபாலுக்கும் இருபத்தோர் ஆண்டுகள்தான் வித்தியாசம்! முப்பத்தாறு அல்ல''

ஆனால் பெண்கள் அத்தனை ஆண்டுகள் பிள்ளை பெற மாட்டார்கள் என்று சொல்லலாமா என்று யோசித்து விட்டு வசுந்தரா வாயை மூடிக் கொண்டாள். அப்புறம் அவன் அதற்கும் கூச்ச நாச்சமின்றி ஒரு கணக்கு சொல்வான். எப்படியும், இந்த இருபத்தி ஓர் ஆண்டையும் நிலை நிறுத்தி விடுவான்.

அவன் பேசக் கூடும் என்று ஒரு கணம் தாமதித்து விட்டு, ''நான் பூபாலுக்கு அண்ணன் என்பது உறுதியாகி விட்டதால் இனியேனும் அவனை என்னோடு அனுப்புகிறீர்களா?'' என்றான் அவன்.

''அவன் வருவான், உங்களோடு சற்றுப் பேச வேண்டும்'' என்றாள் வசுந்தரா.

திரும்பி நேராக அமர்ந்து, ''என்ன?'' என்று வினவியவனிடம், அவள் என்ன சொல்லி விடப் போகிறாளோ என்ற தயக்கம், கலக்கம் எதுவும் இல்லை.

பிள்ளை, ஓர் அனாதை இல்லத்தில் சரணடைந்திருக்கிறான்! கண்டனம், வசை என்று என்ன சொல்வார்களோ என்று அவன் கொஞ்சமும் கவலைப்படவே இல்லையே!

ஆனால், பூபாலைக் கோபித்துக் கொள்ள வேண்டாம் என்பதை இந்த மாதிரி மனிதனிடம் என்ன மாதிரிச் சொல்லி சாதிப்பது?

அவளது சில வினாடி யோசனைக்குள்ளாகவே, ''பாருங்கள் மேடம். நான் தாய் நாடு திரும்பி இருபத்து நாலு மணி நேரம் ஒரு நாள் ஆகவில்லை. எனக்கு நிறைய வேலைகள் - அவசரமாகப் பார்க்க வேண்டிய விஷயங்கள் ஆயிரம் இருக்கின்றன: உங்கள் வாயிலிருந்து என்ன முத்து, எப்போது உதிரும் என்று காத்துக் கொண்டிருந்து, தேடிப் பிடித்து கோத்து வைக்க எனக்கு அவகாசம் இல்லை!'' என்று அவன் பேசிமுடிக்கும்முன் சுள்ளென்று அவளுக்கு வாயில் வந்து விட்டது.

''ஆமாம்! ஆமாம்! எத்தனை வேலைகள்! முக்கிய வேலையாக டெலிபோனில் பேசவே நேரம் சரியாகிப் போகுமே! ஒரு மா..திரிப்பட்ட பெண்களோடு கண்ணே மணியே என்று கொஞ்சவும் வேண்டும்; பழகி அலுத்துப் போய் விட்டவர்களை அவமானப்படுத்த வேண்டும். அப்பப்..பா! ஆயிரம் என்ன? இரண்டாயிரம் வேலைகளே இருக்குமே!'' என்றாள் அவள் எகத்தாளமாக.

''வாட்!'' என நிமிர்ந்தவன், தலையைச் சற்றே பின் தள்ளி, கீழ்க்கண்ணால் அவளை ஆராய்ந்தான்.

கௌதமனின் பார்வையைக் கண்டதும் வசுந்தராவுக்கு வியப்பு ஏற்பட்டதோடு சினமும் தணிந்தது.

ஆக இந்த முன்னோர் செல்லும் வழியேதான் பின்னேரும் செல்கிறதா? இந்த மாதிரிப் போஸ்களைக் காப்பியடிப்பதோடு அண்ணனைப் பின்பற்றுவதைப் பூபால் நிறுத்திக் கொண்டால் நல்லது.

சில வினாடிகளுக்குள்ளாகவே இந்தக் கௌதம புத்தருக்கும் ஞானோதயம் ஆகிவிட்டது போலும்! இலகுவாய் நாற்காலியில் சரிந்து, ''பெயர் வசுந்தரா என்றீர்கள், இல்லை? இப்போது விஷயம் புரிகிறது. பாருங்கள், நான் நேற்று நள்ளிரவில்தான் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்தேன். கொஞ்சம் ஓய்வெடுக்கக் கூட முடியாமல் தலைக்கு மேல் வேலை. அந்த மாதிரிப் பறந்து கொண்டிருக்கும் போது இடையூறு செய்தால் எரிச்சல் வருமா இல்லையா? நீங்களே சொல்லுங்கள்!'' என்று ஓர் அரைகுறை விளக்கம் அளித்தான் அவன்.



ஆக, அவன் பேசியது தகாத பிழை என்று தெரிந்த பிறகும் மன்னிப்பு கேட்க மனம் இல்லை இந்த மகாப்பிரபுவுக்கு!

வெகு நிதானமான குரலில், ''இந்த ஆசிரமத்துக்கு எப்போதுமே பண விஷயம் கொஞ்சம் இழுத்துப் பிடித்தால் தான் சரி வரும். எனவே மூவர் வேலையை இருவர் செய்வதால் எங்களுக்கு வெளிநாடு சுற்றி வராமலே வேலை கொஞ்சம் அதிகம்தான். நானும் உட்பட எல்லோருக்கும்தான்! இந்த வேலையில் இடையூறு நேர்ந்தால் எங்களுக்கும் கஷ்டம் தான்.. இப்போது உங்களுடன் பேசுவது போன்ற இடையூறுகளைச் சொன்னேன்'' என்று உரைத்து விட்டு, ''என்ன சொல்கிறாய்?'' என்பது போல அவனைப் பார்த்தாள் வசுந்தரா.

அவள் எதிர்பார்த்தது போல அவமானத்தினால் முகம் கன்றுவதற்குப் பதிலாக கௌதமனின் விழிகள் பளிச்சிட்டன. மெச்சுவது போல் வாய் மூடித் திறந்தவன், ''நீங்கள் சற்றுக் கடுமையாகப் பேசியதற்கு இது விளக்கம் என்றால் மனப்பூர்வமாய் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இதற்கு அவசியம் கிடையாது. ஏனெனில் நான் இது போன்ற விளக்கங்கள் மன்னிப்பு வேண்டுதல்.. இதையெல்லாம் எதிர்பார்ப்பதோ கட்டாயப்படுத்துவதோ கிடையாது'' என்றான் ஒரு நமட்டுச் சிரிப்புடன்.

வசுந்தரா அயர்ந்து போனாள். அவன் மன்னிப்புக் கேளாததைச் சுட்டிக் காட்டினால் அவன் அப்படியே தட்டைத் திருப்பி விட்டானே!

ஒன்றும் சொல்லத் தோன்றாமல் சில கணங்கள் திகைத்துவிட்டு மேஜை மீதிருந்த மணியை அடித்தாள். எட்டிப் பார்த்த யசோதாவிடம், யாரையாவது அனுப்பி புதுப் பையன் பூபாலை அழைத்து வரச் செய்யுங்கள் என்று அனுப்பினாள்.

அதற்கு மேல் எதிரில் இருப்பவனோடு பேச மனமற்று, உள்ளே மூண்ட எரிச்சலைக் காட்டிக் கொள்ளாமல் இருக்க முயன்றவாறு, மடியில் கோத்திருந்த விரல்களைப் பார்த்தபடி உதடுகளை இறுக மூடி அமர்ந்திருந்தாள்.

சில வினாடிகள் அவள் முகத்தையே பார்த்திருந்து விட்டு, ''நீங்கள் கோபமாய் இருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். ஒருவகையில், அது நியாயமான கோபம்தான். ஆனால் உங்கள் இனத்தில் சில பேர் எந்த அளவுக்கு இறங்குகிறார்கள் என்பது தெரிந்தால், அப்புறம் நீங்கள் ஆத்திரப்படவே மாட்டீர்கள்'' என்று கௌதமன் இதமான குரலில் உரைத்தான்.

அந்தப் பேச்சுக்கு இன்னமும் கூட இவன் மன்னிப்பு கேட்பதாக இல்லை.. அத்தோடு செய்கிறதெல்லாம் செய்துவிட்டு அடுத்த இனம் பற்றிப் பேச இவனுக்கு ஏது வாய்?!

''உங்கள் இனத்தில் மட்டும் எல்லாரும் உலக மகா உத்தம சிகாமணிகளா? ஒழுக்க சிகரங்களாக நீங்கள் ஒதுங்கி ஒதுங்கிப் போகும் போது இந்தப் பெண்கள் அவர்களை இழுத்து வைத்துக் கெடுக்கிறார்கள் என்றா சொல்கிறீர்கள்? நெஞ்சைத் தொட்டு உங்களால் அப்படிச் சொல்ல முடியுமா?'' என்றாள் அவள் ஆத்திரம் அடங்காமலே.



அறை வாயிற்புறம் அரவம் உணர்ந்து இருவருமே அங்கே நோக்கினர்.

பூபாலன்தான் கண்களில் மிரட்சியுடன் வாயிலருகே தயங்கி நிற்கவும் வசுந்தராவின் உள்ளம் அவனைச் சுட்டது.

கோபத்தைக் குறைப்பதாகக் கூறிவிட்டு அவளது சொந்த உணர்ச்சியைக் காட்டி அதை ஏற்றி விட்டாளோ?

கௌதமன் முகத்தைப் பார்த்தாள். நெறித்த புருவங்களும், சுருங்கிய உதடுகளும், நாடக மேடை மேல் நின்றான் என்றால் கடைசி வரிசை வரை அவன் கோபம் காண முடியும்!

இரக்கத்துடன் பூபாலனை நோக்கியவள் திகைத்தாள். காரணம் அவன் முகத்தில் அச்சம் மாறி மகிழ்ச்சி பரவி விட்டிருந்தது.

''அண்ணா!'' என்ற ஆனந்தக் கூச்சலுடன் ஓடி வந்து எழுந்து கொண்டிருந்த அண்ணனை இறுகக் கட்டிக் கொண்டான்.

தம்பியைத் தோளோடு அணைத்து ஒரு தட்டாமாலை சுற்றி நிறுத்திவிட்டு, ''போதும் போதும் என் உடையைக் கசக்காதே. நான் மீண்டும் அலுவலகம் போக வேண்டும்'' என்று கூறி அவனை விலக்கி நிறுத்தி, ''செம வெயிட் போட்டு விட்டாயடா. இந்த இல்லத்துச் சாப்பாட்டை நன்றாக வெட்டியிருப்பாய் போல!'' என்று கௌதமன், தன் பின்புற பாண்ட் பாக்கெட்டில் கைவிட்டு ஒரு பர்சை எடுத்தான்.

பர்சிலிருந்து மூன்று ஐநூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து வசுந்தராவின் மேஜை மேல் வைத்து, ''இந்த ஐந்து நாட்கள் இவன் செலவுக்கு இது. ரசீது போட்டு என் முகவ

ரிக்கு அனுப்பி விடுங்கள்'' என்று தன் சட்டைப் பையில் இருந்து ஒரு விசிட்டிங் கார்டையும் எடுத்துக் கொடுத்தான். ''இன்னும் ஒன்று. முதலில் இவன் யார் என்று தெரிந்ததுமே என் வீட்டிற்குத் தொடர்பு கொண்டு விவரம் தெரிவித்திருக்க வேண்டும். இவன் என்ன கதை சொன்னானோ அதைச் செய்யாமல் இருந்து விட்டீர்கள். ஏதோ ஒரு வகையில் இவன் காணாமல் போனது தெரிந்து, நாங்கள் தேடத் தொடங்கியிருந்தால் என்ன ஆகியிருக்கும்? அதனால் இனி அப்படிச் செய்யாதீர்கள்'' என்றவன் அவள் பதில் கூற இடமளிக்காமல், தம்பியிடம் திரும்பி, ''கிளம்பு கிளம்பு. ஏற்கனவே உன்னால் இன்று எனக்கு நிறைய நேரம் வீணாகி விட்டது. பூபால், இது உன் உடையில்லையே! போய் மாற்றிக் கொண்டு வா. ஓடு சீக்கிரம்'' என்று அவனை விரட்டினான்.

பூபால் கிழித்து வைத்திருந்த உடை நினைவு வர, ''பரவாயில்லை. அது துவைத்தது காய்ந்திருக்கிறதோ என்னவோ? அவசரம் என்றால் இப்படியே அழைத்துப் போய் விட்டு, யாரிடமாவது இதை திருப்பி அனுப்பிவிட்டு அவனைப் பெற்றுக் கொள்ளுங்களேன்'' என்று வசுந்தரா யோசனை சொல்ல, இருவருமே அவளை நன்றியுடன் நோக்கினர்.

அவளைப் போலவே, கிழிசலின் நினைவு பூபாலனுக்கு.

நேரத்தை மிச்சப்படுத்துகிறாளே என்பது கௌதமனுக்கு.

''அவர்களிடம் சொல்லிக் கொண்டு கிளம்பு. நான் முன்னே போய்க் காரை எடுக்கிறேன்'' என்று கௌதமன் திரும்பவும், அவன் கையைப் பற்றி, ''அண்ணா, என் மேல் ரொம்பக் கோபம் இல்லையே.. அங்கே சித்தி...'' என்று இழுத்தான் சிறுவன்.



''புரிகிறது. ஆனால், நான் டெலிஃபோன் செய்தது போல வேற்று ஆளை விட்டு பேசச் சொன்னதுதான் எனக்குப் பிரியமில்லாத காரியம். எப்படித் தெரியும் என்று கேட்கிறாயா? இங்கே இருப்பதாகத் தெரிந்ததுமே வேறு சத்தமே இல்லாமல் இது நடந்திருப்பதால், இப்படித்தான் இருக்கும் என்று ஊகித்து பள்ளிக்கும், உன் சித்திக்கும் டெலிஃபோன் பண்ணி உறுதி செய்து கொண்டேன். இனி, ஒரு காலத்திலும் இப்படிச் செய்யாதே. இது சட்டப்படி குற்றம். போர்ஜரி போல. அடுத்தது, அவன் யாரிடமாவது பணத்தை வாங்கிக் கொண்டு உன்னைக் கடத்த அந்தக் குரலைப் பயன்படுத்தலாமில்லையா? ம்?''

''இனி இல்லை, அண்ணா.'' என்றான் தம்பி சின்னக்குரலில்.

''சரி சரி, கிளம்பு'' என்றவன் வசுந்தராவின் பக்கம் திரும்பினான். ''இவனுக்கு இத்தனை நாள் இங்கே தங்க இடம் கொடுத்ததற்கு நன்றி மிஸ் வசுந்தரா.. மிஸ்தானே?''

அவள் லேசாகத் தலையசைக்கவும், ''ஓகே. வருகிறோம்'' என்று கிளம்பி வேக நடையுடன் சென்று விட்டான்.

''எங்கள் அண்ணன் எவ்வளவு உயரம் பார்த்தீர்களாக்கா?'' என்று பெருமையுடன் வினவினான் பூபால்.

''ஆமாம்.. உயரம்தான். அரைப் பனைமர உயரம்'' என்று ஒத்துக் கொண்டு விட்டு, ''ஆமாம்.. அவருக்குக் கோபம் இல்லை என்று முதலிலேயே எப்படி, பூபால் கண்டு பிடித்தாய்? புருவம் எல்லாம் அப்படிச் சுளித்திருந்தாரே?'' என்று உள்ளே குறுகுறுத்ததை அவசரமாகக் கேட்டாள் வசுந்தரா.

ரிக்கு அனுப்பி விடுங்கள்'' என்று தன் சட்டைப் பையில் இருந்து ஒரு விசிட்டிங் கார்டையும் எடுத்துக் கொடுத்தான். ''இன்னும் ஒன்று. முதலில் இவன் யார் என்று தெரிந்ததுமே என் வீட்டிற்குத் தொடர்பு கொண்டு விவரம் தெரிவித்திருக்க வேண்டும். இவன் என்ன கதை சொன்னானோ அதைச் செய்யாமல் இருந்து விட்டீர்கள். ஏதோ ஒரு வகையில் இவன் காணாமல் போனது தெரிந்து, நாங்கள் தேடத் தொடங்கியிருந்தால் என்ன ஆகியிருக்கும்? அதனால் இனி அப்படிச் செய்யாதீர்கள்'' என்றவன் அவள் பதில் கூற இடமளிக்காமல், தம்பியிடம் திரும்பி, ''கிளம்பு கிளம்பு. ஏற்கனவே உன்னால் இன்று எனக்கு நிறைய நேரம் வீணாகி விட்டது. பூபால், இது உன் உடையில்லையே! போய் மாற்றிக் கொண்டு வா. ஓடு சீக்கிரம்'' என்று அவனை விரட்டினான்.

பூபால் கிழித்து வைத்திருந்த உடை நினைவு வர, ''பரவாயில்லை. அது துவைத்தது காய்ந்திருக்கிறதோ என்னவோ? அவசரம் என்றால் இப்படியே அழைத்துப் போய் விட்டு, யாரிடமாவது இதை திருப்பி அனுப்பிவிட்டு அவனைப் பெற்றுக் கொள்ளுங்களேன்'' என்று வசுந்தரா யோசனை சொல்ல, இருவருமே அவளை நன்றியுடன் நோக்கினர்.

அவளைப் போலவே, கிழிசலின் நினைவு பூபாலனுக்கு.

நேரத்தை மிச்சப்படுத்துகிறாளே என்பது கௌதமனுக்கு.

''அவர்களிடம் சொல்லிக் கொண்டு கிளம்பு. நான் முன்னே போய்க் காரை எடுக்கிறேன்'' என்று கௌதமன் திரும்பவும், அவன் கையைப் பற்றி, ''அண்ணா, என் மேல்



ரொம்பக் கோபம் இல்லையே.. அங்கே சித்தி...'' என்று இழுத்தான் சிறுவன்.

''புரிகிறது. ஆனால், நான் டெலிஃபோன் செய்தது போல வேற்று ஆளை விட்டு பேசச் சொன்னதுதான் எனக்குப் பிரியமில்லாத காரியம். எப்படித் தெரியும் என்று கேட்கிறாயா? இங்கே இருப்பதாகத் தெரிந்ததுமே வேறு சத்தமே இல்லாமல் இது நடந்திருப்பதால், இப்படித்தான் இருக்கும் என்று ஊகித்து பள்ளிக்கும், உன் சித்திக்கும் டெலிஃபோன் பண்ணி உறுதி செய்து கொண்டேன். இனி, ஒரு காலத்திலும் இப்படிச் செய்யாதே. இது சட்டப்படி குற்றம். போர்ஜரி போல. அடுத்தது, அவன் யாரிடமாவது பணத்தை வாங்கிக் கொண்டு உன்னைக் கடத்த அந்தக் குரலைப் பயன்படுத்தலாமில்லையா? ம்?''

''இனி இல்லை, அண்ணா.'' என்றான் தம்பி சின்னக்குரலில்.

''சரி சரி, கிளம்பு'' என்றவன் வசுந்தராவின் பக்கம் திரும்பினான். ''இவனுக்கு இத்தனை நாள் இங்கே தங்க இடம் கொடுத்ததற்கு நன்றி மிஸ் வசுந்தரா.. மிஸ்தானே?''

அவள் லேசாகத் தலையசைக்கவும், ''ஓகே. வருகிறோம்'' என்று கிளம்பி வேக நடையுடன் சென்று விட்டான்.

''எங்கள் அண்ணன் எவ்வளவு உயரம் பார்த்தீர்களாக்கா?'' என்று பெருமையுடன் வினவினான் பூபால்.

''ஆமாம்.. உயரம்தான். அரைப் பனைமர உயரம்'' என்று ஒத்துக் கொண்டு விட்டு, ''ஆமாம்.. அவருக்குக் கோபம் இல்லை என்று முதலிலேயே எப்படி, பூபால் கண்டு பிடித்தாய்? புருவம் எல்லாம் அப்படிச் சுளித்திருந்தாரே?'' என்று உள்ளே குறுகுறுத்ததை அவசரமாகக் கேட்டாள் வசுந்தரா.

''அதுவாக்கா? அண்ணனுக்கு நிஜக் கோபம் என்றால் முகம் கல்மாதிரி ஆகிவிடும். குரலும் அப்படித்தான். வேடிக் கைக் கோபம் என்றால்தான் இப்படிச் சுளிப்பார்... '' என்று முன் ஹார்ன் ஒலி கேட்கவும், ''வரட்டுமா அக்கா?'' என்று விடை பெற்றுக் கொண்டு ஓடினான் சிறுவன்.

பரவாயில்லை, எப்படிப் பெற்றாலும், அண்ணன் என்று அழைக்கச் செய்தாலும், பிள்ளையிடம் பாசம் இருக்கி றது. அது போதும் என்று நிம்மதியுடன் வசுந்தரா மற்ற வேலைகளைக் கவனிக்கலானாள்.

ஆனால், அவளது நிம்மதியை உடைப்பது போல மறு நாளே மீண்டும் அடைக்கலம் கேட்டு அன்பு இல்லத்துக்கு வந்து சேர்ந்தான் அந்தச் சிறுவன் பூபாலன்.

## 5

மறுநாள் காலையில் அன்பு இல்லத்துள் நுழையும் போதே வசுந்தரா சற்று வெறிச்சென்று உணர்ந்தாள். பார்த்த வர்கள் எல்லோரும் பாசமும் பிரியமுமாக புன்னகையும் முகமனும் தந்தார்கள்தான். ஆனால் கையில் பூவும் கண்ணில் குறும்புமாக எதிர்கொள்ளும் பூபாலனைக் காணாதது கொஞ் சம் நெருடத்தான் செய்தது.

பெரிய வீட்டுப் பிள்ளை. வளமும் வசதியுமாகக் கொட் டமடித்துக் கொண்டிருப்பான். வேறு விதியின்றி இங்கே இருப்பவர்களையே, இன்னும் எப்படி எப்படியோ இவர்கள் வாழ்ந்திருக்கலாம் என்று அவ்வப்போது மனம் பரிதவிப்ப வள். எப்படி எப்படியோ இருப்பவன் இங்கே இருக்கவில் லையே என்று எண்ணுவது எவ்வளவு முட்டாள்தனம்.



தன்னைத்தானே கடிந்து கொண்டு வேலையில் ஈடுபட் டவளின் எதிரில் வெளுத்த முகமும் இறுகிய தோற்றமுமாக பூபாலன் வந்து நின்றான்.

அவனைக் கண்டதும், ''ஹாய்!...'' என்று உற்சாகமாகத் தொடங்கிய வசுந்தரா, அவன் முகத்தோற்றம் பார்த்தும், ''என்ன பூபால்?'' என்று பரிவுடன் விசாரித்தாள்.

இந்த கேள்விக்காகவே காத்திருந்தவன் போலச் சிறுவ னின் கண்களில் கண்ணீர் பெருகலாயிற்று.

கீழே விழுந்து அடிபட்டால் கூட, வலியால் ஏற்படுகிற கண்ணீரைக் கூட அண்ணனுக்குப் பிடிக்காது என்று அடக்கு கிற பையன் என்பதை ஐந்து நாள் பழக்கத்தில் அறிந்திருந்த தால், கையிலிருந்த வேலையை அடுத்தவரிடம் ஒப்புவித்து விட்டு, பூபாலனைக் கூட்டிக் கொண்டு உள் அறை ஒன்றுக் குச் சென்றாள் வசுந்தரா.

''என்னடா? என்னம்மா நடந்தது?'' என்று கனிவுடன் வினவினாள்.

''அண்ணனுக்கு இப்போது என் மேல் நிஜமான கோபமே வந்து விட்டது, அக்கா?'' என்று விசும்பினான் சிறுவன்... ''இனிமேல் அவர் என்னோடு பேசவே மாட் டார்!... '' என்றவனுக்கு மீண்டும் அழுகை வந்தது. ''இனி மேல் நான் எப்போதும் இங்கேதான் இருப்பேனோ என்று நினைக்கிறேன்...''.

''அப்படியெல்லாம் நடக்காது. உன் அண்ணன் உன்னை விட்டுப் பிரிந்து இருக்கவே மாட்டார்.'' என்று சிறுவனைத் தேற்ற முயன்றாள் வசுந்தரா.

பெரிதாக மூக்கை உறிஞ்சினான் பூபால். ''அதெல்லாம் இல்லை அக்கா... நான்... நான் அந்தக் குண்டோதரி, பூதம்,

பிசாசை ரொம்ப மோசமாகப் பேசிவிட்டேன். இனி அண்ணன் என்னைச் சேர்த்துக் கொள்ளவே மாட்டார்...'' என்று மீண்டும் விசும்பினான்.

அந்த வீட்டு அமைப்பே வசுந்தராவுக்கு ஒன்றும் பிடிபடவில்லை. தனக்கு யாருடனோ பிறந்த பிள்ளையை வீட்டுக்குக் கூட்டி வந்து வளர்க்கிறான் கௌதமன். தம்பி என்று சொல்லிக் கொண்டாலும், உண்மையை மனைவி அறியாதிருக்க வாய்ப்பில்லை. ஆனால், கணவனை எதிர்த்து போர்க்கொடி தூக்காமல் அவள் எப்படி சகித்துப் போகிறாள்? பூபாலனின் பேச்சைப் பார்த்தால் அவள் வாயில்லாப் பூச்சியாகவும் தெரியவில்லை! அல்லது, தன் ஆத்திரத்தை, இந்தச் சிறுபையனை நோகடிப்பதின் மூலம் தீர்த்துக் கொள்கிறாளோ!

பூபாலனின் கண்களைத் துடைத்துவிட்டு, கொஞ்சம் பானைத் தண்ணீர் அருந்தச் செய்தாள்.

ஒருவாறு அழுகை நிற்கவும், அவள் அவனை மீண்டும் தேற்ற முயல, சிறுவன் நிராசையோடு தலையசைத்தான்.

''உங்களுக்குத் தெரியாதுக்கா. அண்ணனுக்கு அந்தம்மாவைப் பிடிக்காவிட்டாலும், அவர்களிடம் கோபமாகப் பேச விடவே மாட்டார்! அவர்களைப் போய்...! அக்கா, அங்கே நடந்ததை நான் முதலில் சொல்கிறேன், அதன்பிறகு நீங்களே சொல்லுங்கள்,'' என்று தொடங்கி நிகழ்ந்தவை அனைத்தையும் ஒன்று விடாமல் அவளிடம் கூறினான்.

பொதுவாக, விடுமுறையென்று பூபாலன் வீடுவரும் போது, தான் இல்லாமல் அண்ணன் அவனைத் தனியாக வீட்டுக்கு அனுப்புவது இல்லை. கூடவே அண்ணன் இருந்தால், 'அந்தம்மா' திட்டாமல் கொள்ளாமல் வாயைமூடிக் கொண்டு போய்விடுவாள்!



அன்றைக்கும், அதாவது முன்தினம் - இல்லத்திலிருந்து நேராக வீட்டுக்கு அழைத்துச் சென்று, பூபாலனின் அறை வரை கூடச் சென்று, ''வெளியே சுற்றி அம்மாவிடம் டோஸ் வாங்காதே!'' என்று எச்சரித்துவிட்டுத் தான் சென்றான்.

தன்னை 'அண்ணன்'னென்று அழைக்கச் செய்பவன், மனைவியை 'அண்ணி' என்றல்லவா அழைக்கச் செய்திருக்க வேண்டும்? ஒருவேளை, அன்னையாக உணர வைப்பதற்காக அம்மா என்று குறிப்பிட்டிருப்பானோ?

பூபாலன் மேலே பேசவே வசுந்தராவின் கவனம் மீண்டும் அவனிடம் சென்றது.

கௌதமன் வீட்டில் இராவிட்டால், பெரும்பாலும் உணவை அறைக்கே கொண்டுவரச் செய்வது பூபாலனின் வழக்கம்.

அன்று வேலைக்காரப் பையன் அப்படி உணவைக் கொண்டு வரும் போதே, 'அந்தப் பீடை வந்திருக்கும்!' என்று அவனிடம் நக்கல் பேசியிருக்கிறாள்.

வேலைக்காரன் அதை அப்படியே பூபாலனிடம் ஒப்படைத்து விட்டு, ''நீங்க வெளியே வராதீங்க, சின்னய்யா, நாளைக்கு அம்மா தூங்கின பெறகு நாம் வெளையாடலாம்'' என்று விட்டுப் போனான்.

இரவு வெகுநேரம் காத்திருந்தும், கௌதமன் வந்த அசைவு கேட்கவே இல்லாமல் பூபாலன் தூங்கிவிட்டான்.

ஏற்கெனவே பகல் தூக்கம் ஒன்றுபோட்டு, இரவும் உறங்கிவிட்டதால் பூபாலனுக்கு விடிகாலையிலேயே விழிப்பு வந்துவிட்டது.

வெளியே அண்ணன்காரரைக் கண்டுவிட்டதால் ஆவலாக விடிவதற்காகக் காத்திருந்துவிட்டு, ஐந்தே முக்கால் ஆனதும் அண்ணனின் அறைக்கு ஓடினான்.

அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த அண்ணனை உலுக்கி எழுப்பி ''அண்ணா; கிளம்புங்கள், மணி ஆறாகப் போகி றது. அப்புறம் நீச்சல் குளத்தில் ஒரே கூட்டமாகி விடும்.'' என்று அவனை அவசரப்படுத்தினான்.

பூபாலன் விடுமுறைக்கு வீடு வந்து விட்டால் அது ஒரு வழக்கம். காலையிலேயே நீச்சல் குளத்துக்குப் போய் ஒரும ணிநேரம் நன்றாக நீரில் துழாவிவிட்டு வருவார்கள். பெரிய ரப்பர் பந்து எடுத்துப் போய் விளையாடுவார்கள்.

ஆனால், அன்று அண்ணனுக்கு எழுந்திருக்கவே மனம் இல்லை.

தம்பி மிகவும் முயன்று எழுப்பவும், லேசாகக் கண் ணைத் திறந்து கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, ''என்ன மேன் நீ? இரவு நான் படுக்க எத்தனை மணி ஆயிற்று தெரியுமா? இரண்டு, இப்போது ஆறுகூட ஆகவில்லை, ஒரு நாலுமணி நேரம் கூடத் தூங்கவிடாமல், இரக்கமே இல்லாமல் எழுப்புகி றாயே! ஓடு போ!'' என்று ஒரு தலையணையைத் தூக்கித் தம்பி மேல் வீசினான்.

இந்த விளையாட்டு, இருவரும் அடிக்கடி விளையாடு வதுதான். எனவே, பூபாலனும் உற்சாகத்தோடு அந்தத் தலை யணையை எடுத்து அண்ணன் மேல் வீசினான்.

படுத்துக் கொண்டே அண்ணன் வீச, அவன் வீசியது உடம்பில் பட்டுவிடாமல் இங்கும் அங்கும் ஓடியபடி பூபா லும் வீச ஒரே வேடிக்கையாக இருந்தது.

கடைசியாக விளையாட்டு வேகத்தில், நீச்சல் குளத்திற் கென்று கொண்டு வந்திருந்த பந்தை எடுத்து பூபாலன் பல மாக வீசி விட்டான்.



பந்து துள்ளிக் குதித்து, திறந்திருந்த கதவின் வழியே வெளியே சென்று, ஹாலில் அலங்காரமாய் வைத்திருந்த பூஜாடி மேல் பட, ஜாடி கீழே விழுந்து உடைந்து விட்டது.

விலை உயர்ந்த ஜாடிதான். ஆனால் பூபால் ஒன்றும் வேண்டுமென்று போட்டு உடைக்கவில்லையே.

வேண்டுமென்று செய்யவில்லை, தெரியாமல்தான் பட் டுவிட்டது என்று பூபாலன் எவ்வளவோ சொல்ல முயன்றும் விடாமல் காச் மூச்சென்று கத்தினாள் அந்த குண்டோதரி அம்மாள்.

கடைசியாக, ''பெற்றவள் புத்திதானே பிள்ளைக்கு இருக்கும்? அவள் ஒரு குடிகேடி. நீயும் இந்தக் குடும்பத்தை நாசமாக்காமல் விடப்போவதில்லை; தாயைப் போலப் பிள்ளை!'' என்று பூபாலனுடைய இல்லாத தாயை இழுத்து வைத்து அவள் வசைபாடவும் அவனுக்கும் கோபம் பற்றிக் கொண்டு வந்து விட்டது.

''தப்பா அக்கா?'' என்று பெரிய விழிகளை உயர்த்தி பூபால் வினவவும், ''இல்லையடா.'' என்று அவன் தலை யைக் கோதிவிட்டாள் வசுந்தரா.

''என் அம்மா உயிரோடு இருந்து, அவர்களோடு இர் தம்மா சண்டை போட்டிருந்தால் அது வேறே. செத்துப் போனவர்களைப் பற்றி பேசலாமாக்கா? அது பாவம் இல் லையா? அம்மாவைப் பற்றி இன்றும் கூடக் கன்னாபின்னா என்று என்னென்னமோ வசைமொழிகள்! கடைசியாக எனக் குப் பொறுக்க முடியாமல் போய்விட்டது. ''நீதான் பேய் இப்படி எல்லாம் காண்டாமிருகம் போலக் கத்துவதால்தான் உன் புருஷன் உன்னைவிட்டு இன்னொருத்தியிடம் போய் என்னைப் பெற்றிருக்கிறார்! என்று கத்திவிட்டேன்''.

வசுந்தராவின் முகம் அதிர்ச்சியைக் காட்டவும், ''அந்த மாதிரி நான் பேசியது தப்புதான். அதுவும் அவ்வளவு பெரியவர்களிடம் அப்படிப் பேசியது பெரிய தப்புதான். நான் பந்தின் பின் வெளியே வந்ததும் அண்ணன் 'பாத்ரூ'முக்குள் போயிருப்பார் போல அவரும் அப்போதுதான் வெளியே வந்து நான் பேசியதைக் கேட்டுவிட்டார்! அப்படியே முகம் பாறை மாதிரி ஆகி ''வாயைமூடு, கழுதை! முதலில் போ இங்கிருந்து!'' என்று அடிக்குரலில் அதட்டினார். அண்ணன் என்னிடம் அந்த மாதிரிக் குரலில் பேசியதே கிடையாது...'' என்று மீண்டும் கண்ணீர் பெருக்கினான் சிறுவன்.

என்னதான் பூபாலிடம் அன்பும் பிரியமும் இருந்தாலும், அவன் பேசியது மிகவும் அதிகப்படி என்ற எண்ணமும் வசுந்தராவுக்கு இருக்கவே, மெல்ல அவன் தோளைத் தட்டிக் கொடுத்ததற்கு மேல் அவள் ஆறுதலாக எதுவும் பேசவில்லை.

''முதலில் அண்ணன் 'போ இங்கிருந்து' என்றதும் நான் என் அறைக்குத் தான் ஓடிப்போனேன். பிறகுதான் வீட்டை விட்டே போகச் சொன்னார் என்று புரிந்தது... ஆமாம் அக்கா வீட்டை விட்டுத்தான். அண்ணன் ஒருவரிடம் கோபப்பட்டு விட்டால் அப்புறம் அதை லேசில் மாற்றிக் கொள்வதே கிடையாது. இப்போது என்னிடம் கோபப்பட்டு விட்டாரில்லையா? இனி என்னையும் வெறுத்துவிடுவார். சொந்தம் என்று அங்கே அண்ணன் மட்டும்தான் என்னிடம் பிரியமாய் இருப்பது. அவரும் வெறுத்து விட்டால் என்னால் அங்கே எப்படி இருக்க முடியும்? அதுதான் இங்கே ஓடி வந்து விட்டேன். எப்படியும், அம்மா இல்லாத நான் அனாதைதானே, அக்கா?'' என்றான் சோகமே உருவாக.

அப்படி ஒன்றும் கௌதமன் பூபாலனை ஆதரவற்று விட்டுவிட மாட்டான் என்பது வசுந்தராவுக்கு நிச்சயம்.



ஆனால் அதன் காரணத்தை அப்படியே பூபாலனிடம் சொல்ல முடியாமல், ''அண்ணன் அந்த நேரம் கோபப்பட்டிருப்பார். அவ்வளவுதான். எல்லாம் சரியாகிப் போய்விடும் பார்.'' என்று தேற்றி, மற்றவர்களோடு சேர்ந்து வழக்கமான அலுவல்களில் ஈடுபடும்படிக் கூறி அனுப்பிவைத்தாள்.

மீண்டும் ஆஃபீஸ் அறை சென்று தன் வேலையைத் தொடர்ந்தவளுக்கு, முன்தினம் கௌதமன் சொன்னது நினைவு வந்தது.

முதலிலேயே தெரிவித்திருக்க வேண்டும் என்றானே!

மணியைப் பார்த்தாள். மாலை நெருங்கிக் கொண்டிருந்த நேரம். பூபாலன் வீட்டில் தகராறு நடந்தது காலை வேளையில். இவ்வளவு நேரம் அவனைக் காணவில்லை என்று தேடத் தொடங்கியிருப்பார்களோ?

நீச்சல் குளம், தலையணையை எறிந்து அந்தச் சிறுவனுக்கு நிகராக இணை சேர்ந்து விளையாடுவது எல்லாம் எண்ணிப் பார்க்கும்போது கௌதமன் அவள் நினைத்த அளவு கெட்டவன் இல்லையோ என்று வசுந்தராவுக்குத் தோன்றியது. பிள்ளையைக் கூட்டி வந்து வளர்ப்பதோடு கடமை தீர்ந்தது என்று இல்லாமல் அவனது மன நலனும் பேணுகிறானே!

எப்படியும், சின்னப் பிள்ளையிடம் கோபிக்க வேண்டாம் என்று ஒரு வார்த்தை சொல்லி, அவன் இங்கிருப்பதைத் தெரிவிக்க வேண்டியது கடமை என்று எண்ணியவளாய், வசுந்தரா கௌதமனுக்கு டெலிஃபோன் செய்தாள்.

இந்த முறையும் அந்தச் செயலாளர் பெண்தான் டெலிஃபோனை எடுத்தாள். ஆனால், வசுந்தராவின் பெயரைக் கேட்டதுமே, ''இதோ ஒரு வினாடி பொறுங்கள், மேடம். நீங்கள்

அழைத்ததுமே கூப்பிடச் சொல்லிச் சேர்மன் சொல்லியிருக்கிறார்.'' என்றாள்.

''ஹலோ'' என்று கௌதமனின் குரல் கேட்டதுமே, ''நான் அழைப்... நான் பேசுவேன் என்று எப்படித் தெரியும்?'' என்று வினவினாள் வசுந்தரா.

''ஒரு சின்ன ஊகம் தான். கழுதை கெட்டால் குட்டிச்சுவர்'' என்பது போல மிகவும் சாதாரணமான விஷயம். பூபால் அங்கேதானே இருக்கிறான்?'' என்றான் அவன்.

இவன் தம்பி கழுதையாக இருக்கலாம். அதற்காக என்னைக் குட்டிச்சுவர் என்பதா என்று உள்ளூர மூண்ட எரிச்சலை அடக்கிக் கொண்டு, ''ஆமாம்'' என்றாள் அவள் சுருக்கமாக.

''ஒரு முக்கிய வேலையில் இருக்கிறேன். ரொம்பவும் முக்கியமான ஸ்டேட்மென்ட்' என்று அவசரமாகத் தயாரித்துக் கொண்டு இருக்கிறோம். இப்போது என்னால் பாதியில் வர முடியாது. இன்றைய நிலையில் அவனைத் தனியாக டிரைவரோடு வீட்டுக்கு அனுப்பவும் முடியாது... அனுப்பினால், இடையிலேயே இறங்கி மீண்டும் எங்கேனும் ஓடினாலும் ஓடிவிடுவான். கூடவே உங்கள் இல்லத்துச் சட்டதிட்டங்களை வேறு பார்த்தாக வேண்டும். அத்தோடு, இந்த வேலை எப்போது முடியும் என்றும் சொல்வதற்கில்லை. இப்போது என்ன செய்யலாம், சொல்லுங்கள்.'' என்று அவளையே கௌதமன் யோசனை கேட்டான்.

அதென்ன 'இல்லத்துச் சட்டதிட்டம்' என்று ஓர் இடைச்செருகல் என்று எண்ணிய போதும், அவனது இக்கட்டு அவளுக்குப் புரிந்தது. தைரியமாகப் பூபால் அந்த வீட்டில் அடியெடுத்து வைக்க வேண்டுமானால், இப்போது முக்கியமாக இன்று, அவனுக்கு ஒரு துணை தேவை.



கையிலிருந்த அவனது விசிடிங் கார்டைப் பார்த்துவிட்டு, ''உங்கள் வீடு என் வீட்டுக்குச் செல்லும் வழியில் தான் இருக்கிறது. உங்களுக்கு சம்மதமானால், வேலை முடிந்து கிளம்பும் போது நானே அவனை உங்கள் வீட்டில் விட்டு விட்டுப் போகிறேன்.'' என்று உதவ முன் வந்தாள் வசுந்தரா.

''ரொம்...ப நன்றி.'' என்றான் அவன் மனப்பூர்வமாக. எத்தனை மணிக்கு வேலை முடிந்து, எப்படி வருவாள் என்பதைத் தெரிந்து கொண்டு, மீண்டும் ஒருதரம் நன்றியுரைத்து டெலிஃபோனை வைத்தான் அவன்.

அண்ணன் வரச் சொன்னான் என்பதிலேயே பூபாலும் குஷியாகி விட்டான். ஆட்டோவில் செல்லும் வழியெல்லாம் எங்கள் அண்ணன் அப்படி எங்கள் அண்ணன் இப்படி என்று வளவளத்தவன், வீட்டை அடைந்ததும், வெளியே அண்ணனின் கார் இல்லை என்று கண்டதும் அமைதியாகி விட்டான்.

ஆனால், கௌதமன் வீட்டிற்கும் டெலிஃபோன் செய்து சொல்லி இருக்க வேண்டும். ஆட்டோவிலிருந்து அவர்கள் இருவரும் இறங்கியதுமே, பக்கவாட்டு வரவேற்பறைக்கு அழைத்துச் சென்று உட்கார வைத்தார்கள். குளிர்பானமும் வந்தது.

''சத்..தம், அக்கா. இல்லாவிட்டால் பூதம் வந்து ஏதாவது கத்தும். அண்ணன் வரும்வரை பேசாமல் இங்கேயே இருந்து விடலாம்.'' என்ற சிறுவனிடம், அதிக நேரம் என்னால் இங்கே இருக்க முடியாது என்று எப்படிச் சொல்வது என்று வசுந்தரா தயங்கிக் கொண்டு இருந்த போதே வாயிலில் கார் நிற்கும் ஓசை கேட்டது.

''அண்ணன்!'' என்று துள்ளி எழுந்தவன் உடனே மௌனமாகி, சிறு கவலையுடன் வாயிலை எட்டிப் பார்த்தான்.

வசுந்தராவிடம் புன்னகைத்து, ''வாருங்கள்'' என்று முகம்மலர உரைத்து விட்டுத் தம்பியிடம் திரும்பினான் கௌதமன்.

''ஸா... ரிண்ணா'' என்றவனிடம், சிறு கண்டிப்புடன், ''நீ செய்திருக்கும் வேலைக்கு, உனக்கு ஒன்றும் கொடுக்கக் கூடாது. ஆனால் ஜப்பான் போகு முன்பே ஏற்பாடு செய்தது; அதனால் தருகிறேன் உன் அறைக்குப் போய்ப் பார். உனக்குப் பிரியமான ஒன்று இருக்கிறது.'' என்று கூறி அனுப்பி வைத்தான்.

''நான் கிளம்புகிறேன்'' என்ற வசுந்தராவிடம், ''சற்று உட்காருங்கள் வசுந்தரா நான் உங்களிடம் ஒன்று'' என்று அவன் தொடங்குமுன் ஆனந்தக் கூச்சலுடன், கையில் ஓர் அழகிய நாய்க் குட்டியுடன் பூபாலன் ஓடி வந்தான்.

''அண்ணா, தாங்க்ஸ் அண்ணா, ஆயிரம், பத்தாயிரம், லட்சம் தாங்க்ஸ் அண்ணா, அக்கா பாருங்கள், என் அண்ணன் பரிசை! நான் சொல்லவில்லை, அண்ணன் ரொம்ப நல்லவர் என்று. இதோ பாருங்கள் கண்ணை உருட்டிக் கொண்டு என்னைப் பார்க்கிறது பாருங்கள்.'' என்று ஆர்ப்பரித்தான் சிறுவன்.

கறுப்பு பாமரேனியன்குட்டி! ரசனையுடன் அவன் மகிழ்ச்சியில் வசுந்தரா பங்கு காட்டினாள். ஓர் இளகிய புன்னகையுடன் தம்பியின் குதூகலத்தைப் பார்த்திருந்து விட்டு, ''சரி, சரி போதும், அதை உன் அறைக்கு எடுத்துப்போ. அங்கே உன் அறை வராண்டாவிலேயே ஒரு சிறு நாய் வீடு வைத்திருக்கிறேன். காலை மாலை வெளியே அழைத்துச் செல்லும் நேரம் தவிர நாய்க்குட்டியை அங்கேயே வைத்துக்



கொள். வீட்டுக்குள் அலையவிட்டு அம்மாவிடம் வாங்கிக் கட்டிக் கொள்ளாதே.'' என்று எச்சரித்தான் கௌதமன்.

சட்டென்று அமைதியாகி, இங்குமங்கும் பார்வையைச் செலுத்திவிட்டு, ஓசையற்று, மாடியை நோக்கி விரைந்தான் பூபாலன்.

ஆனால் அதற்குள்ளாக, உள்ளிருந்து ஐம்பது வயதுப் பெண்ணொருத்தி எதிர் வந்துவிட, வினாடி காலம் தயங்கி விழித்து விட்டு, உடனேயே அவளைச் சுற்றிக் கொண்டு ஓடிச் சென்று விட்டான்.

வேகமாக மாடியேறிய சிறுவனை வெறுப்புடன் நோக்கிவிட்டு, வரவேற்பு அறைக்குள் எட்டிப் பார்த்தாள் அந்தப் பெண்மணி.

வசுந்தராவின் காது, கழுத்து, கைகளை ஆராய்ந்து விட்டு, உதட்டை லேசாகப் பிதுக்கி, ''யார் இவள்?'' என்று கௌதமனிடம் வினவினாள்.

''ஆசிரமத்திலிருந்து பூபாலைக் கொண்டுவிட வந்தவர்கள், பெயர் வசுந்தரா. இவர்கள் என் தாயார், வசுந்தரா.'' என்று இருவருக்குமிடையே அறிமுகம் செய்து வைத்தான் கௌதமன்.

''வணக்கம்'' என்று வசுந்தரா கரம் குவித்ததைக் கண்டு கொள்ளாமல், ''இன்றைக்காவது ஒழுங்காக வீட்டிலே சாப்பிடுவாயில்லை? தவிசுகிட்டே பரோட்டாவும் குருமாவும் செய்யச் சொல்கிறேன்.'' என்று மகனிடம் கூறிவிட்டுத் திரும்பி நடந்தாள்.

செல்லும்போது, ''போன சனியைத் திரும்பக் கொண்டு வந்து விட்டது. பனாதை...'' என்று அவள் முணுமுணுத்தது தெளிவாகவே காதில் விழுந்தது.

உண்டு செழித்த உடலை ஆட்டி அசைத்து அவள் செல்வதைப் பார்த்ததுமே, பூபாலன் குறிப்பிட்ட 'குண்டோதரி' இவள்தான் என்பது வசுந்தராவுக்குத் தெளிவாகிவிட்டது. அவள், கௌதமனுடைய மனைவி என்று எண்ணினாளே! ஓர் அன்னியப்பெண், வணக்கம் சொன்னால் அதை ஏற்கும் பண்பே இல்லையே! பனாதையாமே! அறிமுகம் செய்து வைத்த மகனுக்கும் இது அவமரியாதை தானே?

கௌதமனைத் திரும்பிப் பார்த்தபோது அவன்முகம் இறுகியிருந்தது.

''உட்காருங்கள்'' என்று சோபாவைக் காட்டியவன், அவள் உட்கார்ந்ததும், எதிரில் தானும் அமர்ந்தான்.

''எனக்கு ஓர் அலைச்சலையும், அதற்கான காலவிரயத்தையும் தவிர்த்திருக்கிறீர்கள். அதற்கு முதலாவதாக என் நன்றியை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்றான்.

''எனக்கு வீடு செல்லும் வழிதான். அதனால் பெரிதாக நன்றி சொல்ல அவசியம் இல்லை'' என்று உரைத்துவிட்டு அடுத்த வார்த்தைக்காகக் காத்திருந்தாள் வசுந்தரா.

தாயின் போக்கிற்காக மன்னிப்பு வேண்டுவானோ என்று அவள் எதிர்பார்க்க, அவன் வேறு பேசினான். ''பாருங்கள், வசுந்தரா, இந்த வீட்டில் பூபாலுக்கு நிறைய பிரச்னைகள் உண்டு. இப்போது நீங்களே பார்த்தீர்கள்... ஆனால் அவர்கள் பூபாலனை நேசிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் நியாயம் ஆகாது.''



ஏன் பிடிக்காது? எப்படிப் பிறந்திருந்தாலும் பேரப்பிள்ளையை ஒரு பெண்ணுக்கு எப்படி பிடிக்காமல் போகும்? ஒரு வேளை, மகனுக்கு அவள் பெரிய சீர் சௌத்தியுடன் பெண் பார்த்திருக்க, பூபாலன் விஷயத்தினால் அது கலைந்து விட்டதோ?

ஏதேதோ நினைத்த போதும், இதில் எதைக் கேட்பதும் அவனது சொந்த வீட்டு விவகாரங்களில் மூக்கை நுழைப்பது போல ஆகும் என்பதால் வசுந்தரா மவுனமாகவே, கௌதமனின் பேச்சைக் கேட்டிருந்தாள்.

''... இப்போதைக்குப் பூபாலனுக்கும் இதைப் புரிந்து கொள்வது சாத்தியம் இல்லைதான். ஆனாலும் அவனது பிரச்னைகளை அவன் அவனாகத்தான் சமாளித்தாக வேண்டும். சிறுவயதில் இருந்து அந்தப் பயிற்சி இல்லை என்றால் பிற்பாடு தொழிலைக் கட்டிக் காப்பது கடினம். அதனால், இந்த விஷயத்தில் பூபாலுக்கு நீங்கள் கொஞ்சம் உதவ வேண்டும்.''

''நானா? எப்படி?'' என்று புரியாமல் கேட்டாள் வசுந்தரா.

''பூபால் தன் பிரச்னைகளைத் தானே தீர்த்து, தன்னம்பிக்கையோடு வளர வேண்டுமானால், இம்மெனுமுன் ஓடி வந்து அவன் ஒப்பாரி வைப்பதை நீங்கள் ஊக்குவிக்கக் கூடாது.'' என்று கௌதமன் தொடங்கிய விதத்திலேயே வசுந்தராவுக்கு ஆத்திரம் உண்டாகிவிட்டது.

இவன் என்ன பேசுகிறான்?! ஊரில் உள்ள சின்னப் பிள்ளைகளை எல்லாம் அழைத்து ஒப்பாரி வையுங்கள்

என்று கேட்டு அவர்களின் முதுகெலும்பை எல்லாம் உடைப் பதுதான் அவளது வேலை என்று எண்ணி விட்டானா?

''...கண்ட சிறு காரணங்களுக்காக, அவன் அங்கே ஓடி வந்தால், உங்கள் அனாதை இல்லத்தில் அவனுக்கு அடைக்க லம் அளிக்கக் கூடாது... ''

கண்ட சிறு காரணமா? அந்தப் பிஞ்சு மனம் நொந்து நின்றது சிறு காரணமா? அவன் அப்படி நோவதற்கே காரண மாய் இருந்துவிட்டு இப்படிப் பேச இவனுக்கு என்ன திண் ணக்கம் இருக்க வேண்டும்?

பூபாலன், அன்பு இல்லத்துக்கு வந்த இரு சமயங்களி லும், அவனை வீட்டுக்குத் திருப்பி அனுப்புவதில் வசுந்தரா மிகவும் உறுதியோடு இருந்து அனுப்பியும் வைத்தாள். ஏன், இப்போது கூட்டி வந்துவிட்டதே அவள்தானே?

ஆனால், அவன் அப்படி இல்லத்தை நாடி ஓடி வந்ததே அவளது பிழைபோலக் கௌதமன் பேசவும் அவளுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது.

சட்டென எழுந்தவள், ''ஆசிரமத்துக்கு வருகிறவ னுக்கு அடைக்கலம் கொடாமல் அடித்து விரட்டும்படி என் னிடம் கேட்பதை விட, உங்கள் பிள்ளைக்கு இந்த வீட்டை விட அனாதை இல்லம் மேல் இருக்கிற உணர்வு ஏற்படாதி ருக்க என்ன செய்ய வேண்டுமோ அதைப் பாருங்கள். முத லில், சொந்த வீட்டிலேயே அவன் அனாதையாக உணராதி ருக்கச் செய்யுங்கள்!'' என்று சினத்துடன் மொழிந்துவிட்டு, அவன் ஏதோ பேச முயல்வதைக் கவனியாதவள், போல விரைந்து, அந்த வீட்டை விட்டு வெளியேறிச் சென்றுவிட் டாள்.



# 6

அடுத்த சில நாட்கள் வசுந்தராவின் அந்த ஆத்திரம் கனன்று கொண்டே இருந்தது.

என்னமோ அவளாக பூபாலனை வரவழைத்துக் கோழையாக்கிவிட்ட மாதிரிப் பேசிவிட்டானே!

முதல்நாள், அவள்மட்டும் பூபாலனைத் திருப்பி அனுப் பியிருந்தால், அவன் எங்கே போய் என்ன கதியாயிருப்பான் என்று யார் சொல்ல முடியும்?

அந்த இரண்டாம் முறையும் அவளா அழைத்தாள்? அவர்கள் பாட்டில் அம்மாவும் பிள்ளையுமாக அந்தப் பிஞ்சு மனதை நோகடித்து விரட்டிவிடுவது! பிறகு அடுத்தவர் மேல் பழியைப் போடுவது! என்ன நியாயம் இது?

ஆனால் நியாயத்துக்கும் அவனுக்கும் என்றைக்குத் தான் சம்பந்தம் இருந்தது?

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம். கௌதம னின் நியாய புத்திக்கு அவனது முதல் டெலி∴போன் பேச்சே போதுமே!

இருக்கட்டும். இனி இந்த இருவரில் யார் வந்தாலும் விரட்டி அடித்து விடுகிறேன்!

வசுந்தரா தன்னளவில் தீர்மானமெல்லாம் பெரிதாகத் தான் செய்து வைத்தாள். ஆனால், அன்று, அந்த இருவருமே சேர்ந்து வந்து நின்றபோது யாரையுமே விரட்டியடிக்க முடி யாத சூழ்நிலையாக இருந்தது.

அன்பு இல்லத்தைப் பொறுத்தவரையில் சிரமதானம் - கூலியில்லாமல் வேலை செய்து தர நிறையப் பேர் உண்டு.

சனி ஞாயிறுகளில் அவர்கள் வந்து, பெரிய காய்கறித் தோட்டம் திருத்தி, ஒட்டடை அடித்து, மொத்தத்துணி துவைத்துக் கொடுத்து விட்டுப் போனால், மற்ற நாட்களில் சிறு அளவில் இந்த வேலைகளை இல்லத்து ஆட்களே பார்த்துக் கொள்வார்கள். தோட்டத்துக்குத் தண்ணீர்மட்டும் பாய்ச்சி, அவரவர் துணிகளை அவரவரே அலசிப் போட்டு, தரையை மட்டும் பெருக்கி... என்று இப்படி.

இந்த சனி ஞாயிறுகளில் கூட வீட்டில் எல்லோருடனும் சேர்ந்திருப்பதோ ஓய்வெடுப்பதோ இல்லையே என்று வசுந்தராவுடைய பெற்றோர் எப்போதுமே வருத்தப்படுவார்கள். மகன், மருமகளுடைய உறவு, நட்பு என்று இளவயதினரும் வந்து போகும் போது, மகளும் அவர்களோடு பழகினால் அவளுக்கும் ஒரு நல்ல வாழ்வு அமையக் கூடும் என்ற ஆதங்கம். ஆனால் வசுந்தரா எதையும் காதில் வாங்கிக் கொள்வதே கிடையாது. அவள் பாட்டில் இல்லத்துக்குக் கிளம்பிச் சென்று விடுவாள்.

அன்று சிரமதானம் செய்வதற்காக வந்திருந்தவர்களுக்கு அவரவருக்கு ஏற்றவாறு வேலைகளைப் பிரித்துக் கொடுத்து முடித்துக் கொண்டிருந்தபோது, ஒரே மாதிரி ஜீன்ஸ், டீ ஷர்ட், தொப்பி அணிந்து கொண்டு கௌதமனும், பூபாலனும் அவள் முன் வந்து நின்றார்கள். பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தவளின், முன்னே, பூபாலன் ஓர் அழகிய வெள்ளை ரோஜாவை நீட்டவும், அதற்குமேல் பேசாமல் இருக்க முடியாமல், ஆனால் அதற்காக ஒரேயடியாக இளகி விடாமல், பூவை வாங்கி மேஜை மேல் வைத்தாள்.

''பூ அழகாயிருக்கிறது.'' என்றாள் மொட்டையாக.

''சமாதானத் தூது'' என்றான் கௌதமன் தயங்காமல்.



பதிலின்றி ஏறிட்டவளிடம் ''சும்மா சும்மா ஏதாவது எசகு பிசகாகப் பேசி விடுவதே பழக்கமாகிவிட்டது. மாறுதலுக்கு, கொஞ்சம் நல்லபடியாகத் தொடங்கலாம் என்று ஆசை.'' என்றான் மூத்தவன்.

''இதற்காக இவ்வளவு தூரம் வரத் தேவையில்லையே!''

''நாங்கள் சிரமதானம் செய்ய வந்தோம், அக்கா!'' என்றான் பூபாலன் உற்சாகமாக.

வேண்டாம் என்று எப்படிச் சொல்வது? அவளது சொந்த லாபத்துக்கு மட்டும் என்றால் தேவையில்லை என்று அனுப்பி விடலாம்!

''சரி... செய்யுங்கள். துணி துவைக்கிறீர்களா, தோட்ட வேலை - கொத்தி உரமிடுவது - செய்கிறீர்களா? துணி துவைப்பது என்றால், சின்னச் சின்னப் பிள்ளைகளின் துணிகள், ஜட்டி, பனியன் என்று எல்லாமே துவைக்க வேண்டும்.... ''

நன்கொடையாக வந்து பயன்பட்டுக் கொண்டிருக்கும் பெரிய சலவை யந்திரங்களைப் பற்றி ஏற்கெனவே அறிந்திருந்த பூபாலன், ஆச்சரியமாய் வசுந்தராவை நோக்கினான்.

எச்சரிக்கும் பாவனையில் வசுந்தரா நோக்கவும் அவளோடு சேர்ந்து ரகசியச் சிரிப்பில் அவன் கண்கள் மலர்ந்தன.

''என்னடா இளிப்பு?'' என்று தம்பியை அதட்டிவிட்டு, சின்ன குழந்தைத் துணிகளையும், ஜட்டி போன்றவற்றையும் கைகளால் கசக்குவதை ஒரு கணம் கற்பனை செய்து பார்த்து, தோட்ட வேலையைத் தேர்ந்தெடுத்தான் கௌதமன்.

''நீ துவைத்த துணிகளை வெயிலில் வாடவிட்டு எடுத்து மடித்து வைப்பதில் உதவப் போ.'' என்று பூபாலனை அனுப்ப, அவன் அவளைப் பார்த்துக் கண் சிமிட்டிச் சிரித்து விட்டுப் போனான்.

மூன்று மணி நேர கடுமையான உழைப்பின் பின் எல்லோருக்கும் உணவிடப்பட்டது. ''வெறும் சாம்பாரும் ஒரே காயுமாக இவ்வளவு திருப்தியாக உண்ணமுடியும் என்று நான் எண்ணியதே இல்லையே'' என்று வியந்துவிட்டு இயன்ற போதெல்லாம் வருவதாகச் சொல்லி, உணவுக்கான தொகையென்று உண்டியலில் பணம் போட்டுவிட்டுச் சென்றான் கௌதமன்.

பழக்கமற்ற கடுமையான உழைப்பை அவனுக்குக் கொடுத்தோமே; பாவம், நாள் கணக்கில் தசை நோகுமே என்று நாள் கணக்காய் வசுந்தரா உள்ளூர வருந்தினாள்.

அதிக வேலையில் ரொம்ப பசித்துவிட்டது போலும்; அந்த எளிய உணவைக் கூட ரசித்து உண்டானே என்று உருகினாள்.

சிரமதானம் என்று விட்டு, வேலைக்குக் கூலியாகச் சாப்பிடுவதா என்று உண்டியலில் பணம் போட்டதை எண்ணி எண்ணிப் பாராட்டினாள்.

பலரும் அப்படிப் பணம் போடுவது உண்டுதான் என்றாலும், முதல் தடவையிலேயே இவனுக்கு அது தோன்றி விட்டதே என்று வியந்தாள்.

கௌதமனின் உடல் நலத்தைப் பற்றிய கவலை அடிக்கடி மனதை உறுத்தவே, இரண்டுநாள் பொறுத்து, அவன் அலுவலகம் சென்றுவிட்ட நேரம் பார்த்து வீட்டுக்கு டெலிஃபோன் செய்து, பூபாலனிடம் அவனுடைய அண்ணனின் ஆரோக்கியம் பற்றி விசாரித்தாள்.

''இந்த வேலை செய்து உடம்பு ஒன்றும் பிடித்துக் கொள்ளவில்லையே, அப்புறம் எல்லாம் இவளால் வந்தது என்று என் மண்டையை உருட்டப் போகிறீர்கள்!'' என்று வேடிக்கை போலக் கேட்டாள்.



''அண்ணன் எப்போதும் உடற்பயிற்சி செய்கிறவர் அக்கா. அதனால், இதெல்லாம் ஒன்றும் பண்ணாது!'' என்று அவன் சொன்ன பிறகும் இப்போதும் அவனுக்கு எந்தவிதப் பாதிப்பும் இல்லை என்று நிச்சயமாகத் தெரிந்து கொண்ட பிறகே அவளுக்கு ஒருவாறு நிம்மதியாயிற்று.

ஆனால் மறுநாளே டெலிஃபோனில் கௌதமன், அவளது நலம் குறித்து அவள் இவ்வளவு அக்கறை காட்டியதற்கு நன்றி தெரிவித்த போது அவளுக்கு ஒரு மாதிரியாகிப் போயிற்று. இனிமேல் இப்படியெல்லாம் விசாரிக்கக் கூடாது என்று தனக்குள்ளே தீர்மானித்துக் கொண்டாள்.

சொல்லப் போனால் அவளுக்கு அவன் யார்? அவன் எப்படிப் போனால் அவளுக்கென்ன? என்ன ஆனாலும் தான் அவளுக்கென்ன? இது போலெல்லாம் யாரைப் பற்றியும் கவலைப் படக்கூடாது. அவள் மனதை வருத்திக் கவலைப்படும் அளவு யாருக்கும் தகுதி கிடையாது. அதிலும் இந்த ஆண் பிறவிகளுக்கு அடியோடு கிடையாது!

அன்று ஒரு நாள் செய்ய நேர்ந்த வேலைக்குப் பிறகு, கௌதமன் ஆசிரமத்துப் பக்கம் தலை வைத்துக் கூடப் படுக்க மாட்டான் என்று வசுந்தரா எண்ணியது பொய்யா, மறு வாரமும் அண்ணனும் தம்பியுமாக முன் போலவே ஜீன்சும், டீசர்ட்டுமாக வந்து நின்றனர்.

''போன வாரம் பூபாலும் நீங்களுமாக, இந்தச் சலவை விஷயத்தில் என்னை ஏமாற்றினீர்கள்.... ஆனாலும் பரவாயில்லை; தோட்ட வேலையே நல்ல உடல் பயிற்சியாக இருப்பதால், மீண்டும் தோட்ட வேலையே செய்கிறேன்.'' என்று கூறிச் செல்லவும் வசுந்தராவின் முகத்தில் அசடு வழிந்தது.

திரும்பிப் பார்த்து அவன் சிரிக்கவும் வெட்கத்தில் முகம் சிவந்தது வசுந்தராவுக்கு!

அவள் அசடு வழிவதை அவன் பார்த்துவிட்டானே!

அன்று வேலை நேரம் முடிந்த பிறகும், 'இல்லத்தைச் சுற்றிப் பார்க்கிறேன்' என்று கௌதமனும், அண்ணனுக்குச் சுற்றிக் காட்டுகிறேன் என்று பூபாலனுமாக அங்கேயே மாலைவரை சுற்றிக்கொண்டு இருந்தனர்.

அவர்கள் சுற்றி முடிக்கவும் வசுந்தரா வீட்டுக்குக் கிளம்பவும் சரியாக இருக்கவே அவளை வீட்டில் கொண்டுவிட்டு விடுவதாகக் கூறி, இருவரும் அவளை அழைத்தனர்.

''தேவையே இல்லை!'' என்று கூறி அவள் ஒரேயடியாக மறுக்க, ''ஏன்? இதோ இவன் அருகில் இருக்கும் போது, உன்னை நான் என்ன செய்துவிடுவேன் என்று இந்தப் பயம்?'' என்று கேலிக் குரலில் கௌதமன் கேட்கவும், ஆத்திரத்துடன் அவனை முறைத்துவிட்டு, கார் கதவைத் திறந்து ஏறிக் கொண்டு இறுகச்சாற்றினாள் அவள். இவன் எப்போதிருந்து அவளை ஏக வசனத்தில் அழைக்கிறான்!

ஆனால் அவள் வீட்டை ஒட்டிய பஸ் நிறுத்தத்தில் காரை நிறுத்தும்படி பிடிவாதமாகக் கூறிவிட்டாள்.

வீட்டில் கொண்டு விடுவதாக அவன் எவ்வளவோ கேட்டபிறகும் அவள் அதற்கு ஒத்துக் கொள்ளவே இல்லை.

''உன் வீட்டை ஒன்றும் நாங்கள் தூக்கிக் கொண்டு போய்விட மாட்டோம்,'' என்று கௌதமன் கேலி பேசிய போதும் அவள் தன் பிடிவாதம் விடவில்லை.

அவளை வியப்புடன் நோக்கி, ''ஏழ்மை ஒன்றும் அவமானகரமானது அல்ல வசுந்தரா. பட்டையும், பொன்னையும் மட்டும் வைத்து மனிதர்களை எடை போட முடியாது. அன்பு இல்லத்தில் பணிபுரியும் உனக்கு இது நிச்சயமாகத் தெரிந்திருக்க வேண்டும்!'' என்றான் கௌதமன்.



அவள் எளியவள் என்றும், அவளது சிறிய குச்சு வீட்டை அவர்களுக்குக் காட்டக் கூசுகிறாள் என்றும் கௌதமன் எண்ணுவது அவளுக்குப் புரிந்தது. ஆனால்...

அவனைத் தட்டிக் கழிப்பது எப்படி என்று யோசித்து, ''இதை நீங்கள் உங்கள் அம்மாவிடம் அல்லவா சொல்ல வேண்டும்!'' என்றாள் சற்றுக் குத்தலான குரலில்.

அவள் எதிர்பார்த்தது போலவே கௌதமனின் முகம் இறுகிப் போய்விட, ''எல்லோரும் அப்படிப் பட்டவர்கள் அல்ல'' என்றான் அவன் பதிலாக.

ஆனால் அதற்குமேல் அவளது வீடு பற்றி அவன் வற்புறுத்தவும் இல்லை. ''வீட்டுக்கு அழைத்துப் போனால், சாப்பாடு போட வேண்டுமே என்று வசுந்தராவுக்குப் பயம்டா, பூபால். அதனால் அவள் சொல்வது போல இங்கேயே இறக்கி விட்டுவிடுவோம்,'' என்று தம்பியிடம் கேலி பேசியபடி பஸ் நிறுத்தத்தில் காரை நிறுத்தினான்.

இதுவே வாரா வாரம் தொடர்ந்தது.

''உங்களுக்கு வேலை அதிகம்! செய்து முடிக்க ஒரு நாளைக்கு இருபத்தி நாலு மணி நேரம் போதாது என்பான் பூபால்; நீங்களானால் இப்படி ஒரு பகல் முழுவதும் கழிப்பது ஆச்சரியமாய் இருக்கிறது!'' என்றாள் அவள் ஒருநாள்.

லேசாக முகம் கன்றிவிட்டு, ''அப்போது வெளிநாட்டில் பத்துநாள் இருந்துவிட்டு வந்தேன். இங்கே நானே பார்க்க வேண்டிய வேலைகளும் சேர்ந்து குவிந்து விட்டிருந்தன. அதைச் செய்து முடித்துவிட்டால், அன்றாட வேலை தானே?.. அத்தோடு, இல்லாதவர்களுக்குச் செய்யும் தொண்டு இறைவனுக்கே செய்ததாகும் என்பார்கள்... என்றைக்கோ ஒருநாள் எல்லோரும் போய்ச் சேரத்தான் வேண்

டும். அப்படிப் போகிற இடத்துக்குக் கொஞ்சம் புண்ணியம் தேடிக் கொண்டு சென்றால் சொர்க்கம் கிட்டலாமில்லையா?'' என்று இலகுவாகப் பேசி முடித்தான் அவன்.

''நீங்கள் மகாபாரதம் படித்ததில்லை போலிருக்கிறது. அதில் தருமபுத்திரன் ஓர் இடத்தில், 'தருமத்தை தருமத்துக்காகவேதான் செய்யவேண்டும். அதை வியாபாரமாகச் செய்யக் கூடாது. தருமம் செய்யாதவர்களை விட இந்தத் தரும வியாபாரிகள் மோசமானவர்கள்'. என்று.... உங்களை போன்றவர்களுக்காகவே சொல்கிறார். நேரம் கிடைக்கும் போது படித்துப் பாருங்கள்'' என்றாள் அவள் கண்ணில் சிரிப்புடன்.

''படிப்பானேன்? அதைவிட அவ்வப்போது வந்து இந்தப் பாட்டியம்மாவிடமே உபதேசம் பெற்றுக்கொள்கிறேன்!'' என்று அவனும் அவளைப் போலவே இயம்ப, ''அக்கா ஒன்றும் பாட்டியம்மா இல்லை!'' என்று பூபால் மறுக்க, எல்லோருக்குமே சிரிப்பு வந்தது.

தானுமே இந்த ஞாயிறுகளை ஆவலுடன் எதிர்பார்ப்பதை அறிந்து வசுந்தரா வியப்புற்றாள். இன்று இவ்வளவு 'வேலை நடந்தது; இன்று எவ்வளவு பணம் வசூலானது என்று திருப்தியடைந்தது போக, இப்போது மகிழ்ச்சியாகவும் உணர்ந்தாள்.

பூபாலை எனக்குப் பிடித்திருக்கிறது. அந்த புத்திசாலிச் சிறுவனை பார்க்க எனக்கு சந்தோஷம்தான். இதில் தப்பு என்ன என்று தளக்குத்தானே அவள் கூறிக் கொண்டபோதும், உண்மையில் பற்றுள்ள மனது, அவளது சந்தோஷம் பூபாலைப் பார்ப்பதால் மட்டும் அல்ல என்பதை மறையாது கூறவே அவள் சற்று தடுமாறிப் போனாள்.



இது போன்ற உணர்வுகள் எல்லாம் அவளைப் பொறுத்த வரையில் மறுத்து, ஒடுக்கப்பட்டவை ஆயிற்றே! மீண்டும் துளிர்க்க விடுவது தேளிடம் கைநீட்டிக் கொட்டவிடுவது போல் அல்லவா ஆகும்!

இந்த மாதிரி அவள் உள்ளம் குழம்பிக் கொண்டிருந்த வேளையில் ஒருநாள், கௌதமன் அவளுக்கு டெலிஃபோன் செய்து, அந்த வாரம் மூவருமாக 'கிஷ்கிந்தா' சென்று வரலாம் என்று அவளை அழைத்தான்.

ஒருநாள் முழுவதும் அவனோடு என்று துள்ளிய மனதை அடக்கி கொண்டு, ''இல்லத்தைவிட்டு அப்படியெல்லாம் நான் வரமுடியாது, மிஸ்டர் கௌதமன்,'' என்று மறுத்தாள் அவள்.

''அதுவும் சரிதான். அந்த ஒரு நாளில் இல்லத்தை யாரேனும் தூக்கிக் கொண்டு போய் விட்டால் என்ன செய்வது? பாவம்!'' என்று அவன் உச்சுக் கொட்டவும் தன்னைமீறி அவள் சிரிக்கவும் உடனேயே குரல் மாறி, ''வசுந்தரா இந்த இல்லம் நீ இங்கே பணிபுரிய வரு முன்பும் இருந்தது; நீ பணியைவிட்டு நின்றுவிட்டாலும் இருக்கும். ஏன், ஒரு நாள் உனக்கு உடம்பு சரியில்லை என்று பணிக்குப் போகாமல் இருந்து விட்டால்தான் என்ன ஆகிவிடும்? அதனால் இல்லத்தைக் காரணம் காட்டி மறுக்க வேண்டாம்.'' என்றான் குரலில் சிறு கண்டிப்புடன்.

அவள் பதில் சொல்லமாட்டாமல் தயங்கவும், அவனே தொடர்ந்து ''உண்மைக் காரணத்தை நீ தாராளமாகக் கூறலாம், வசுந்தரா. என்னை உனக்குப் பிடிக்கவில்லை என்றாலோ, என்மேல் நம்பிக்கை இல்லை என்றாலோ அதையும் வெளிப்படையாக நீ சொல்லி விடலாம். ஏனெனில் ஒளிவு மறைவுகளைவிட உண்மையே எனக்குப் பிடிக்கும்.'' என்றான் பழைய குரலிலேயே.

தனயனைத் தம்பி என்று உலகுக்குக் காட்டுபவனின் வாயிலிருந்து உதிருகிற முத்தா இது என்று எண்ணிய போதும், அதை வெளிப்படையாகச் சொல்லி அடியோடு முகம் முறிக்க மனமின்றி, ''என் வீட்டார் தவிர வேறு யாருடனும் வெளியே சென்று எனக்குப் பழக்கம் இல்லை. சாரி.'' என்று அழுத்தத்துடனே கூறி, அதற்கு மேல் பேச்சு முடிந்தது என்பது போல ரிசீவரை வைத்து விட்டாள்.

சற்றுப் பொறுத்து மீண்டும் டெலிஃபோன் மணியடித்தது.

திரும்பத் திரும்ப என்ன இது தொல்லை? இவனிடம் இனி கறாராகப் பேசி விட வேண்டியதுதான் என்று எண்ணியபடி ஃபோனை எடுத்தால், அழைத்தது பூபாலனின் குரல்.

அடுத்த வாரம், விடுமுறை முடிந்து, அவன் ஹாஸ்டலுக்குப் போகிறானாம். அதற்குமுன் ஒரே ஒருநாள் முழுவதையும், அவனிடம் பாசமும் பரிவும் காட்டிய ஒரே பெண்ணான அவளுடன் சேர்ந்து பேசிச் சிரித்து விளையாடிக் கழிக்க ஆ...சையாக இருக்கிறதாம். அதனால் ரொம்...பவும் தயவு பண்ணி, கட்டாயமாக வரவேண்டுமாம். இந்த ஒரு நாளை நினைத்துக் கொண்டே, அடுத்து வருகிற மூன்று மாத ஹாஸ்டல் தனிமையை அவன் எளிதாகக் கழித்து விடுவானாம்.

இதையெல்லாம், உரிய இடங்களில் அழுத்தங்களோடு கூறி, ''ப்ளீ...ஸ், அக்கா!'' என்று அவன் கெஞ்சிய பிறகு வசுந்தராவால் மறுக்க முடியவில்லை.

கூடவே அடுத்தவாரம் பூபால் சென்று விடுவான் என்றால் அதன்பின் இந்தச் சந்திப்புகளும் நின்றுவிடும் என்று முணுமுணுப்பாய் சிறு வேதனை வேறு.

அடுத்த மூன்று மாதங்களுக்கு அவளுக்கும் இந்த ஒரு நாள் நினைவுதான் ஆறுதலோ?



அத்தோடு, சிறுவனான பூபாலன், இந்த மூன்று மாதங்களுக்குள் அவளை மறந்துவிட்டால், பிறகு வாழும் காலம் முழுமைக்கும் கூட இந்த ஒருநாள் நினைவுதான் ஆறுதலாகி விடக் கூடும் என்ற எண்ணம் வேறு தோன்றி ஏனோ அவளுக்கு மிகுந்த வேதனையை அளித்தது.

## 7

'கிஷ்கிந்தா' பயணம் ஒரு வெற்றியாக அமைந்தது.

தன் குழப்பங்கள், கவலைகளை எல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று ஒருபுறமாய் மூட்டைகட்டிப் போட்டுவிட்டதால் வசுந்தராவுக்கும் இன்று ஆனந்தமாகவே இருந்தது.

பூபாலனைப் பற்றிக் கேட்கவே வேண்டும். ராமாயண கிஷ்கிந்தையில் ஒரு குட்டி வானரம் எப்படிக் குதித்து விளையாடி மகிழ்ந்திருக்குமோ அதே மகிழ்ச்சியுடன் அவனும் அனைத்தையும் அனுபவித்தான்.

ஒன்றிரண்டு விளையாட்டுகளில் அவனோடு கூடச் சேர்ந்து சென்ற பெரியவர்கள் இருவரும், மற்றவற்றில் அவனைச் சுற்ற விட்டுவிட்டுப் பார்த்து ரசித்தார்கள். ஸ்டேட்சின் 'டிஸ்னி லான்ட்' பற்றிக் கூறிய கௌதமன், பூபாலுக்குப் பத்துவயதான பின் அங்கே ஒருதரம் போய்வர வேண்டும் என்றான். ''அதற்கு முன்பாக அவற்றை முழுமையாக ரசிக்க முடியாது... இயன்றால், எல்லோரும் பார்க்க வேண்டிய இடம் அது. நான், நீ... எல்லோரும்.'' என்றான் அவன்.

தன் பொறுப்பாய் கௌதமன் ஏற்பாடு செய்திருந்த உணவு

வயிற்றில் நிரப்ப, சுகமான நினைவுகளோடு மூவரும் திரும்பி வந்தனர்.

ஆடிக் களைத்துவிட்ட பூபாலன் பின்சீட்டில் படுத்து உறங்கி விடச் சற்று நேரம் வண்டியில் அமைதி நிலவியது. திடுமென, ''அடுத்த ஆண்டிலிருந்து பூபாலனை இங்கு சென்னைக்கே அழைத்து வந்து விடப்போகிறேன்.'' என்றான் கௌதமன்.

''ஆனால் உங்...'' என்று தொடங்கிவிட்டுச் சட்டென வாயை மூடிக் கொண்டாள் வசுந்தரா.

அவன் தாயைப் பற்றி அவனிடமே எப்படிக் குறை கூறுவது? அதிலும் அவன் வீட்டு விஷயமாக?

புரிந்து கொண்டவனாக, ''அம்மாவுக்கும் அவனுக்கும் ஒத்து வருவது ஒரு காலத்திலும் நடக்காத காரியம். இவன் அம்மாவிடம் மரியாதையின்றி நடப்பது; அம்மா இவனை உதாசீனப்படுத்துவது இரண்டுமே என்னால் பொறுத்துக் கொள்ள முடியாதவையே. அதனால், அம்மாவுக்குச் சொந்த ஊரில்... ராஜபாளையம் பக்கம் - நிலபுலன்களும், வீடும் வாங்கி, ஒரு பண்ணை மாதிரி வைத்துக் கொடுத்து விடப் போகிறேன். அவர்களுக்கும் அது பிடிக்கும்! இங்கே என்ன இருந்து என்ன, சொந்த ஊரில் அல்லவா பவிசோடு இருந்து காட்ட வேண்டும் என்று எப்போதும் அவர்கள் சொல்வது தான். எதற்கு அங்கே ஒரு அனாவசியச் செலவு என்று பார்த்தேன். ஆனால் இப்போதையச் சிக்கலுக்கு அது ஒன்று தான் தீர்வு என்று படுகிறது. அதோடு அம்மாவழி விவசாயக் குடும்பம், நிலங்களை லாபகரமாக நடத்திப் பண்ணையைப் பராமரித்துக் கொள்வார்கள். கொஞ்சம் அதிக அளவு நிலங்கள் வாங்கிக் கொடுத்து விட்டால் ஊரில் மதிப்பும் இருக்கும். அதிலேயே அவர்கள் திருப்தியடைந்து கொள்வார்கள்'' என்று தன் திட்டத்தை அவளிடம் விவரித்தான் அவன்.



தாயார் மோசம் தான். அதை உள்ளூர ஒத்துக் கொண்டு, அவளையும் விட்டுக் கொடுக்காமல், அவனையும் திருப்தி யாக வைத்துக் கொள்ள, முயற்சிக்கிறான்!

வசுந்தராவின் மனதில் கௌதமனிடம் மதிப்பு ஏறிக் கொண்டே போயிற்று.

திடுமென அவளுக்கு ஒன்று தோன்றியது. அவனுடைய தாயார் பெயர் என்ன சொன்னான் திரிபுரசுந்தரி - அந்த அம்மாவால்தான் கௌதமன் தான் விரும்பிய பெண்ணை - பூபாலனுடைய அம்மாவை மணந்து கொள்ள முடியாமல் போயிருக்குமோ? அதனால் மனம் ஒடிந்து போனானோ?

யோசித்தால் அதுவும் சரியாகப் படவில்லை. பொதுவாக, பெண்களைப் பற்றிக் கூறும் போது கௌதமனின் பேச்சில் ஒரு சிறு அலட்சியம் தொனிக்கும். இவளென்ன, இவ்வளவுதானே என்று குறைவாகவே பேசுவான். ஒரு பெண்ணுக்காக ஏங்கி மனம் ஒடிகிறவன் இப்படிப் பேச மாட்டானே! அல்லது, அவனுடைய பெற்றோரின் ஆசியோடு திருமணம் நடந்தால்தான் காசு பணம் கிடைக்கும் என்று அவளும் கல்யாணத்தைத் தள்ளிப் போட்டிருப்பாளோ? அதனாலும் இந்தப் போக்கு ஏற்பட்டிருக்குமோ?

எப்படியும் பாவம்தான்!

மனம் உருகிப்போய், ''பூபாலுடைய அம்மா எப்படியிருப்பார்கள்?'' என்று மெதுவான குரலில் வினவினாள்.

சற்று நேரம் பேசாமல் இருந்து விட்டு, ''சரியாக நினைவு இல்லை'' என்று அவன் கூறவும் அவளுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

முகம்கூடச் சரியாக நினைவில் பதியாத ஒருத்தியோடு பழகி, பிள்ளை பெற்று... சே! இவன் என்ன மனிதன்?!

....அல்லது, அவள் நினைவு மாறி, இன்னொரு வாழ்வை ஏற்க அவன் தயாராகி விட்டதை சூசகமாகச் சொல்கிறானோ?

''பார்த்துப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. போட்டோ கூடக் கிடையாது... பூபால் வேறு எங்கள் வீட்டு ஜாடை... ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். அவள் நல்லவள். அவளுடைய தங்கை மாதிரி பேராசை பிடித்தவள் இல்லை. பூபால் உருவான பிறகு கூட... ஆனால் அது முடிந்து போன கதை. மீண்டும் கிளறுவதில் என்ன பயன்?'' என்ற அவன் பேச்சும் அவளது எண்ணத்தையை உறுதிப்படுத்தியது.

ஒரு பக்கம், ஒரு பெண்ணுடன் உயிராகப் பழகிய பிறகு, எப்படி மறக்கலாம் என்று வாதாடிய போதும், அவள் மனதின் மறுபுறம் இந்த மறதியில் மகிழ்ச்சியும் அடைவதை வசுந்தராவால் தடுக்க முடியவில்லை.

ஒருபுறம் ஏதேதோ கற்பனைகள் மலர்ந்த போதும், மறுபுறம் பூபால் ஹாஸ்டலுக்குச் சென்று விட்டதால், இனி கௌதமனுக்கு அன்பு இல்லமும், அவளும் மறந்து போன விஷயங்கள் ஆகிவிடுமோ என்ற கலக்கம் தோன்றி, நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போயிற்று.

வழக்கமாக அமைதியூட்டும் இல்லப் பணிகளில் மனம் ஈடுபட மறுத்தது. அங்குள்ள பச்சைக்குழந்தைகள் கூட அவளுக்குப் பரவசமூட்டும் சக்தியிழந்து போயின.

அந்த ஞாயிறன்று, கௌதமனும், பூபாலனும் வழக்கமாக வருகிற பத்துமணி எப்போது வரும் என்று கடிகாரத்தை



அவள் எரிச்சலோடு பத்தாவது தடவையாகப் பார்த்து சலித்த போது, ''ஹலோ!'' என்று கௌதமனின் குரல் கேட்கவும், கண், உதடு, முகம் எல்லாம் மலர ஆவலுடன் திரும்பிப் பார்த்தாள்.

அவனேதான். தம்பியின் பழக்கத்தைத் தான் கைக்கொண்டது போல, ஒற்றை ரோஜாவை நீட்டியபடி நின்றான். ''செய்யப்போகும் வேலைக்கு இப்போதே கூலி கிட்டி விட்டதே!'' என்று அவளது மலர்ந்த முகத்தை அவன் ஜாடையாகக் குறிப்பிடவும் அது குங்கும நிறம் கொண்டது.

மேற்கத்திய பாணியில், இடுப்புக்கு மேல் உடலை முன் வளைத்து, மலரை நீட்டியவனிடமிருந்து, அதைப் பெற்றுக் கொண்டவள் அந்த மலரைத் தண்ணீர்க் குவளையில் வைக்கும் பாவனையில் திரும்பி நின்று தன் சிவந்த முகத்தை மறைத்துக் கொண்டாள்.

ஆடவேண்டும்; பாட வேண்டும்; அலங்கரித்துக் கொள்ள வேண்டும்; என்று என்னென்னவோ இனிய உந்துதல்கள் அவளுள் தோன்றி அவளை அலைக்கழிக்கத் தொடங்கின.

ஒவ்வோர் ஆவலும் தோன்றத் தோன்ற அவளுக்கு ஆனந்தமாகத்தான் இருந்தது.

ஆனால் இந்த ஆசைகளே அவளது இன்பத்தைக் குலைக்கும் எமனாகப் போகின்றன என்பது அப்போது அவளுக்குத் தெரியாது போயிற்று.

அன்று வீடு திரும்பிச் சென்றவளின் கண்களில் அண்ணி வனிதாவின் கழுத்தில் மின்னிய வைரமாலை பட

வும், ''அண்ணி, இந்தமாலை உங்களுக்கு அழகாக இருக்கிறது!'' என்று புன்னகையோடு பாராட்டினாள்.

எல்லோரும் சற்றுத் திகைத்து நோக்கி, உடனே அந்தத் திகைப்பை மாற்றிக் கொண்டு சாதாரணமாக முறுவலித்தனர்.

தன் கழுத்தாரத்தை கழற்றி, ''நீயும் போட்டுப் பாரேன்!'' என்று அவளிடம் கொடுத்தாள் வனிதா.

ஆவலும் தயக்கமுமாக வசுந்தரா அதை வாங்கி அணிந்து காட்ட, அவள் தாயின் கண்களில் நீர் மல்கியது.

புக்கக உறவினர்களை ஒரு பார்வை பார்த்துவிட்டு, ''இந்த ஆண்டு லாபக் கணக்கில் என் பங்கு என்று மாமா தந்ததில் வாங்கினேன். உன் பங்கை உன் கணக்கில் போட்டு வைத்திருக்கிறார்கள்.... நீயும்தான் இதுபோல வாங்கிக் கொள்ளேன்.... ஒரு சிறு வித்தியாசத்துடன் இன்னொரு டிசைன்கூட இருந்தது. உன் முகத்துக்கு அது இன்னமும் அழகாக இருக்கும்... வருகிறாயா! இப்போதே போய் 'ஆர்டர்' கொடுத்து விடலாம்!'' என்று நாத்தனாரை அழைத்தாள் வனிதா.

வனிதாவும் நல்ல அழகியே. வசுந்தராவும் அவளோடு எதிலும் போட்டிக்கு வந்ததில்லை என்பதால் 'நாத்தனார் காய்ச்சல்' அந்த வீட்டில் தோன்றியது இல்லை. இந்த நாத்தனாருக்கு ஒரு நல்ல வாழ்வு அமைந்து விட்டால், வீட்டினர் அனைவரையும் நெருஞ்சியாய்க் குத்திக் கொண்டு இருக்கும் ஒரு வலியிலிருந்து எல்லோருக்குமே விடுதலை கிடைக்குமே என்பது அவளுக்கு.

நாலு ஆண்டுகளாக இது போல நகை, நல்லதுணி போன்றவற்றை அடியோடு துறந்திருந்தவள் அவள். இப்



போது அண்ணியின் அவசரத்தோடு ஒத்துப் போக முடியாமல் ஒரு தயக்கம் அவளைச் சூழ்ந்து கொண்டது.

''நா...ன்... நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் அண்ணி. இப்போது நீங்கள் வேறு எங்கேயோ செல்லக் கிளம்பியிருக்கிறீர்கள் போல் தெரிகிறதே...''

''ஆமாம். ஒருபாடாவதி வரவேற்பு. அதில் கச்சேரி வேறு கர்நாடக சங்கீதமாம். எனக்குத் தலைவலி தான் மிச்சமாகும்! அதை விட... ''

''இல்லை அண்ணி... நீங்கள் கிளம்பியது என்னால் நிற்க வேண்டாம். எனக்குப்... பிறகு வாங்கலாம்...'' என்று வனிதாவை அனுப்பி வைத்தாள்.

மறுநாள் வனிதா பிடிவாதமாக நாத்தனாரை இழுத்துச் சென்று நகைக்கு ஆர்டர் கொடுத்தாள். ஒன்று வாங்கிய உற்சாகத்தில் இந்த நாலு ஆண்டுகளாக வசுந்தராவின் கணக்கில் சேர்ந்திருந்த பணத்துக்கு இருவருமாக வேட்டு வைத்தனர்.

சேர்ந்து அலைந்து ஆர்டர் கொடுத்த போதும், செய்த நகைகளை வாங்கும் போதும் உடனிருக்கமுடியாமல் வனிதாவுடைய தங்கையின் திருமணம் திடீரென்று நிச்சயமாகி, அது விஷயமாகக் கணவன் மனைவி இருவரும் வனிதாவின் பிறந்த வீட்டுக்குச் செல்ல நேர்ந்து விட, வசுந்தரா தனியாகவே சென்று அவற்றை வாங்கும்படி ஆயிற்று. அவளுக்கு அதில் ஒன்றும் பெரிதாகத் தயக்கம் தோன்றவும் இல்லை. நாலு ஆண்டுகளுக்கு முன்பு அவள் செய்து பழக்கப்பட்டதுதானே?

வசுந்தராவுடைய தாயார் ஒரு வாத நோயாளி. எனவே கடைகண்ணிகளுக்கு வசுந்தரா எப்போதுமே தனியேதான்

போய் வருவது. முன்பு அவள் செய்தாள்; அவளுக்குப் போக மனமற்று நின்ற காலத்தில் அண்ணனின் திருமணம் முடிந்து வனிதா வந்து விட்டதால், அந்தப் பொறுப்பை அவள் ஏற்றுக் கொண்டாள்.

செய்யக் கொடுத்த நகைகளுக்குப் பொருத்தமாக வசுந் தரா பட்டுப் புடவைகளும் வாங்கிச் சேர்த்தாள். இவை அனைத்தையும் யார் முன்னிலையிலோ அணிந்து கட்டி அசத்துவது போலக் கனவுகண்டு மகிழ்ந்தாள்.

இத்தனைக்கும் நடுவில், பெற்ற பிள்ளையை அண் ணன் என்று அழைக்க வைத்திருக்கிறானே என்பதும் அவள் மனதை, உறுத்தாமல் இல்லை. ஆனால் அதையும் கூட, அன்பு இல்லத்து பிள்ளைகளைப் போலக் கைவிட்டுவிடா மல் கூடவே வைத்து வளர்த்துக் காப்பாற்றினானே; என்று சமாதானம் செய்து கொண்டாள்.

இப்படி அவள் பட்டும் நகையுமாக வாங்கிக் குவிப்பது ஒரு ஜோடிக் கண்களில் பட்டு, கனல் எழ வைத்தது.

முதலில் கௌதமன் அவளைப் பார்த்தது விலை உயர்ந்த சேலைகளை விற்கும் ஒரு பட்டு மாளிகையில்தான். திருமணச் சேலைகளுக்கு அந்தக் கடை ராசியானது என்று பெயர் பெற்றது.

அவன் ஒரு கற்பனையில், கல்யாணப் பட்டுச் சேலைக ளைப் பார்த்து விட்டுப் போகலாம் என்று அங்கே சென்றான்.

அவன் காரைப் 'பார்க்' செய்துவிட்டு, இடையே இருந்த போக்குவரத்து நெரிசலைத் தாண்டி, படியேறி கடை யினுள் புகும்போது, அவனது கார் 'ஹார்ன்' போலக் கேட் கவே சற்றுநின்று திரும்பிப் பார்த்தான்.



கார் ஹார்ன் வேறு யாருடையதோ! ஆனால், நாலைந்து பட்டுச் சேலைப் பெட்டிகளோடு, மைசூர் பட்டணிந்து, குனிந்து கார்க் கதவைத் திறந்து பெட்டிகளை உள்ளே தள்ளி விட்டு ஏறியவள் வசுந்தரா அல்லவா?!

எப்படி இருக்க முடியும்?

அவளது எளிய கைத்தறிச் சேலை எங்கே? இந்த மைசூர் பட்டு எங்கே?

அவளது இறுகப் பின்னிய ஜடை எங்கே? இவளது உயரத் தூக்கிப் 'பின்' மாட்டி விரித்து விடப்பட்டிருந்த கூந் தல் அலங்காரம் எங்கே?

அவளது எளிய கருகமணி மாலை, பிளாஸ்டிக் தோடுக ளோடு இவளது காதுகளில் பளிச்சிட்ட வைரமும், கழுத்தி லும் கைகளிலும் ஜொலித்த நகைகளும் எப்படி ஒத்து வர முடியும்?

அவளது ஆட்டோ, பஸ்சுக்கும், இந்த ஏசி மாருதிக்கும் எப்படிப் பொருந்தும்?

முதலில், சேலைப் பெட்டிகள் மறைக்க, பின்னரும் அவள் குனிந்து காரில் ஏறி விட, கௌதமனுக்கு தெரிந்த தெல்லாம் வசுந்தரா என்று அவன் நினைத்த அந்தப் பெண் ணின் முக்கால் பின்னந்தலையும், கால்பக்கவாட்டுத் தோற்ற மும் தான்.

ஆனால் வசுந்தராவை அவனுக்குத் தெரியாதா? அது அவளாக இருக்க முடியாது. முடிவுக்கு வந்தவனாய், கடைக் குள் சென்று தன் வேலையைக் கவனித்தான் கௌதமன்.

அடுத்து அவன் அவளைக் கண்டது ஒரு வைர நகைக் கடை வாயிலில். அதன் வைரங்களுக்காகவே பிரசித்தி பெற்றது அந்தக் கடை. விலையும் அப்படித்தான் இருக்கும். ஆனால் அங்கு வாங்கும் வைரங்களிலும், ஜாதிக் கற்களிலும் குற்றம் குறையே இராது.

இவன் சாலையோடு எதிர்ப்புறமாக வந்து கொண்டு இருந்தபோது, அந்தக் கடையிலிருந்து வெளிப்பட்டு, படியிறங்கி வந்து கொண்டிருந்தாள். கையிலிருந்த பையில் நெக்லஸ் பெட்டியின் பரிமாணம் நன்றாகவே தெரிந்தது.

இது அவளேதான்! சந்தேகம் இல்லை!

இன்றும் அவளது ஆடை, அணிகலன்கள், அலங்காரம் சிறப்பாகவே இருந்தது. இவள் வசுந்தரா என்றால், முன்தினம் துணிக்கடைப் பக்கம் பார்த்ததும் அவளாகவேதான் இருக்க வேண்டும்! இது என்ன இரட்டை வேடம்? அல்லது இவளும், அவளும் இரட்டைப் பிறவிகளா? அப்படி இருந்தால் ஒருத்தி பணக்காரியாக, மற்றவள் ஏழையாக இருக்க வாய்ப்பில்லையே!

அல்லது ஒரே தந்தையும் வெவ்வேறு தாய்களுமாக இருக்கக் கூடுமா? அது சாத்தியம்தான். அந்தமாதிரி சகோதர சகோதரிகள் பற்றி கௌதமன் அறியாததா?

முடிந்த அளவு விரைவாக, அடுத்த திருப்பத்தில் திரும்பி வந்து பார்த்தால் அங்கே வசுந்தரா இருந்ததின் அடையாளம் கூட இல்லை!

அவ்வளவு தூரம் வந்து விட்டுச் சும்மா போய்விட அவனுக்கு மனமில்லை. உள்ளே, நகையைப் பெற்றுக் கொண்டு அவள் கையெழுத்திட்டிருப்பாள்தான்; ஆனால் பெரிய நகைக் கடைகளில் அதைக் கேட்கும்போதெல்லாம் காட்டிக் கொண்டு இருக்க மாட்டார்கள்.



யோசனையோடு, 'கார் பார்க்கிங்' பார்த்துக் கொள்கிறவனை அணுகினான்.

'யாரு? அந்தப் பச்சைக் கலர் சில்க் கோட்டாச் சேலை அம்மாவா? வெள்ளை மாருதியில் நேரா அங்கே போகிறாங்களே நான் கூட திரும்பிப் போகப் போகிறாங்கன்னு காரை இந்தப் பக்கம் எடுத்துவிட்டேன். ''இல்லை, 'ஜவேரி' கடைக்குப் போகணும்பா. நேரே திருப்பிவிடு.' ன்னு சொல்லி நேராத் திருப்பி விட்டப்புறம் போனாங்களே!'' என்றான் அவன்.

ஒரு பத்து ரூபாய் தாளை அவன் கையில் திணித்து விட்டுக் காரை எடுத்தான் கௌதமன்.

'ஜவேரி'! இன்னுமொரு பெரிய நகைக் கடை!

அங்கே அவள் ரூபாய் நோட்டுக் கத்தைகளை எடுத்துக் கொடுத்து நகை வாங்குவதைக் கண்ணாலேயே கண்டுவிட்டான் அவன்!

பெட்டியிலுள்ள நகையை வைக்குமுன் அதைத் தூக்கிக் காட்டினார் கடைக்காரர்.

ரூபியும் வைரமுமாக செந்தணலாய் ஜொலித்த அந்த நகை, அவன் நெஞ்சிலும் தீயை வைத்தது.

வெளியே சென்று காத்திருந்தான்.

அவளுக்கே உரிய எழிலும் மென்மையுமான நடையும், கூடவே இதழ்களில் ஒரு மயக்கப் புன்னகையுமாக

வந்து, கார் கதவைத் திறந்து கையிலிருந்த பெட்டியை உள்ளே வைத்துவிட்டுக் காரில் ஏறினாள் அவள்.

கார் கதவை மூடவிடாமல் பற்றித் தடுத்தவனைத் திகைப்பும், பயமுமாகத் திரும்பிப் பார்த்தவளின் முகம் வியந்து, குழம்பி மெதுவே மலர்ந்தது. ''நீங்... நீங்களா?'' என்றாள் சிறு தடுமாற்றத்துடன்.

''பரவாயில்லை. அடையாளம்கூடத் தெரிகிறதே!'' என்றான் அவன் எகத்தாளமாக.

யார் அவளது அலங்காரத்தைப் பார்த்து மயங்கி நிற்பான் என்று எண்ணினாளோ, அவன் இப்போது ஏன் இப்படிச் சீறுகிறான்?

எதுவும் புரியாமல், ''ஏன்.. இப்படிப் பேசுகிறீர்கள், கௌதம்? என்ன விஷயம்?'' என்று அவனை அண்ணாந்து பார்த்துக் கேட்டாள் வசுந்தரா.

''என்ன விஷயமா? ஒரே ஒரு சின்ன விஷயம்தான். நான் விழித்துக் கொண்டு விட்டேன்! உன் வேஷம் இனி என்னிடம் செல்லாது. அவ்வளவுதான். உனக்கு ஒரு பெரிய கும்பிடு தாயே! இனி நானோ, என் தம்பியோ நீ இருக்கும் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டோம்! குட்பை!'' என்று கார் கதவை அவன் அறைந்து சாத்திய வேகத்தில் கார் அப்பளமாகாமல் தப்பித்தது அதிசயம்!

அவளது பழைய கதை ஏதோ கௌதமனுக்குத் தெரிந்திருக்கிறது. கடைசி நேரத்தில் அவள் திருமணத்தை நிறுத்திய விவரம் அவனுக்குக் கிடைத்திருக்கிறது. இனம் இனத்தோடு அல்லவா? அந்தப் படுபாவியின் பக்கம் சேர்ந்து கொண்டு



விட்டான்! இவனைப் போய் என்ன மாதிரி உயர்வாக எண்ணினாள்; என்னென்ன கனவுகள் கண்டாள்!

நெஞ்சு கொதிக்க, ''பெற்ற பிள்ளையைத் தம்பியென்று பறை சாற்றும் உங்களைப் பாராததால் நான் ஒன்றும் செத்து விட மாட்டேன்!'' என்று அறிவித்தபடியே காரை எடுத்தாள் அவள்.

''கையும் களவுமாய்ப் பிடிபட்டு விட்டோமே என்று அதைச் சமாளிக்க, இல்லாதபழியை என் மேல் சுமத்துகிறாயா? பாவி! உன்முகத்தில் விழிப்பதே பாவம்! போ! போய்த் தொலை!' என்று அவன் திரும்பிக் கொள்ள, வசுந்தராவின் கார் சீறிப் பாய்ந்தது.

## 8

அன்றிலிருந்து சுமார் ஒரு மாத காலம்! வாழ்க்கை எப்படி நடந்தது என்றே வசுந்தராவுக்குத் தெரியாது.

இதற்கு முன்பும் அவள் வாழ்வில் ஒரு புயல் வீசியது உண்டு. ஆனால் அப்போது, உள்ளூர ஒரு ஆத்திரம் இருந்து அவளை நிமிர்ந்து நிற்கச் செய்தது. ஒரு வடிகாலைத் தேடி அதன் வழி செல்லச் செய்தது.

ஆனால் இப்போதோ விழித்திருக்கும் நேரம் முழுவதும், வேதனைப் புழு ஒன்று அவளது இதயத்தை அரித்துக் கொண்டே இருப்பதுபோல் ஒரு உணர்வு. அய்யோ! அய்யோ!! என்று எப்போதும் ஒரு பரிதவிப்பு. ஒரு வினாடி கூட இந்தத் தவிப்பிலிருந்து அவளுக்கு விடுதலை கிடைக்க

வில்லை. சுற்றிச் சுற்றி ஒரே காரிருள். ஒரு தூய ஒளிச்சுடர் தோன்ற இடமே இல்லாத இருள். தோன்றக் கூடும் என்ற நம்பிக்கைக்கு வழியில்லை.

நாலு ஆண்டுகளுக்குப் பிறகு பழைய உற்சாகத்துடன் இருந்த மகளைக் கண்டு, மகிழத் தொடங்கியிருந்த பெற்றோர் மீண்டும் வருத்தத்தில் ஆழ்ந்தார்கள்.

கண்ணீர் வழிவதைக் கூட அறியாமல், பரத்தியானமாய் அமர்ந்திருக்கும் மகளை, மெல்லத் தடவிக் கொடுத்து, ''என்னடாம்மா?'' என்று கேட்டால் அவள் விசித்து அழுதாளே தவிர எதுவும் சொல்வதாக இல்லை.

தங்கையின் திருமண விஷயமாகப் போய்விட்டு வந்த வனிதாவுக்கும் நாத்தனாரின் மாற்றம் பெரும் ஏமாற்றத்தைத் தந்தது. ஒத்த வயதினள் ஆயிற்றே; அவளிடமாவது ஏதேனும் சொல்வாளா என்று வனிதாவைக் கேட்கச் சொன்னால், அப்போதும் வசுந்தரா கண்ணீர்தான் வடித்தாள்.

அன்பு இல்லத்திலிருந்து, வரவில்லையே என்று அழைப்பு வந்தது. பள்ளித் தோழி ஒருத்தியைத் தனக்குப் பதிலாக அனுப்பி வைத்துவிட்டு பழைய இடத்திலேயே சுருண்டாள் வசுந்த்ரா.

அவளுக்கு அவ்வளவாகப் பிடிக்காத இடம் என்ற போதும், வனிதா, அன்பு இல்லத்துக்குச் சென்று விசாரித்துப் பார்த்தாள்.

பூபால் என்று ஒரு பையன் வருவான். இவளோடு 'அக்கா' 'அக்கா' என்று ஒட்டிப் பழகுவான் இப்போது விடுமுறை முடிந்து போய் விட்டான் என்பதற்கு மேல் ஒன்றும் தெரியவில்லை.



சரியாக உண்ணுவது இல்லை; உறங்குவது இல்லை. தன்னைப் பேணுவது இல்லை. யார் முகத்தையும் நிமிர்ந்து பார்ப்பதும் இல்லை; அறைக்குள்ளேயே சுருண்டு கிடப்பது; அபூர்வமாகத் தோட்டத்துப் பக்கம் சென்று இலக்கற்று நடப்பது; மீண்டும் அறைக்குள் நத்தையாய் ஒடுங்குவது என்று கிடந்து உடல் மெலிந்த மகளைக் கண்டு மனம் உடைந்தாள் தாயார்.

''முன்புகூட அவள் சாப்பாட்டை விலக்கவில்லையே. பட்டும், நகையும் அனியாவிட்டாலும், தன்னைப் பேணுவதைத் தவிர்க்கவில்லையே. கலகலப்பாய் இராவிட்டாலும், காணும் நேரம் ஒரு புன்னகையாவது இருக்குமே! இப்போது அதற்கும் பஞ்சமாகிப் போயிற்றே!'' என்று தாயார் புலம்ப, தந்தை கண்ணீர் பெருக்க, மகனும் மருமகளும் கையைப் பிசைய, வீடே களையிழந்து போயிற்று.

அன்றும் அப்படித்தான் எங்கோ நினைவாய்த் தோட்டத்தைச் சுற்றிவிட்டு, இலக்கற்ற வெறிப்புடன் வசுந்தரா வீட்டுக்குள் திரும்பி வந்து கொண்டு இருந்தபோது, அவளுடைய தந்தையின் அறைக்கதவு - வெளியே செல்ல முடியாத போது வீட்டிலிருந்தே அவர் அலுவல் பார்க்கும் அறையின் கதவு திறந்தது.

''ஓகே சார். அடுத்த திங்கட்கிழமைக்குள்ளாக அனுப்பி விடுங்கள்...'' என்றபடி, திறந்திருந்த கதவின் வழியே கையில் ஒரு சிறு கைப் பெட்டியுடன் வெளியே வந்து கொண்டிருந்தான், கௌதமன்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து அதிர்ந்து போய் நிற்க, அவர்களது அதிர்ச்சி அறியாமல், வசுவுடைய தந்தை இவர்கள் இருவருக்கும் இடையே அறிமுகம் செய்வித்தார்.

வசுந்தராவை மகள் என்று கூறியவர், மேலே எதுவும் பேசுமுன் உள்ளே டெலிஃபோன் மணி அடித்தது. ''பேசிக் கொண்டிருங்கள். இதோ, ஒரே நிமிடத்தில் வந்து விடு கிறேன்!'' என்று கூறி உள்ளே சென்றார்.

''மகளா?!'' என்று சற்றுத் திகைத்துவிட்டு ''அப்படியா னால் உண்மையிலேயே நீ ஒரு பணக்காரப் பெண்தான்!'' என்றான் கௌதமன்.

சோர்வுடன் தலையசைத்துவிட்டு, வீட்டினுள் செல்லக் காலடி எடுத்து வைத்தாள் வசுந்தரா.

''வசு, நான் உன்னிடம் பேச வேண்டுமே!'' என்றான் அவன் அவசரமாக.

வீட்டினர் போல, அவனது 'வசு' வென்ற அழைப்பி லேயே கண்களில் நீர் கோத்தது அவளுக்கு.

அகல விழித்து, விழிநீர் சிந்திவிடாமல் காத்தபடி, ''பே சுவதற்கு என்ன இருக்கிறது?'' என்று கம்மிய குரலில் வினவி யபடி மேலே செல்லத் தொடங்கியவளைக் கைபற்றி நிறுத்தி னான் அவன்.

டெலிஃபோன் பேச்சை முடித்துக் கொண்ட வந்த ராமச் சந்திரன், திகைப்புடன், ''மிஸ்டர் கௌதமன்...'' என்று தொடங்குமுன் கௌதமன் அவசரமாக இடைமறித்தான்.

''சார், நானும் உங்கள் மகளும் சற்றுப் பேச வேண்டும் தனியாக.'' என்றவன், மகளின் முகத்தைப் பார்த்துவிட்டு அவர் ஏதோ சொல்ல முயலவும், ''இந்தப் பேச்சு நமக்குள் ஒரு நல்ல உறவுக்கு வழிவகுக்கக் கூடும். அதனால் தயவு செய்து தடுக்க வேண்டாம்.'' என்று உரைத்தபடி, வசுந்தரா வைப் பற்றியகை விடாதபடி அந்த அறையினுள் அழைத்துச் சென்றான்.



''வசும்மா, நான் ஓர் அவசரக்கார முட்டாள். மட்டி மடையன். மூடன் என்று நீ எந்தப் பெயரிட்டு என்னை அழைத் தாலும் எனக்குப் பொருத்தமே. அன்று நகைக் கடை வாயி லில் நான் பேசிய பேச்சு என் முட்டாள்தனத்தின் சிகரம். அதற்காகத் தயவு செய்து நீ என்னை மன்னிக்க வேண்டும்.'' என்று அவளிடம் பணிவாகவே - ஆனால் ஓர் அவசரத்து டன் கேட்டுக் கொண்டான்.

அன்று அவன் பேசிய பேச்சு நினைவுவர, மீண்டும் வசுந்தராவின் விழிகளில் நீர் பெருகியது.

''வசு, ப்ளீஸ்...'' என்று அவளை இறுக அணைத்தான் அவன். ஆனால் அவள் எந்தவித அசைவுமின்றி நிற்கவும், அவளை விடுவித்து, அவள் கைகளைப் பற்றி, ''முதலில் நீ என் காரணத்தைக் கேட்க வேண்டும். நான் உன்னைப் பரம ஏழை என்று எண்ணியிருந்தேன். உன்னை மணந்து, உன் னைத் தங்கத்தாலும், வைரத்தாலும் அர்ச்சிக்க வேண்டும் என்று ஆயிரம் கற்பனைகள் செய்து கொண்டிருந்தேன். எனது ஒவ்வொரு பரிசிலும் உன் முகம் மலர்வது கண்டு பூரிக்க மிகுந்த ஆவல் கொண்டு, அந்த நாளை எதிர் நோக்கி யிருந்தேன். அந்த நிலைமையில், நீயாக ஏசி மாருதியில் வருகிறாய்; அடுக்கடுக்காய் பட்டுச் சேலைகள் வாங்குகி றாய்.... உன்னை இந்த மாதிரி ஆடையில் முதலில் பார்த்தது அங்கேதான். தூரத்தில் பார்த்ததால் நிச்சயமற்று இருந்தேன்.

''பிறகு பார்த்தால் நகைக் கடைகளிலும் நீயே தென்படு கிறாய்! அதுவும் ஜவேரி ஜுவல்லரியில் லட்ச ரூபாய் எண் ணிக் கொடுத்ததை நானே நேரிலேயே கண்டேனா? ... வந்து... இந்த... பணத்தை எல்லாம் நீ தப்பு வழியில் சம்பா திக்கிறாய் என்று...''

அவள் கண்களில் கனல் வீசுவதைக் கண்டு பேச்சை நிறுத்தினான் கௌதமன்.

''நானா? நானா தப்புவழி போகிறவள்?'' என்றாள் வசுந்தரா ஆத்திரத்துடன்...

''இல்லை. நீ போகமாட்டாய். எனக்குத் தெரியும். அதனாலேயே முதலில் துணிக்கடை வெளியே அடுக்கிய பட்டுச் சேலைப் பெட்டிகளுடன், உன்னைப் பார்த்த போது, அது நீயாகயிருக்கும் என்று நான் நம்பவே இல்லை! அது வேறு யாரோ என்றே மனதில் முடித்து விட்டேன்... '' என்றவன், அவள் முகம் சற்று இளகவும், அவசரமாக, '' நீ என் நிலையில் இருந்து சற்று யோசித்துப் பார், வசும்மா, எளிமையாகக் கைத்தறி அணிந்து ஏழை வேடம் போடுகிறாய். உன் வீட்டுக்கு வரவிடமாட்டேன் என்கிறாய். உன்னைப் பற்றி பேசுவதே இல்லை! உன் பின்புலம் இழிவாக இருக்குமோ? அதனால்தான் மறைக்கிறாயோ என்று தோன்றவும் கொதித்து விட்டது. அதற்குமேல் ஒன்றுமே யோசிக்க முடியவில்லை. ஆனால் இந்தக் கோபத்தின் அடிப்படைக் காரணம் உன்மேல் எனக்கிருக்கும் அளவில்லாத அன்புதான் என்று புரிகிறதில்லையா? தயவு செய்து புரிந்துகொள் கண்மணி!'' என்றான் கெஞ்சுதலாக.

இப்படிக் கெஞ்சும்போது எப்படிக் கோபத்தை இழுத்துப் பிடித்து வைப்பது?

கூடவே, அவள் அவனுக்கு அளிக்க வேண்டிய விளக்கம் ஒன்றிருக்கிறது என்பதையும், வசுந்தரா உணர்ந்தாள். அதை எந்த மாதிரிச் சொல்வது? அதை அவன் எப்படி ஏற்கப் போகிறானோ என்று அவள் யோசித்தபோது, அவள்



கையைப் பற்றி, மிருதுவாய் வருடி, ''பழைய கதை உன்னை இன்னமும் பாதிக்கிறதா, வசு?'' என்று மென் குரலில் வினவினான் கௌதமன்.

விறைப்புற்று, ''அது... பழைய கதை உங்களுக்கு என்ன... அதுபற்றி உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டாள் அவள்.

''அதிகம் தெரியாது ஆனால் தொழில் விஷயமாக உன் தந்தையைத் தொடர்பு கொள்ளுமுன் அவரைப் பற்றி விசாரித்த போது, அவருக்கு ஒரு பெண், நிச்சயமாகி திருமணம் நடக்காமல் நின்றுவிட்டது. அதிலிருந்து அந்தப் பெண் சன்னியாசினியாக வாழ்வதாகக் கேள்வி. அது ஒரு வேதனை அவருக்கு என்றார்கள். ஆனால், அந்தப் பெண் நீதான் என்பது முதலில் எனக்குத் தெரியாது'' என்றான் அவன்.

உதட்டைக் கடித்து யோசித்துவிட்டு, ''உட்காருங்கள் எல்லாம் சொல்கிறேன்'' என்று தந்தையின் அறையிலுள்ள சோபாக்களின் பக்கம் திரும்பி நடந்தாள் வசுந்தரா.

அவள் கையைப் பற்றியிருந்ததை விடாமலே அவளை நிறுத்தி ''என் மேல் இனிக் கோபம் இல்லையே?'' என்று கொஞ்சும் குரலில் வினவினான் அவன்.

ஒரு வினாடி தயங்கி, பார்வையைத் தாழ்த்தி, 'இல்லை' என்று தலையசைத்தவள், மெல்லக் கையை விடுவித்துக் கொண்டாள். ''முதலில் என்னையும் தெரிந்து கொள்ளுங்கள். அப்புறம்... மற்றது பார்ப்போம்.'' என்று அழைத்துச் சென்று உட்காரச் செய்து, தானும் அமர்ந்து சொன்னாள்.

''நாலு ஆண்டுகளுக்கு முன்பாக எனக்குத் திருமணம் நிச்சயமாகி இருந்தது. பெற்றோரின் முடிவுதான் என்றாலும்

எனக்கும் பிடித்துதான் இருந்தது. வசதியுள்ள குடும்பம். அப்பாவுக்கு ஆண்பிள்ளை வரவு, பெண்பிள்ளை செலவு என்கிற எண்ணம் எல்லாம் கிடையாது. இரண்டும் என் பிள்ளைகள்; நான் சம்பாதிப்பதில் இருவருக்கும் சம பாகமே என்பார். அந்த வகையில் எனக்கு நிறையவே செய்வதாக இருந்தார். நானும் நகை, பட்டாடை என்றுதான் எப்போதும் இருப்பேன்!

''சில சொத்துகள், காண்டாசா கார், அது இது என்று பல லட்சங்கள். சொத்துக்களை வாங்கும்போதே அண்ணனுக்கும் எனக்கும் சமமாகவே வாங்கி வந்தார் என்பது எல்லோருக்கும் தெரியும்.... தெரியாதது என்னவென்றால், இந்தச் சொத்து, பணத்துக்காகத்தான் சிகாமணி என்னை மணந்து கொள்ள இருந்தார் என்பதுதான்.'' என்றாள் அவள் ஆத்திரப் பெருமூச்சுடன்.

''உனக்காகவும் தான் இருக்கும் வசு. கண்ணிருக்கும் எவனும் இதை மறுக்க மாட்டான்.'' என்று கௌதமன் அவசரமாக அவளைத் தாங்கிப் பேசவும், ஒரு சிறு புன்னகை அவள் முகத்தில் தோன்றி மறைந்தது.

மறுப்பாகத் தலையசைத்துவிட்டு, ''சிகாமணியைப் பொறுத்தவரையில், அது அப்படியில்லை என்பது நிருபணம் ஆன விஷயம்.'' என்றவள் மேலே தொடர்ந்தாள்.

''திருமணம் நடப்பதாக இருந்ததற்கு முன்தினம் போலீசார் வந்து என்னிடம் ஒரு கடிதத்தைத் தந்தார்கள். வயிற்றுப் பிள்ளையோடு தற்கொலை செய்து கொண்ட ஒரு பெண் எனக்கு எழுதிய கடிதம் அது.



''அதன்படி எனக்கும் சிகாமணிக்கும் திருமணம் நிச்சயமாகும் முன்பே அந்தப் பெண் கலா அவருடைய காதலி. திருமணம் நிச்சயமான பிறகும் அவளிடம் உள்ள ஆசை குறையாததால், அவளுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டே இருந்திருக்கிறார்.

''திருமணம் நிச்சயமான ஒருவனிடம் அந்தக் கலா எப்படித் தன்னை இழந்தாள் என்பது இன்னமும் எனக்குப் புரியவில்லை. ஆனால் சிகாமணிதான் ஏதோ ஆசை காட்டியிருக்க வேண்டும். இந்தப் பழக்கத்தினால் அவள் கருவுற்றதும் எல்லாம் மாறிவிட்டது. அவள் திருமணத்தைக் கேட்டிருக்கிறாள். சிகாமணியோ விசுவாமித்திரர் ஆகிவிட்டார். 'வளமான எதிர்காலத்தை விட்டுவிட்டு உன்னோடு வாழ்வைப் பிணைத்துக் கொள்ள நான் முட்டாளல்ல என்று கூறிவிட்டாராம்... அவள்... அதுதான் சொன்னேனே, திருமணத்துக்கு முன்தினம் இறந்துவிட்டாள் என்று.

''அதற்குப் பின்னரும் திருமணத்தை நடத்திவிடவே சிகாமணியும் அவருடைய வீட்டினரும் விரும்பினர். முதலில் இதெல்லாம் கதை என்றவர்கள், குற்றம் நிருபிக்கப்பட்டுவிடவும், பெரிய இடத்துப் பையன்களுக்கு இது சகஜம் என்றார்கள்... எனக்கு என்னவென்றால் அந்தக் கலா எப்படியோ போகட்டும். இருகை தட்டினால் ஒழிய ஓசை எழாது. தப்பில் அவளுக்கு பங்கில்லை என்று சொல்ல முடியாது. ஆனால் அவள் வயிற்றில் வளர்ந்தது சிகாமணியுடைய குழந்தைதானே? அவர்கள் வீட்டு வாரிசு தானே? அதை எப்படி அவர்களால் கைகழுவ முடிந்தது? பிற்காலத்தில் என்னை விடப் பணக்காரப்பெண் கிடைத்தால், என்னையும், அதற்குள்

எனக்கு ஏதாவது பிள்ளைகள் பிறந்திருந்தால் அவர்களையும் இப்படித்தானே உதைத்து தள்ளியிருப்பார்கள்?

''முடிவு செய்யும் பொறுப்பை என் பெற்றோர் என்னிடம் விட்டார்கள். நான் மறுத்துவிட்டேன்... ஆனால், இந்தப் பணமும், நகையும், அதைக் காட்டியதும் தானே இத்தனைக்கும் காரணம் என்று, நகைகள், நல்ல துணிமணிகளைத் துறந்தேன். காரை விட்டேன். தெரிந்தோ தெரியாமலோ, என்னால் ஒரு சிசு மாண்டதற்குப் பிராயச்சித்தமாக அன்பு இல்லத்தில் இலவசமாய்ப் பணி புரிந்தேன்...

அவள் பேச்சு ஓயவும், சில கணங்கள் அங்கே அமைதி நிலவியது.

வசுந்தராவின் கைகளைப் பற்றிப் பெருமையாக முத்தமிட்டான் கௌதமன். ''என் தங்கத்திற்குத்தான் எவ்வளவு பரந்த உள்ளம்! கூடவே உன் தன்மானமும் பாராட்டுக்குரியது, வசு!'' என்றான்.

தொடர்ந்து ''இந்தப் பரந்த மனம் என்னையும் மன்னித்து ஏற்க வேண்டும். கண்மணி நானும் ரொம்ப நல்லவன் இல்லை. என் பத்தொன்பதிலிருந்து இருபத்தோராம் வயது வரை கண்டதே காட்சி என்று, யார் கண்டிப்பும் இல்லாமல், கைகொள்ளாப் பணத்துடன் நான் மிக மோசமாகத்தான் நடந்து கொண்டுவிட்டேன்! வசு! ஆனால் பூபால் விஷயம் தெரிந்த பின் எல்லாம் விட்டுவிட்டேன் என்றவன் வசுந்தராவின் உடல் விறைப்புறுவதைக் கண்டு, ''அறியாப் பருவத்தில், ஒரு வேகத்தில் செய்த பிழைகள் என்று அவற்றை மன்னித்து விட்டுவிட முடியாதா, வசுந்தரா? பெரிய பிழைகள்தான் ஆனாலும்... '' என்று கவலையுடன் கேட்டான் கௌதமன்.



''அதில்லை... '' என்று சிரமத்துடனேயே பதிலிறுத்தினாள் வசுந்தரா. ''பூ.... பூபாலன்... அவன் உங்கள்... '' என்று மேலே சொல்ல மாட்டாமல் தடுமாறினாள் அவள்.

அன்பு இல்லத்தில் அறிய நேர்ந்த பல விவரங்களினால், கௌதமனின் இளவயதுப் பிழைகளை, ஓரளவு சிரமத்துடன்தான் என்றாலும் வசுந்தராவால் ஒதுக்க முடிந்தது.

ஆனால் பூபாலன் விஷயம் இன்னமும் மனதை உறுத்தியது. அதுவும், எல்லாவற்றையும் வெளிப்படையாகப் பேசும் இந்த நேரத்தில் கூட மறைப்பது என்றால் அவளால் தாங்க முடியவில்லை!

''என்ன? என்ன பூபால்? என்ன உங்கள்?'' என்று குழம்பியவனுக்குச் சட்டெனப் பொறி தட்டியது. ''அன்று கூட பூபால் பற்றி என்மேல் ஒரு குற்றம் சாட்டினாயில்லையா? என்னவோ பிள்ளையைத் தம்பியென்று.... என்று? அதை அப்போது திருப்பிக் கொடுக்கும் வீம்பில் இல்லாததைச் சொன்னாய் என்று நினைத்தேனே! சேச்சே! இதை எண்ணி இத்தனை நாள் மனம் குழம்பினாயா?'' என்று தலையசைத்தவன், அவளை நெருங்கி அமர்ந்து, அவள் முகவாயைப் பற்றி முகம் நிமிர்த்தி, ''பூபால் மெய்யாகவே என் தம்பிதான். வசும்மா, அம்மாவைத் தெரியும் அல்லவா? தாங்க மாட்டாமல் அப்பா ஆறுதல் தேடப் போன இடத்தில் உருவானவன். அப்படி வெளியிடத்தில் ஆறுதல் தேடுவதும், பிள்ளை உருவாகி விடுவதும் பெரிய தப்புதான், ஆனால் அந்தப் பெண் கருவுற்றதும் அப்பா திண்டாடிப் போனார். அவளையோ, குழந்தையையோ விடவும் அப்பாவுக்கு மனமில்லை. இங்கே அம்மா! அப்பா திணறித் திண்டாடிக் கொண்டு இருந்த போது, ஏதோ ஒரு தீர்வு போல அவள் இறந்து போனாள்.

''ஆனால் பூபாலை என்ன செய்வது? மறைத்தே வளர்க் கலாம் என்று அப்பா நினைத்தார். ஆனால் பிற்காலம் பாதிக் கப்படும் என்று நான்தான் அப்பாவுக்குத் தைரியம் சொல்லி அவனை வீட்டுக்கு எடுத்து வந்தேன். அவன் விஷயம் அம் மாவிற்கு அவமானம் தான். தெரியும், ஆனால் வேறுவழி யில்லை. குற்றக் குறுகுறுப்பும், பூபாலுடைய தாயாரின் நினைவுமாக அப்பாவும் விரைவிலேயே போய்விட்டார். ஆனால் பூபாலை நான் விடவில்லை... '' என்று விளக்கி முடித்தவன், வசுந்தராவின் முகத்தைக் கைகளில் ஏந்தி, ''ஆக, இதை மனதில் வைத்துக் கொண்டுதான், அவ்வப் போது என்னைக் குட்டிக் கொண்டே இருந்தாயோ? என் கண்மணி. அதற்கு இப்போது என்ன தண்டனை கொடுக்க லாம்?'' என்ற கேட்டு, அவள் நெற்றியில் மிருதுவாய் முத்த மிட்டான்.

ஒருதரம் அவளை இறுக அணைத்தவன், உடனே விட்டு விலகி எழுந்து, அவளையும் எழுப்பி விட்டான். ''இன்னும் எவ்வளவோ பேசுவேன். ஆனால் வெளியே மாம னார் காத்துக் கொண்டு இருக்கிறார். அவரது பொறுமை எல்லைமீறுமுன், போய் அவரிடம் ஆசிபெறலாம், வா!'' என்று அவள் கையைப் பற்றி கௌதமன் முன்னே செல்ல, புன்னகையும், நாணமுமாக அவனைப் பின் பற்றினாள் வசுந் தரா.

-❋-